சிவக்கவிமணி

# சி.கே. சுப்பிரமணிய முதலியார்



பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி

முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை - 6

# சிவக்கவிமணி
# சி.கே. சுப்பிரமணிய முதலியார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 6
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் (25-09-2003)


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Civak Kavimaṇi Ci.Kē. Cuppiramaṇiya Mutaliār** |
| Editors | : | Dr. S. Krishnamoorthy<br>Director<br>IITS, Taramani, Chennai - 600 113.<br>Dr. S. Sivakami<br>Associate Professor<br>IITS, Taramani, Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 498 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii +120 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty Five Only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Biographical & Critical Studies on C.K. Subramaniya Mudaliar |


---


கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் **சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

## அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது. வாரக்கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக்காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மை களில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்தி வந்த பெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவனங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **'தமிழறிஞர் வரிசை'** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த்தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இத்தகைய தொடர்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். இதனால் இத்தமிழறிஞர் வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல்

ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர் நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர்களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத் தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும். பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர்வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல்,மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர்வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொடர்ந்து நூலாக வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத் திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம் வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

இத்தமிழறிஞர் வரிசையின் ஆறாம் கருத்தரங்காக, **சி.கே. சுப்பிரமணிய முதலியார்** பற்றிய கருத்தரங்கு அமைகிறது. இக்கருத்தரங்கிற்கு அறுவர் கட்டுரை வழங்கியுள்ளனர். சி.கே.சு. என்ற உடனேயே பெரியபுராணம்தான் எல்லோருடைய நினைவிலும் வந்து நிற்கும். பெரியபுராணத்திற்குச் சி.கே.சு. எழுதிய உரை அவர்தம் சைவ சமயப் பற்றையும், பெரியபுராணத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த புலமையையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. சி.கே.சு. பெரியபுராணத்திற்கு உரை எழுதவில்லையென்றால் அதனைப் பக்தி உணர்வுடன் படித்துச் சுவைக்க இயலாது. சி.கே.சு.வைப் பற்றியும் அவர்தம் தமிழ்ப்பணி பற்றியும், சைவம் வளர்த்த அவர்தம் சமயத் தொண்டினைப் பற்றியும் இக்கட்டுரையாசிரியர்கள் மிகச்சிறப்பாக விளக்கிக் கூறியிருப்பது பாராட்டுக்குரியதாகும். சைவ உலகில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ள சி.கே.சு.வைப் பற்றி வெளிவரும் **சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார்** எனும் இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப்பெறும் என்பதில் ஐயமில்லை.

இத்தொடர் கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து சிறப்புடன் நடைபெற முழு முயற்சியுடன் செயல்பட்ட இலக்கியம் மற்றும் சுவடிப்புல இணைப் பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இக்கருத்தரங்கு சிறப்புடன் நடைபெற அனைத்து உதவிகளையும் செய்த நல் உள்ளங்களுக்கு நன்றி. இத்தொடர் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக்கம் பெற இசைவளித்த நிறுவனப் பதிப்புக்குழுவினர்க்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை
25-06-04

**இயக்குநர்**

# கட்டுரையாளர்

முனைவர் கோமதி சூரியமூர்த்தி
தமிழ்ப் பேராசிரியர், (ஓய்வு)
மதுரை

முனைவர் கா. சத்தியபாமா
விரிவுரையாளர்
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர் - 613 007

முனைவர் பெ. சுப்பிரமணியன்
இணைப்பேராசிரியர்,
அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழனி - 624 601

முனைவர் அரங்க சுப்பையா
இணைப்பேராசிரியர்
தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி
தஞ்சாவூர் - 613 007

முனைவர் மு.அ. மாணிக்கவேலு
முதுநிலை விரிவுரையாளர்
விவேகானந்தா கல்லூரி, சென்னை - 600 004

முனைவர் மு. முத்துவேலு
முதுநிலை விரிவுரையாளர்
அரசுக் கல்லூரி, நந்தனம், சென்னை - 600 035

# உள்ளே

வாழ்க்கை வரலாறு

- கா. சத்தியபாமா 1

சேக்கிழாரும் சி.கே.சு.வும்

- பெ. சுப்பிரமணியன் 19

பெரியபுராணப் பதிப்புப் பணிகள்

- அரங்க. சுப்பையா 34

பெரியபுராண உரைத்திறன் இலக்கிய இலக்கண நோக்கு

- மு.அ. மாணிக்கவேலு 43

சித்தாந்தப் புலமை

- கோமதி சூரியமூர்த்தி 63

சட்டப் புலமை

- மு. முத்துவேலு 97

# வாழ்க்கை வரலாறு

*கா. சத்தியபாமா*

சைவநெறி தழைத்தோங்கிய தமிழ் மண்ணில் பக்திநெறியைத் தழைக்கச் செய்த நாயன்மார்களைப் பாடியவர் சேக்கிழார் பெருமான். அச்சேக்கிழார் மரபில் தோன்றி, இருபதாம் நூற்றாண்டில் சைவசமய பக்திநெறியைப் பரப்பும் பணியில் தம் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட சான்றோருள் ஒருவர் சி.கே.சுப்பிரமணிய முதலியார். சிவபக்தியில் சிறந்து சேக்கிழார் பெருமானின் திருவருட் பேற்றால் பெரியபுராணத்திற்கு அரியபெரிய விரிவுரையைக் கண்டவர். கோவைநகர்க் கனி, சைவக் குலமணி, வித்துவமணி, திருத்தொண்டர் புராணமணி, சேக்கிழார்செய் சேவையினை மக்களுணர்ந் துய்யவழி காட்டுமணி, சிவக்கவிமணி என்று அறிஞர் பெருமக்களால் போற்றப்பட்டவர்.

## தோற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோவையில் மகா வித்துவானாகவும் வழக்கறிஞராகவும் அருட்புலவராகவும் விளங்கியவர் தவச்செல்வர் கந்தசாமி முதலியார். தொண்டை மண்டல மாங்காட்டிலிருந்து குடியேறிய கொண்டல் கட்டி குடி நெல்விளையார் மரபைச் சார்ந்தவர்; சிறந்த சொற்பொழிவாளர்; 1866இல் சைவ பிரசங்க சாலையைத் தோற்றுவித்துச் சிவப்பணியை மேற்கொண்டவர்; சிறந்த வள்ளல். இவர் தம் துணைவியார் வடிவம்மையார். இவர்களின் திருமகனாராக 20.02.1878ஆம் ஆண்டு சிவக்கவிமணி தோன்றினார். இவரது இயற்பெயர் சி.கே.சுப்பிரமணிய முதலியார்.

## கல்வி

சி.கே. சுப்பிரமணிய முதலியார் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தி லிருந்து கோவையில் குடியேறிய ஆசிரியர் வைத்தியலிங்கம் பிள்ளையிடம் கல்வி கற்றார். கோவையில் புகழ்பெற்று விளங்கிய டி.ஏ. இராமலிங்கம் செட்டியார், சி.எம். இராமச்சந்திரஞ் செட்டியார் ஆகியோர் இவருடன் பயின்றவர்கள். சி.கே.சு. கோவை அரசினர் உயர்நிலைப் பள்ளியிலும் அரசினர் இடைநிலைக் கலைக்கல்லூரி யிலும் பயின்றார். இவர் பயின்ற காலத்தில் எல்லா வகுப்புகளிலும் முதல் மாணவராகத் திகழ்ந்தார்.

இக்காலத்தில் இவருக்குத் தமிழ்க்கல்வியைச் சிறப்பாகப் புகட்டியவர் திருச்சிற்றம்பலம் பிள்ளையாவார். இவர் சிவஞான முனிவரிடம் கல்விகற்ற பரம்பரையைச் சேர்ந்தவர். சிவஞான முனிவரின் மாணவர் கச்சியப்பமுனிவர்; இவர் மாணவர் கந்தப்பையர்; இவர் மாணவர் சரவணப் பெருமாளையர்; இவர் மாணவர் சந்திரசேகரம் பிள்ளை; இவர் மாணவர் வித்துவான் கந்தசாமி முதலியார்; இவர் மாணவர் திருச்சிற்றம்பலம் பிள்ளை. தம் ஆசிரியரின் திருமகனார் என்னும் காரணமாகச் சி.கே.சு.விடம் திருச்சிற்றம்பலம் பிள்ளை தனியன்பு காட்டினார்.

சிவக்கவிமணி 1894 முதல் 1906 வரையில் திருச்சிற்றம்பலம் பிள்ளையிடம் தமிழ்ப்பாடம் கற்றார். "சேக்கிழார்" என்னும் தம் நூலில், "எனது மூதாதைகள் செய்த சிவபுண்ணியங்கள் காரணமாக எனக்கு வாய்த்த நற்றமிழாசிரியரான திரு பண்டித ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள் காற்கிழிருந்து இலக்கண இலக்கியங்கள் கற்கப் புகுந்த இளம்பிராயத்திற்றானே, அவரது பேருபகாரத்தின் பயனாகப் பெரிய புராணத்திலே என்னை அறியாமலே எனக்கு ஓர் ஆசையும் அன்பும் அற்புதமும் தோன்றி மேன்மேல் வளர்ந்து வருவதாயிற்று" (ப3) என்று தம் குருவின் கற்பித்தல் திறத்தைக் குறிப்பிடுகின்றார்.

கோவையில் இடைநிலைக் கல்லூரிப்படிப்பு வசதி மட்டுமே இருந்தமையால் மேற்படிப்புக்காகச் சென்னை அரசினர் மாநிலக் கல்லூரியில் சேர்ந்தார். பி.ஏ. வகுப்பில் சிறப்பாகவும் தமிழில் சென்னை மாநிலத்தில் முதல் மாணவராகவும் வெற்றி பெற்றார். தமிழில் முதன்மைத் தகுதி பெற்றமைக்காக இவருக்குப் "பிரான்க்லின்" பொற்பதக்கம் பரிசாகத் தரப்பட்டது. மேலும் மொழிபெயர்ப்புச் செய்தல், செய்யுள் இயற்றல், கட்டுரை வரைதல் முதலான பலவற்றிலும் பல பணப்பரிசுகளையும் வென்றார். இவர் கல்வி கற்றதை,

கல்லூரி சேர்ந்து கணிதபோ தகராம்
வாத்தியார் வைத்திய லிங்கம் பிள்ளாய்
உடனுறை மாணவ னாகிப் பயின்றனர்
தமிழ்மொழிப் பற்றால் தமிழினைச் சிறப்பாய்க்
கற்றிட வேண்டிக் கலைவல பண்டிதர்
திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்களை
அண்டித் தமிழ்க்கடல் அமுதைப் பருகி
ஐயம் திரிபறக் கற்றபின் சென்னை சென்
றரசினர் கல்லூரி யதனில் சேர்ந்து
பி.ஏ. வகுப்பைப் படித்து முடித்ததன்
இறுதித் தேர்வில் தமிழில் முதன்மை
பெற்றுத் தங்கப் பதக்கமும் பெற்றனர்

என்று பொள்ளாச்சிப் புலவர் அ.துரைசாமி பிள்ளை கவிதை நடையில் எடுத்தோதுவர்.

சிவக்கவிமணி 1917இல் பெரியபுராண வாசிப்பை முறையாகத் தொடங்கினார். 1918இல் திருப்போரூரில் ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவிற்குத் தலைவராக வந்த கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரின் பெரியபுராண உரையைக் கேட்டார். கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் ஆகமநெறி வழுவாது சிவபூசை செய்தும் பன்னிரு திருமுறைகளை இடையறாது பன்முறை ஓதியுணர்ந்தும் திருவருள் விளக்கம் பெற்றவர். அவர் பெரியபுராணச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் தேர்ச்சி பெற்றிருந்தார். நான்கு ஆண்டுகள் கோவையில் தங்கிப் பெரியபுராண விளக்கம் தந்த அப்பெரியாரிடத்தில் நேர்முகமாகப் பாடங்கேட்டுவந்த சிவக்கவிமணி, அவருடன் இருந்து பெரியபுராணக் கையேடு படித்து வந்தார். அக்காலத்தில் எடுத்த குறிப்புகள் பின்னர் விரிவானதொரு பெரியபுராண உரை வெளியிடுவதற்குப் பேருதவியாக விளங்கியது.

தில்லைச் சிவஞான தனிவாழ்வடிகள், இலக்கணம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் ஆகியோரிடத்தும் இவர் பாடம் பயின்றவர் என்று திருத்துறையூர் கு. ஆறுமுகநாயனார் குறிப்பிடுகின்றார்.

## இல்லறவாழ்க்கை

பி.ஏ. பட்டப் படிப்பிற்கு உழைத்து வந்த காலத்தில் சேலம் மாவட்டம் கங்கைவல்லிப் பெருஞ்செல்வர் கனகசபை முதலியாரின் செல்வி மீனாட்சியம்மையைத் திருமணம் செய்து கொண்டார். அரசினர் இடைநிலைக் கலைக் கல்லூரியில் பயின்ற காலத்தில் தந்தை சிவகதி அடைந்துவிட்டார். சிவக்கவிமணியின் திருமணத்திற்குப் பிறகு ஒருமாத காலத்திற்குள் அவர்தம் அன்னையாரும் சிவகதி யடைந்தார்கள். தம் குடும்பப் பொறுப்பை ஏற்க வேண்டிய சூழலில், அவர்தம் அன்னையாரின் தமக்கை கரூர் மீனாம்பாள் அம்மாள் குடும்பத்தைப் பேணி வந்தார். மீனாட்சியம்மை தானதர்மங்கள் புரிவதில் நாட்டமுடையவராக விளங்கினார். "வண்மை யுடைய முன்மனைவி வளர்பே ரறங்கள் பலசெய்தாள்" என்ற அ.சு. கணபதி பிள்ளை என்பாரின் கூற்றால் இது புலனாகும். ஊழ்வினைப் பயனாக மீனாட்சியம்மை சிவகதி அடைந்தார். தம் மனைவி இறந்த பின்னர், சிவக்கவிமணி அவ்வம்மையாரின் உறவினராகிய மீனாட்சி என்பாரை மணந்தார். இவர் விருந்தோம்பலில் சிறந்தவராக விளங்கினார். சி.கே.சு.வின் இரு

துணைவியரின் பெயர்களும் மீனாட்சி என்று அமைந்திருப்பது சுட்டத்தக்கது. இவருக்குப் பிள்ளைப் பேறில்லை.

## வழக்கறிஞர் தொழில்

சிவக்கவிமணி சி.கே.சு. தம் தந்தையார் கந்தசாமி முதலியாரைப் போலச் சட்டம் படித்துத் தேறி வழக்கறிஞராகி அறநெறி வழுவாது திறம்படத் தொழில் நடத்தியவர். அவர் வாழ்க்கையில் நடந்த பல்வேறு நிகழ்வுகள் இதற்குச் சான்று பகர்கின்றன.

பொள்ளாச்சி வட்டம் தென்சித்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. அது அவ்வூரின் பெருநிலக்கிழார்களாகிய சித்தூர் முதலியார்களின் குடும்பத்திற்குப் பாத்தியப்பட்ட சொந்தக் கோயிலாகும். இம்முதலியார்களின் குடும்பத்தின் முன்னோர்கள் குடும்பப் பாகப் பிரிவினை ஏற்பாடு செய்கின்ற காலத்தில் தங்கள் குடும்ப வழிபாட்டிற்காக இக்கோயிலை அமைத்து, ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரரைத் தங்களுடன் ஒரு பாகஸ்தராக வைத்துச் சாசனம் செய்தபடி கோயில் நடைமுறையில் நடந்து வருகிறது.

சி.கே.சு. இக்கோயில் சித்தூர் முதலியார்களின் குடும்பக் கோயில் என்று நீதிமன்றத்தில் வழக்கிட்டு வெற்றி பெற்றதுமன்றிக் கோயில் நடைமுறைத் திட்டத்தையும் ஒழுங்கு செய்து கொடுத்தார். அதன்பின் கோயில் திருப்பணிகளிலும் கும்பாபிஷேக நிகழ்ச்சி களிலும் பெரும்பங்கு எடுத்துக்கொண்டு சிறப்பித்தார்.

## சிவக்கவிமணியும் செக்கிழுத்த செம்மலும்

சி.கே.சு.வும், செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரம் பிள்ளையும் குடும்ப நண்பர்கள். வ.உ. சிதம்பரம் பிள்ளை சிறையில் இருந்த காலத்தில், சிறையில் நடத்தப்பட்ட முறைக்காகச் சிறையில் அரசியல் கலகங்கள் விளைந்தன. அப்பொழுது அரசினர் வன்மையாக நடந்து கொண்டனர். இதை வெளியாக்கும் வகையில் வ.உ.சி. கோயமுத்தூர் சிறையில் நடந்த நிகழ்வினைத் தம் சுயசரிதையின் இரண்டாம் பாகத்தில் குறிப்பிடுகின்றார்.

கோயமுத்தூர் சிறையில் வ.உ.சி. இருந்த காலத்தில், சிறைக்காவலரின் கொடுமைகளைக் கண்டு கொதித்துக் கைதிகள் அவரைத் தாக்க, சிதம்பரம் பிள்ளையிடத்து அன்பு பூண்ட மூன்று கைதிகள் தண்டிக்கப்பட்டனர். அவர்களுக்காக வாதாட, சிதம்பரம் பிள்ளை சி.கே.சு., ஸ்ரீநிவாஸன் ஆகியோரை நியமித்தார். இந்தச் செய்தியை,

சிறையுள் இருந்துயான் மறைவிலென் நண்பன்
தப்பறி யாதநற் சுப்பிர மணிய
வள்ளல் தனக்கு வரைந்தெடுத் தனுப்பி
எதிரிகள் டிபன்ஸை ஏற்று வக்கீலாய்
நடாத்தச் செய்தேன் நண்பனும் ஸ்ரீநி
வாஸ வள்ளலும் வக்கீலாய் நடாத்தினர்

என்று தம் சுயசரிதையில் (ப.125) குறிப்பிடுகின்றார் வ.உ.சி. அதன்பின்னர் அக்கைதிகளுக்கு ஒன்று முதல் இரண்டு வருடங்களுக்குக் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்ட பொழுது, மீண்டும் அவர்களுக்காக வாதாடி அப்பீல் செய்ய மேற்படி இருவர்க்கும் கடிதம் எழுதியுள்ளார்.

சிறையினை விடுத்த எதிரிகள் பலர்க்கும்
ஒன்றுமுதல் இரண்டு வருஷங் கடுங்காவல்
மேஜிஸ் டிரேட்டு விருப்பொடு வழங்கினன்
அப்பீல் செய்திடச் செப்பிய நண்பர்க்
கெழுதினேன் அவரும் ஈந்தனர் அப்பீல்

என்னும் வ.உ.சி. கவிதை இதற்குச் சான்று பகர்கின்றது.

வ.உ. சிதம்பரம் பிள்ளையும் சி.கே.சு.வும் நண்பர்கள் என்ற காரணத்தால் இருவரின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்த ஆங்கில அரசினர் சி.கே.சு. மீதும் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். தக்க சமயத்திற்காகக் காத்துக் கொண்டும் இருந்தனர். இந்நிலையில் 'ஆஷ்' கொலை வழக்கில் சிறைப்பட்ட நீலகண்ட பிரமச்சாரி தமக்கு, சி.கே.சு. செய்த உதவிகளைக் காவல் துறையினரிடம் தெரிவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். இதன் விளைவாகவும் திடீரென ஒருநாள் சி.கே.சு. இல்லம் காவல் துறையினரின் சோதனைக்கு உட்படுத்தப் பட்டது. நீதிமன்றத்தில் இருந்து சி.கே.சு. தம் இல்லத்திற்குத் திரும்புமுன், இல்லத்தில் இருந்த அரசியல் தொடர்பான கடிதங்களையெல்லாம் அவர் துணைவியார் எரித்துவிட்டார். சோதனையின் முடிவில், சில நூல்களை மட்டுமே காவல் துறையினர் கைப்பற்றிச் சென்றனர். வ.உ.சிதம்பரம்பிள்ளை கோயமுத்தூர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் சிலநாட்கள் கண்ணனூர் கணபதிப்பிள்ளையின் இல்லத்தில் தங்கியிருந்து பின்னர் சி.கே.சு.வைக் காண கோயமுத்தூர் சென்றார். இந்தச் செய்தியை வ.உ.சி. மகன்கள், வ.உ.சி. சுயசரிதையின் பின்னுரையில், "சிறையிருந்த காலைத் தமக்கு உறுதுணையாக விளங்கிய கோவை வழக்கறிஞர் சிவநேசச் செல்வர் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியாருக்கு நன்றி

தெரிவிக்கக் குடும்பத்துடன் கோவை சென்றார்" (ப.155) என்று குறிப்பிட்டுள்ளனர். பின்னரும் அவருக்கு நன்றியைத் தெரிவிக்கும் வகையில் வ.உ.சி. தம் இரண்டாவது மகனுக்குச் சுப்பிரமணியன் என்ற பெயரையும் தம் புதல்விக்கு அவரின் மனைவியான மீனாட்சியின் பெயரையும் சூட்டினார். இதனால் இவ்விருவரின் நட்பின் ஆழத்தை உணரலாம். சி.கே.சு.வின் பெயரைத் தாங்கிய வ.உ.சி. சுப்பிரமணியன் புகழ்பெற்ற எழுத்தாளராவார்.

## நூல்கள்

ஆங்கிலம் கற்ற மேதை யாகியும்
தீஞ்சுவைத் தமிழும் தெளிவுறத் தேர்ந்தோன்
அஞ்செழுத் தோதி ஓதிய அன்பினால்
நெஞ்சுநெக் குருகி நிற்கும் நேயன்

என்று அர. நரசிம்மனால் போற்றப்பட்ட சி.கே.சு. சைவமும் தமிழும் தழைக்கச் சலியாது உழைத்தவர். ஆழ்ந்த தெய்வீகக் கருத்துகளை அமைத்துப் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெருங்கருணையம்மை பிள்ளைத்தமிழ், கந்தபுராண போற்றிக் கலிவெண்பா, திருப்பேரூர் இரட்டை மணிமாலை, மருதங்கோவை முதலானவை செய்யுள் நிலையில் அமைந்தனவாகும். நீத்தார் பெருமை அல்லது ஸ்ரீமாணிக்கவாசகர், வாகீசர் அல்லது மெய்யுணர்தல், கருவூர்த்தேவர், சேக்கிழார், சேக்கிழாரும் சேயிழையார்களும், செம்மணித்திரள், அர்த்தநாரீசுவரர் அல்லது மாதிருக்கும் பாதியான், திருத்தொண்டர் புராணத்துள் முருகன் முதலான உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெருங்கருணையம்மை பிள்ளைத்தமிழ் தம் மனதைக் கொள்ளை கொண்டதை,

நற்சுப் பிரமணிய நாவலரே! கேட்டீரோ!
சொற்சுவைக்கோ! சைவத் துறைப்பொருட்கோ – முற்படவென்
னுள்ளத்தை யோகோ வுவகைகொள்ளை கொண்டதுங்கள்
பிள்ளைத் தமிழ்படித்த பின்

என்று வித்துவான் அ. வரதநஞ்சைய பிள்ளை எடுத்துரைக்கிறார். இவ்வாறு கற்போர் மனத்தைக் கவரும் வகையில் இப்பிள்ளைத்தமிழ் அமைந்துள்ளது.

இந்திய சாகித்திய அமைப்பின் ஏற்பே "சேக்கிழார் செம்மணித்திரள்" என்னும் நூலின் சிறப்பைப் புலப்படுத்தும்.

"சேக்கிழார்" நூல், சேக்கிழார் சுவாமிகளைப் பற்றியும் அவரது நூலைப் பற்றியும் சென்னைப் பல்கலைக்கழகத்தின் சார்பாகச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் 1930 ஆம் ஆண்டு ஜனவரி 30, 31, பிப்ரவரி 1 ஆகிய மூன்று நாட்கள் நிகழ்த்தப் பெற்ற தொடர் சொற்பொழிவாகும்.

சிவக்கவிமணியின் தன்னடக்கத்தையும் மறதியையும் சேக்கிழார் நூலின் ஆக்கியோன் முன்னுரையின் வழி அறிய முடிகிறது. "ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய அருட்பெரு நூலாகிய பெரியபுராணத்தையும், அந்நூலாசிரியராகிய அருட்பெருஞ் செல்வரைப் பற்றியும் பேசவும் எழுதவும் எனக்கு எட்டுணையும் தகுதியில்லை என்பது வெளிப்படை; அதனை நானும் அறிவேன்" (ப.2) என்றும், நூலைப் பற்றிக் குறிப்பிடுகையில், "இதில் பற்பல குற்றங்குறைகள் இருத்தல் இயல்பே, பற்பல இடங்களில் கருத்து வேற்றுமைகளுக்கும் இது இடம் கொடுக்கலாம். ஆயினும் சேக்கிழார் சுவாமிகளின் சேவடிகளில் செய்யும் பணிவிடையாகவும், என்னிலும் தாழ்ந்த மக்களுக்குப் பெரியபுராணத்தின் மாட்டும் சேக்கிழார் மாட்டும் அன்பு வளர்வதற்கு ஒரு கருவியாகவும் இருத்தற் பொருட்டே இக்காரியத்திலே புக நான் துணிந்தேன். பிழையுள்ளன பெரியோர் பொறுத்தருளி என்னை இகழாது ஏற்று கொள்வர் என்பது என் துணிபு" (ப.3) என்றும் குறிப்பிடுகின்றார்.

இவற்றையன்றி, "எமது ஸ்ரீ மெய்கண்ட சிவத்தின் அற்புதத் திருவாக்கு எப்போதும் என் உள்ளத்தில் நின்ற ஊக்கமே பாசத்தின் கோட்பட்டு அலையும் நாயினும் கடைபட்ட என்னையும் இதுபோன்ற அரிய சிவபுண்ணியங்களிலே புகுத்திவைக்கின்றது" (ப.3) என்றும் "சேக்கிழார் திருவடிப் பக்தியுள்ளவன் என்று சற்பாவனை செய்து பல நல் அன்பர்களும், பெரியோர்களும், சங்கங்களும் பிறரும் தந்த ஆதரவின் பயனாகவே இம்முயற்சி இறைவனருளால் எனக்குக் கைகூடிற்று" (ப.4) என்றும் கூறுகிறார். இவையனைத்தும் சிவக்கவிமணியின் தன்னடக்கத்தைப் புலப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

மேலும் "சேக்கிழார்" நூலின் முன்னுரையில் தம்முடைய தாமதகுணம் குறித்தும் மறதி குறித்தும் "...இவற்றை நிகழ்த்தும் முன்பே எழுதி ஒப்புவிக்க வேண்டிய நியதியிருந்தும், எனது தாமத குணத்தினாலே அவ்வாறு செய்யாமல் சிற்சில குறிப்புகளைக் குறித்துக் கொண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினேன்" (ப.1) என்று குறிப்பிடும் சி.கே.சு. "முதல் நாள் பிரசங்கம் இப்பொழுது பதிந்துள்ளதை விட விரிவாகவும் ஏறக்குறைய அந்நாள் பேசியது

போன்றும் எழுதி வைத்திருந்த பகுதியின் தாள்கள் ஓரிடத்து வைத்து மறந்துவிட்டேன். இரண்டாவது மூன்றாவது நாட்களின் பிரசங்கங்களை எழுதினபின் அதனைத் தேடி அகப்படாமையான், மீளவும் ஒருமுறை முதல்நாள் பிரசங்கத்தைச் சுருக்கமாக எழுதி அச்சிற்குக் கொடுத்தேன். இதுவே பிரசங்கங்களின் அளவிற்கானதும் ஏற்றத் தாழ்ச்சிக்குக் காரணம்" (ப.1) என்று தன் மறதியையும் சுட்டுகின்றார்.

சி.கே.சு. பதினோராம் திருமுறையில் அமைந்துள்ள க்ஷேத்திர திருவெண்பா, பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணம் ஆகிய நூல்களுக்கு உரையெழுதியுள்ளார். இவருடைய நூல்கள் அனைத்திற்கும் மணிமகுடமாக விளங்குவது இப்பெரியபுராண உரையாகும்.

> வள்ளுவர்சீ ரன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
> தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை – ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாந் தரம்

என்று உலகம் போற்றும் உயர் தனித் தண்டமிழ்ச் செம்மொழியில் உள்ள நன்னூல்கள் ஆறு என்பார் சைவ சந்தானக் குரவர் ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியார். அந்நூல்களுள் ஒன்றாக விளங்கும் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவராகிய சேக்கிழாரின் பெரியபுராணத்திற்கு நுட்பமும் செறிவும் மிக்க உரையைக் கண்டவர் சி.கே.சு.

> போற்றுதிருத் தொண்டர் புராணத்தின் பேருரையை
> வேற்றுமை இன்றி விரித்துரைத்தான் நீற்றணிசெய்
> கோவையுறை சுப்ரமணிக் கோமான் குறுமுனியாத்
> தேவைநிகர் அண்ணல் சிறந்து

என்று இவ்வுரைச் சிறப்பைக் கூறுவார் திருமுருக கிருபானந்த வாரியார். திருத்தொண்டர் புராணத்திற்கு அரும்பத உரையும் குறிப்புரையும் மட்டும் வெளிவந்திருந்த நாளில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் எழுதப்பட்ட உரை காரைக்கால் அம்மையார் புராணம்வரை மட்டுமே கிடைத்த நிலையில் பெரியபுராணம் முழுமைக்கும் உரை எழுதிய தனித்தன்மையுடையவர் சி.கே.சு. என்பதைச் செட்டிநாடு இதழ் (29.4.54) எடுத்துரைக்கிறது. ஆகவே பெரியபுராணம் முழுமைக்கும் முதன்முதலில் உரைகண்டவர் என்னும் பெருமைக்குரியவராக விளங்குகிறார். சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் இவருடைய உரையின் சிறப்பு நோக்கி,

"சிவக்கவிமணியின் பேருரை சேக்கிழார் சுவாமிகளது ஆழ்ந்த தெய்வீகக் கருத்துக்களை அகழ்ந்தெடுத்த பெரியதோர் அருட்புதையலாக அமைந்திருக்கிறது. அதைச் சைவ சமயத்தின் கலைக்களஞ்சிய மெனலாம்" என நூல் அரங்கேற்றத் தலைமை யுரையில் எடுத்துரைப்பர்.

பெரியபுராணப் பேருரை 1935 ஆம் ஆண்டு முதல் இதழ்களாக வெளிவரத் தொடங்கியது. முதல் இதழ் 5.6.1935 இல் சேக்கிழார் திருநாளன்று தில்லையில் ஆயிரங்கால் மண்டபத்தில் வெளியிடப்பட்டது. "சிவக்கவிமணி அவர்களின் பெரியபுராணம் பேருரை உயர்ந்த காகிதத்தில் 160 பக்கங்கள் கொண்டுள்ளது. நாற்பத்து நாலு சஞ்சிகைகளையும் ஆசிரியர் ஏழு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டுள்ளார். கடந்த பத்தொன்பது ஆண்டுகளாகச் சிவக்கவிமணி அவர்கள் இப்பேருரை வெளியீட்டில் ஈடுபட்டுள்ளார்கள்" எனப் பூ. ஆலால சுந்தரம் கல்கி இதழில் (05.06.1954) எழுதியுள்ளார்.

சிவக்கவிமணியைத் திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகரோடு ஒப்பிட்டு,

> வள்ளுவர்நூல் கற்பதற்கு வாய்த்தபரி மேலழகர்
> தெள்ளுரையை நாடும் திறம்போல. - வள்ளலவர்
> சேக்கிழார் நூல்கற்க சி.கே.எஸ். சீருரையை
> நோக்குவார் என்றே நுவல்.

என்று போற்றுகிறார் திருப்பரங்குன்றம் திருவாசகமணி திரு கே.எம். பாலசுப்பிரமணியம்.

திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், "பேருரை அளவிறந்த விரிவுடையது போல் தோன்றினாலும் அஃதோர் விரிவுரையாக மட்டும் அமையாமல் ஆராய்ச்சி, வரலாறு, கல்வெட்டு, ஏனைத் திருமுறைத் திருப்பாட்டுகளின் குறிப்புரை, அகச்சான்று, புறச்சான்று, அறிவுறுத்தும் திருப்பாட்டுகள், பல்வேறு திருக்கோயில்கள், நாயன்மார் முதலியோரின் நிழலோவியங்கள் இன்னும்பல இன்றியமையாச் சிறப்புகள் பலவும் அறிவுறுத்தும் அருள்நிறை கருவூலமாக அமைந்துள்ளது" (7ம் பகுதி, பிற்சேர்க்கை ப.67) எனப் பாராட்டுகின்றது. சுதேசமித்திரன் (10.5.54) அவர்தம் உரைச்சிறப்பை, "பொருள் இலக்கிய நுணுக்கம், இலக்கணப் பொருத்தம், சமய நோக்கு, மேற்கோள் காட்டல் முதலிய அரிய முறைகளைக் கையாண்டு உரையெழுதி யுள்ளார்" என்று எடுத்துரைக்கும்.

திருத்தொண்டர் புராணப் பேருரையைத் தொகுத்து விரிவுரையாக்கிய சி.கே.சு., பின்னாளில் சைவ அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க அதனைச் சுருக்கியும் எழுதிக் கொடுத்தார். அவை சிறுசிறு நூல்களாகப் பல பகுதிகளாக வெளிவந்தன. அவற்றில் "திருவருட் செல்வரின் சரிதமும் கற்பனையும்" முதல் பகுதியாக வெளிவந்தது.

இவ்வாறாக, சி.கே.சு.வின் பெரியபுராண உரை அவருடைய சைவசமயப்பணியின் ஒரு பகுதியாக விளங்கியது அவருடைய பெருமைக்கு மேலும் பெருமை சேர்த்தது என்றால் மிகையாகாது.

சிவக்கவிமணி தம் வரலாற்றை "ஒரு பித்தனின் சுயசரிதம்" என்ற நூலாக வரைந்துள்ளார். 270 பக்கங்களில் கையெழுத்துப் பிரதியாக உள்ள இந்நூல் இன்னும் அச்சாகவில்லை. சிவக்கவிமணியால் 1956 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இந்நூலின் தாள்கள் மிகவும் மலினமடைந்துள்ளன எனச் சிவக்கவிமணியின் உறவினரான சி.எஸ். கண்ணாயிரம் தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல், அச்சுநூலாக வெளிவரின் சிவக்கவிமணியின் வரலாற்றை அவர் வாயிலாகத் தெரிந்து கொள்ள நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

### சமயப்பணிகள்

நகராட்சி, கோயில் குழு போன்றவற்றில் பணிகள் செய்த சி.கே.சு. சைவ சமயப்பணிக்காகத் தம் வாழ்நாளை முற்றிலுமாக அர்ப்பணித்தவர். பன்னிரு திருமுறைகளில் ஒருபகுதியை நாளும் கற்பித்து ஓராண்டில் முழுதும் முடிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். கோவையில் அரசுப்பணி புரிந்த தற்காலத்துப் பெரியபுராண வகுப்பு நடத்துபவருமாகிய பி.எம். நாயனார் அவ்வாறு கற்றவர்களில் ஒருவர்.

சென்னையில் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், சைவப்பெரியார் சச்சிதானந்தம் பிள்ளை, மா.பாலசுப்பிரமணிய முதலியார், அ. சோமசுந்தரம் செட்டியார், க.அரங்கசாமிமுதலியார், நல்.முருகேச முதலியார், நரா. முருகவேள் ஆகியோரிடத்து நட்புறவுபூண்டவர். பெரியபுராண முதற்பதிப்பு வெளியிடப்பட்டபொழுது அச்சு வேலையில் பொறுப்பேற்றவரும் தற்காலத்துச் சமாசச் செயலாளர்களில் ஒருவராகிய மு. நாராயணசாமி முதலியாரோடு நெருங்கிய நட்பு உடையவராக விளங்கினார் என்று சிவக்கவிமணியின் நண்பர் ஜி.எம். முத்துசாமிப் பிள்ளை குறிப்பிடுகின்றார்.

கோவையில் சொந்தத்தில் ஒரு பெரிய தனிக்கட்டடம் கட்டி, அதில் தம் தந்தையார் தொடங்கி வைத்த சைவச் சொற்பொழிவுச் சாலையும் தம் ஆசிரியர் தொடங்கிய கோவைத் தமிழ்ச் சங்கமும் தொடர்ந்து இயங்கிவர இவர் வழி வகுத்தார். தங்கள் ஓய்வு நேரங்களில் இதில் தமிழ்மொழி பயின்று புலவர்களாகத் திகழ்ந்தவர் பலர். மற்றும் இங்குப் பேசப் பழகிச் சொற்பொழிவாளர்களாகப் புகழ் பெற்றவர் பலர். இங்குச் சாத்திர வகுப்புகள், புராண விரிவுரைகள் ஆகியவை தொடர்ந்து நடைபெற்று வந்தன.

இவருடைய பொதுப்பணி ஈடுபாடு குறித்தும் சமயப் பணிகளைப் பற்றியும் குறிப்பிடும் பொழுது,

> **வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்**
> **தாழ்வெனும் தன்மை யோடும் சமயமாம் சமயம் சாரும்**
> **ஊழ்பெறல் அரிது சால உயர்சிவ ஞானத் தாலே**
> **போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற் றாரே**

எனக் கூறப்பட்டுள்ளவாறு வாழ்க்கை நடத்துவதற்குப் போதுமான அளவில் செல்வம் ஈட்டி, ஆடம்பர வாழ்க்கையை வெறுத்துச் சுத்த சைவச் சார்பு கொண்டார். தாம் அடைந்திருந்த பணப் பரிசுகளை யெல்லாம் தமிழாசிரியர் திருச்சிற்றம்பலம் பிள்ளை இயற்றிய மாணிக்கவாசகர் என்னும் நூலை வெளியிடுவதற்குப் பயன் படுத்தினார் என்கிறார் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியாக விளங்கிய வித்துவான் ஜி.எம். முத்துசாமி பிள்ளை.

தம் சைவசமயப் பணிகளின் காரணமாகச் சைவப் பெரியோர்களால், "சைவ உலகப் பரோபகாரி" என்று போற்றப்பட்ட சிவக்கவிமணி தம் நண்பர் சி.எம். இராமச்சந்திர செட்டியாரோடு இணைந்து சமயப்பணியாற்றினார். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளாலும் மறைமலை அடிகளாலும் தொடங்கப்பெற்ற சைவ சித்தாந்தமகாசமாசத்திடம் இருவரும் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். 1938, 1947 ஆம் ஆண்டுகளில் கோவையில் சைவ சித்தாந்த மகாசமாச ஆண்டு விழாக்களில் இருவரும் இணைந்து பணியாற்றினர். சி.கே.சு. சைவசமய நெறியின்படி வாழ்க்கையை நடத்தியவர்கள். இளைஞர்கள் மனம்கொள்ளும் வகையில் பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி மாணவர் அருள்நெறி மன்றத்தினர் இதனைச்,

> சாந்தலிங்க சாமி தமிழ்க்கல்லூ ரிக்கன்பாற்
> போந்திளைஞர் கொள்ளஅறம் போதித்துத்- தீந்தமிழின்
> இன்சுவையை யூட்டும் இயற்கப் பிரமணியார்
> பொன்பொழிந்து நீள்க புகழ்

என்று போற்றுகின்றனர். மேலும் பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் வாரவழிவாடு நடத்தி வந்தார்.

> மன்னுதிருப் பேரூர் மணிவா சகமன்றம்
> துன்னுதொடக் கப்பள்ளி தோயிளைஞர்- பன்னுகுழு
> வாரவழி பாட்டுவிழா மாண்புறந டத்திவரும்
> சீரமைந்த பண்பாட் டினன்

என்று பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமட மாணிக்க வாசகர் மன்ற மாணவர் இதனை எடுத்தோதுகின்றனர்.

இப்பணிகளுக்கிடையில் 1922 முதல் 1925 வரை கோவை நகரசபை உறுப்பினராகவும் துணைத்தலைவராகவும் பணியாற்றினார். 1926 முதல் 29 வரை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழி ஆணையராகவும் விள்ங்கினார்.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் திருமுறை ஓதிவரும் சைவக் குலமணி சிவக்கவிமணி, கோவை மாநகரில் சிறுவர் சிறுமியர் தமிழ்மறை ஓதுமுறை கற்றுச் சிவனடி மறக்காத சிந்தையராகத் திகழ வேண்டும் என்ற நோக்கில் தேவாரப்பாடசாலை ஒன்றைத் தம் இல்லத்திலேயே நிறுவினார். இளைஞர்களுக்கும் சிறுவர்க்குமன்றி மாணவர்களுக்கும் முறையான பண்முறையில் தேவாரப் பயிற்சியளித்தார். தூத்துக்குடி சித்தாந்த சபைக்கு மூன்றாண்டு தலைவராகவும் இருந்தார்.

மேலைச் சிதம்பரமாகிய பேரூர் பட்டீசுரப் பெருமான் கோயிலுக்குத் திருப்பணிகள் பலவற்றைச் செய்தார். சித்திரைப் பெருவிழாவாகிய திருத்தேர் விழாவைச் சரசம்பலவாணர்க்குச் செய்தார். அதிகார நந்தி சேவை திருமுறைவிழா, சண்டேசுவரர் விழா, பட்டீசரப் பெருமானுக்குச் செய்யும் நாற்று நடவு விழா முதலான விழாக்கள் செவ்வனே நடக்கப் பேருதவிப் புரிந்தார். பங்குனிப் பெருவிழாவில் பெரும்பங்கு கொண்டு பத்து நாட்களிலும் தேவாரப் பாராயணம் , அடியார்க்கு அமுதளித்தல், கண்ணப்ப நாயனார், சேக்கிழார் நாயனார் குரு பூசைகள் செய்தல் முதலானவற்றைத் தம் கடமைகளாகச் செய்து வந்தார். பங்குனியில் பேரூர் நடராசப் பெருமானை எழுந்தருளச் செய்ய ஊர்தித் திருப்பணி செய்தார். இதனைப் பேரூர் பட்டீசுவரர் தேவஸ்தான ஓதுவார் பி.எஸ். நாகராச ஓதுவார் எடுத்தோதுகிறார்.

தம் அரிய நண்பர் திவான்பகதூர் சி.எஸ். இரத்தின சபாபதி முதலியார் கோவையில் இரத்தின விநாயகர் ஆலயம் அமைக்கப்

பெருந்துணையாக விளங்கினார். கோனியம்மன் கோயிலுக்கும் திருப்பணிகள் செய்தார்.

*அறநிலை கழகத் தமர்ந்து பற்பல*
*அறநிலை யங்களைத் திறம்பட நடத்தியும்*
*தேவகோட் டங்களைத் திருத்தி யமைத்தும்*

எனப் பல்வகைப் பணிகளைச் செய்ததைப் பொள்ளாச்சிப் புலவர் அ.துரைசாமி பிள்ளை குறிப்பிடுகிறார்.

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் முக்கியமான திருக்கோயில் களுக்குத் தம் குடும்பத்தினரோடு பயணம் மேற்கொண்டார். பல பெருங்கோயில்களின் குடமுழுக்கு விழாக்கள் இவர் மேற்பார்வையில் நடைபெற்றன. பல அறக்கட்டளைகளுக்குத் தலைமையேற்றார். மலைநாட்டுத் திருவஞ்சைக் களத்தில் ஆண்டுதோறும் சுந்தரர், சேரமான் பெருமாள் நாயனாரோடு கயிலை அடைந்ததைக் குறித்துக் குருபூசைகள் நிகழ்த்தி வந்தார்.

தம் இல்லத்தில் பலரைத் தங்க வைத்து அவர்களுக்கு சமயக்கல்வி பயிற்றுவித்தார். அவர்களுள் அக்காலத்தில் ஞானசம்பந்தம் என்று பெயர்தாங்கியவரும் இப்பொழுது காஞ்சிபுரம் ஞானப்பிரகாச தேசிக ஆதீனத்தின் 230ஆம் மகாசந்நிதானமாக விளங்குபவரும் ஒருவர்.

சைவமும் தமிழும் வளர்க்கும் சங்கங்களின் அழைப்பை ஏற்றுத் தலைமைதாங்கியும் சொற்பொழிவாற்றியும் தம் சமயப்பணியை இடைவிடாது செய்து வந்தார். 1939ஆம் ஆண்டில் குன்றக்குடியில் சைவ சித்தாந்த மகாசமாச 34ஆம் ஆண்டு விழா நடைபெற்றபொழுது, அதற்குத் தலைமையேற்றுச் சிறந்த விரிவுரையாற்றினார். பேரூரில் சாந்தலிங்க பெருமான் குருபூசைப் பெருவிழாவின் சத்வித்யா சன்மார்க்க சங்கப் பேரவையில் சேர்ந்து சொற்பொழிவுகள் பலவற்றை நிகழ்த்தினார்.

*அன்பு சிவமிரண் டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே*

என்னும் பாடலின் கொள்கைக்கேற்பச் சிவக்கவிமணி வாழ்க்கையை மேற்கொண்டார் எனக் கூறுகிறார் வித்துவான் ஜி.எம். முத்துசாமி பிள்ளை.

தன்னலமற்ற சமயப்பணியைப் மேற்கொண்டு வாழ்ந்தவர் சிவக்கவிமணி. அவர் வாழ்வில் நடந்த பல நிகழ்வுகள் இதற்குச் சான்றளிப்பன. சிவக்கவிமணி சேக்கிழார் பெருமான் மீது கொண்ட பெருவிருப்பின் காரணமாக, அப்பெருமானுக்குத் திருவுரு ஒன்று எடுக்க உள்ளம் கொண்டார். திருப்பேரூர் பட்டீசுரப்பெருமான் கோயிலில் அத்திருவுருவை அமைத்து வழிபாடு செய்யப்பெறல் வேண்டும் என்பது அவரது பேரவா. அத்திருவுருவத்தை வார்க்கும்படி ஏற்பாடு செய்த பொழுது அந்த வார்ப்பில் தங்கம் சிறிதளவு சேர்க்கப்பெறல் வேண்டுமென்று தெரிவித்திருந்த சமயம், சிவக்கவிமணி தமது கழுத்தில் சங்கிலியுடன் இருந்த ஒரு தங்கப்பதக்கத்தைக் கழற்றிக் கொடுத்துச் சேர்த்துக் கொள்ளும்படி செய்திருக்கிறார். அத் தங்கப்பதக்கம் சிவக்கவிமணிக்குப் பி.ஏ. தேர்வில் தமிழில் முதலாவதாகத் தேறியமைக்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் பரிசாக வழங்கப் பெற்றது.

தம் வாழ்நாள் முழுவதும் போற்றிவைக்க வேண்டியவற்றுள் ஒன்றான அப்பொற்பதக்கத்தைத் தாம் போற்றிய சேக்கிழார் பெருமானுக்கு முதல்காணிக்கையாக அர்ப்பணம் செய்திருக்கிறார் என்றால் சேக்கிழாரிடம் கொண்டுள்ள பற்று தெற்றெனப் புலனாகும். மதுரை திருவருள் தவயோகி சோமசுந்தர தேசிய பரமாச்சாரிய சுவாமிகள், பெரியபுராணப் பேருரை நூல் அரங்கேற்றத் தலைமையுரை வாயிலாக இந்நிகழ்வு குறித்து அறியமுடிகிறது.

இச்செய்தியினும் சற்று மாறுபட்ட செய்தியை வித்துவான் ஜி.எம். முத்துசாமி பிள்ளை, "அருமையாகத் தாம் பெற்ற பொற்பதக்கத்தைப் பேரூர் பட்டீச்சுவரர் ஆலய குடமுழுக்கு விழாவில் மருந்து சாத்தும்போது நவமணிகளோடு சேர்த்தி விட்டார்" (ப.206) என்று சிவக்கவிமணி நூற்றாண்டு விழா கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

சிவக்கவிமணியின் பொதுநலத் தொண்டுகளாலும் சமயப்பணிகளாலும் ஈர்க்கப்பட்ட மக்கள் அவர் மீது பெருமதிப்பு கொண்டிருந்தனர். அவர்க்குத் திருவிழாக்களிலும் சமயப் பேரவைகளிலும் மக்கள் அளித்த வரவேற்புகளும் பொன்னாடைகளும் தக்க சான்றுகளாகும். பெரியபுராண அச்சு நிறைவுவிழா அரங்கேற்றத்தின் போது பலர் பல பரிசுகள் வழங்கினர். சீர்காழி எம்.டி. குழந்தைவேல் செட்டியார் ஒரு பெரிய வெள்ளிக் குத்துவிளக்கு வழங்கினார். சேவு.மே. மெய்யப்ப செட்டியார் தாம் பாராயணம் செய்து வந்த பெரியபுராண நூலுக்குப் பொன் கவசமிட்டு அளித்தார். அது ஏறத்தாழ இருபது பவுன் பொன் மதிப்புடையது. இவையும்

பேரூர் பட்டீசுவரர் கோயிலில் இருந்து வரப்பெற்ற சிறிய பரிவட்டப் பட்டும் மட்டுமே அவர்கள் நினைவாகப் பராமரிக்கப் பெற்று வருகின்றன.

சீர்காழி சி. சுப்பராய முதலியார் அளித்த பொற்பதக்கம் சிவக்கவிமணி துணைவியாரின் பொற்சங்கிலியில் கோத்துப் பேரூர் ஸ்ரீ சிவகாமி அம்மனுக்குச் சாத்தப்பட்டது. மற்ற பொன்னாடைகள் அனைத்தையுமே தேவார ஆசிரியர்கள், தமிழ்ப்புலவர்கள், சமயப்பற்றுள்ள பெண்மணிகள் ஆகியோருக்கு அவ்வப்பொழுது மனமுவந்து அளித்து வந்தார். ஏழைகள் பலருக்கும் தொடர்ந்துப் பணஉதவிகள் செய்து வந்தார்கள்.

பேரூர்ப் பட்டீசுவரர் ஆலயத்தில் மார்கழித் திருவாதிரை, பங்குனி உத்திரம் விழாக்கள், பூத சிம்ம வாகனக் கட்டளைகள் ஆகியவற்றை 137 ஆண்டுகளுக்கு முன்னர்ச் சிவக்கவிமணியின் தந்தையார் தொடங்கியவாறும் சிவக்கவிமணி நடத்தியவாறும் அவரின் மருமகன் சி.சு. கண்ணாயிரம் கவனித்து வருகிறார்.

## பட்டங்கள்

சைவ சமயத்திற்குச் சி.கே.சு. ஆற்றிய பணிகள் கருதி அவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. 1940ஆம் ஆண்டில் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் இவருக்குச் "சிவக்கவிமணி" என்னும் பட்டம் அளித்து அதைச் செப்புப்பட்டயமாகத் தந்ததில் இருந்து இவர் "சிவக்கவிமணி" என அழைக்கப்பெற்றார். 1948 ஆம் ஆண்டில் பெரியபுராணம் உரை எழுதி முடித்த நிறைவு விழாவும் 1954ஆம் ஆண்டில் அதை அச்சிட்டு முடித்த நிறைவு விழாவும் தில்லையில் நடைபெற்றன. அச்சிட்டு முடித்த நிறைவு விழாவிற்கு மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனத் தலைவர் தலைமை தாங்கினார். பின்னர் ஆதீனத் திருமடத்தில் நடைபெற்ற திருஞான சம்பந்தர் குருபூசையின் போது, இவருக்குத் "திருமுறை ஞான பாநு" என்னும் சிறப்புப்பட்டம் அளிக்கப்பெற்றது.

## பிற்கால வாழ்க்கை

சிவக்கவிமணி தம் வாழ்க்கையின் பிற்பகுதியில் அரசியல், நகராட்சி ஆகிய துறைகளில் தம் பணிகளைக் குறைத்துக் கொண்டு வந்து பின்னர் அவற்றிலிருந்து முற்றிலுமாகத் தம்மை விடுவித்துக் கொண்டு தம்வாழ்நாள் முழுவதையும் சமயத்துறையில் பயன்படுத்தினார். பின்னர்த் தாம் முதுமைப்பருவம் அடைந்து வந்ததை முன்னிட்டுத் தாம் தலைமை தாங்கிவந்த அறக்கட்டளை

களின் பொறுப்பை ஆங்காங்கே தக்கவர்களிடம் சிவக்கவிமணி ஒப்புவித்து விட்டார். அவர்தம் அறுபானாண்டு விழா திருக்கடவூரிலும் எழுபானண்டு விழா திருப்பேரூரிலும் நிகழ்ந்தன.

சிவக்கவிமணியின் இரண்டாவது மனைவியார் 1956இல் சிவபதம் அடைந்தார். அதன் பின்னர் அவருடைய தம்பி இராசரத்தின முதலியாரின் புதல்வி மங்கையர்க்கரசியைத் தம் வளர்ப்பு மகளாக ஆதரித்துத் தாய் தந்தையரை இழந்த அம்மகளை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரைச் சார்ந்த சின்னதாராபுரத்தில் வாழ்ந்து வந்த நிலக்கிழார் சி.சுப்ரமணிய முதலியார் மைந்தர் திரு. சி.சு. கண்ணாயிரத்திற்குத் திருமணம் செய்து கொடுத்தார். இவர்களின் குடும்பச் சொத்தின் பொறுப்பு மட்டுமே கண்ணாயிரம் வசம் உள்ளது. இச்சொத்தில் பேரூரில் உள்ள 13 ஏக்கர் ஒரு போக நஞ்சை நிலமும், கோவையில் உள்ள ஒரு வீடும் பேரூரில் தெய்வ வழிபாடு செய்யும்போது தங்குவதற்கென அமைந்த ஒரு சிறு வீடும் அடங்கியுள்ளன. தாசில்தாராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற சி.சு. கண்ணாயிரம் தற்பொழுது கோவையில் உள்ள சேக்கிழார் இல்லம் என்ற இல்லத்தில் வசித்து வருகிறார்.

## துறவு மேற்கொள்ளல்

இல்லறத்தில் இருந்தகாலத்தில் அகத்துறவு பூண்டு வாழ்ந்த சிவக்கவிமணி சிதம்பரம் முத்துக்குமார குருக்களால் தீட்சை பெற்றவர். 1958ஆம் ஆண்டு மதுரைத் திருஞான சம்பந்த ஆதீனத்தின் கல்லாடை புனைந்து துறவுபூண்டு "ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்" என்ற பெயரைத் தாங்கிக் கோவையில் தவம் மேற்கொண்டு வாழ்ந்தார்கள். இந்நிலையிலும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார், நாகர்கோயிலில் 1958ஆம் ஆண்டில் இவர் தமிழுக்குச் செய்த அரும்பணிக்காக ஒரு வெள்ளிக்கேடயம் கொடுத்ததோடு அல்லாமல் அந்நாள் மைய அரசின் கல்வி அமைச்சர், டாக்டர் ஹுமாயூன் கபீர் அவர்களைக் கொண்டு பாராட்டும் நிகழச் செய்தார்கள். 1958ஆம் ஆண்டு திருமயிலத்தில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாசத்தின் ஐம்பத்து மூன்றாம் ஆண்டு விழாவில் சுவாமிகள் கலந்து கொண்டு ஒப்பற்ற முறையில் அருளுரை ஆற்றினார்.

## மறைவு

தென்மொழிக் கோரெல்லை; சித்தாந்த சாகரத் தெள்ளமுதம்;
இன்மொழி மாமழை; மெய்ச்சுவை நாட்டும் இறைக்குரிசில்;
முன்மொழி பேரைப்பட் டீசர்க் குருகும் முழுமனத்தோன்,
பன்மொழி யென்தந்தை யென்னோற் றனன்எனும் பண்பினனே

என்று மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும் கோவை அரசினர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதருமாகிய திரு. அ. கந்தசாமிப்பிள்ளை அவர்களால் போற்றப்பட்ட, ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகளாகச் சிவ சிந்தனையிலேயே வாழ்ந்து வந்த சிவக்கவிமணி தாம் திருநாவுக்கரசு நாயனார் வயதையும் தாண்டிவிட்டதாகக் கூறிக்கொள்வதுண்டு. அன்னார் 1961 ஆண்டு சனவரி மாதம் 24ஆம் தேதி தைமாதம் செவ்வாய்க் கிழமை பரணி நாளில் தம் எண்பத்து மூன்றாம் அகவையில் திருப்பேரூரில் சிவபதம் அடைந்தார். அவர் விருப்பத்திற்கேற்ப அவர்தம் உடல் பேரூர் மண்ணில் சமாதி செய்யப்பட்டது. ஆண்டுதோறும் உரிய தேதியில் முறைப்படி குருபூசை நடத்தப்பெற்று மகேசுவர பூசையும் மேற்கொள்ளப் பெற்று வருகிறது. அவர்தம் பூதவுடல் இப்புவியை விட்டு மறைந்து போனாலும் அவர்தம் புகழுடல் இன்றும் என்றும் நிலைத்திருக்கும்.

திப்பியக் கவிஞர் சேக்கிழார் பெருமான்
திருத்தொண்டர் புராணநூற் சிறப்பை
இப்புவிப் பரப்பற் கென்றேதம் வாழ்நாள்
எலாம்இனி துழைத்தபே ரறிஞர்!
சுப்பிர மணியர்! சிவக்கவி மணியர்!
சம்பந்த சரணராம் தூயோர்!
நற்பெரும் சைவச் செந்தமிழ்ச் சான்றோர்!
நலம்எலாம் போற்றிநாம் உய்வாம்

ந.ரா. முருகவேள்

## துணை நூல்கள்


1. சேக்கிழார், சி.கே.சுப்பிரமணிய முதலியார், சாது அச்சுக்கூடம், சென்னை, முதற்பதிப்பு 1933.

2. திருத்தொண்டர் புராணம், சி.கே.சுப்பிரமணிய முதலியார் (உரை) கோவைத் தமிழ்ச்சங்கம், கோயமுத்தூர், இரண்டாம் பதிப்பு 1965.

3. திருப்புக்கொளியூர் அவிநாசிப் பெருங்கருணையம்மை பிள்ளைத்தமிழ், சி.கே.சுப்பிரமணிய முதலியார், கோவைத் தமிழ்ச் சங்கம், கோயமுத்தூர், 1926.

4. திருவருட் செல்வரின் சரிதமும் கற்பனையும் (முதற் பகுதி) சி.கே. சுப்பிரமணிய முதலியார், அம்பாசமுத்திரம், ஆண்டு தெரியவில்லை.

5. வ.உ.சி. சுயசரிதை, வ.உ.சி உலகநாதப்பிள்ளை, வ.உ.சி. சுப்பிரமணியம், பாரி நிலையம், ஐந்தாம் பதிப்பு, 1966.

## கட்டுரை

1. சிவக்கவிமணி அவர்கள் நூற்றாண்டு விழா (கட்டுரை) வித்துவான் ஜி.எம். முத்துசாமி பிள்ளை.

## உதவியவர்

சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் மருமகன் சி.சு. கண்ணாயிரம், சேக்கிழார் நிலையம், 48. வைசியர் வீதி, கோயமுத்தூர் 641 001.

# சேக்கிழாரும் சி.கே.சு.வும்

பெ. சுப்பிரமணியன்

சி.கே. சுப்பிரமணிய முதலியார் கோவையில் பிறந்தவர். கோவை தமிழ்ச்சங்கத்தின் உதவித் தலைவராக விளங்கியுள்ளார். வழக்கறிஞராகப் பணியாற்றியுள்ளார். இவரைப் போலவே இவரது முன்னோர்களும் சிவபக்தியில் சிறந்து விளங்கியவர்கள். தமிழ்ப் புலமை கொண்டவர்கள். படிக்கின்ற இளமைக் காலத்திலேயே சி.கே.சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணக் காப்பியத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பல ஆண்டுகளாகப் பெரிய புராணத்தைப் படித்து, உணர்ந்து விரிவுரை எழுதியவர்.

தமிழாசிரியர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை சி.கே. சுப்பிரமணிய முதலியாருக்குப் பெரியபுராணத்தைக் கற்றுக்கொடுத்துள்ளார். இவரது தூண்டுணர்வு (Inspiration) காரணமாகச் சி.கே.சு. பெரியபுராணத்தைத் தம் வாழ்நாள் முழுவதும் படிக்கலானார். பெரியபுராணத்தில் தமக்கு ஏற்பட்ட ஈடுபாடு குறித்து இவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"பெரியபுராணத்திலே எனது இளமை முதல் என்னை யறியாமல் ஒரு விருப்பம் உண்டாகி வளர்ந்து வந்தது. 1894ஆம் ஆண்டில் எனது ஆசிரியராகிய பண்டிதர் ஸ்ரீமத் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களை அடுத்து நான் தமிழ் பயிலத் தொடங்கினேன். அவர் எனக்குத் தாயினுமினியவர். தமிழ் அமுதினை எனது கீழ்த்தரமறிந்து அதற்குத் தக்கபடி செவ்விதினூட்டுவர். அவர் இவ்வுலகை நீத்து இறைவன் திருவடியடைந்த 1906ஆம் ஆண்டு வரை அவரது பாத சேவையும், நல்லுபதேசப் பயனும் பெற்றேன். பெரிய புராணத்தில் சிற்சில பாட்டுக்கள் மட்டும் எனக்கு அவர்கள் பாடஞ் சொன்னதுண்டு. பள்ளிச் சிறுவனாம் பக்குவமுடையவனாதலின் முறையாகவோ, முழுவதுமோ பாடங் கேட்கப் பெற்றேனில்லை. நானும் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை. ஆனால் அப்போதே பெரிய புராணத்திலே பெரிய விருப்பத்தை மட்டும் எனக்கு அவர்கள் என் மனத்திலே புகுத்திவிட்டார்கள்" (திருத்தொண்டர் புராணம் உரை, முதற் பகுதி, முகவுரைக்கு முன்னுரை, ப. 11).

"பெரியபுராணத்தை மற்ற தமிழ் இலக்கியங்கள், புராணங்கள் முதலியவற்றோடு ஒன்றாக நினையாதே. அதன் பெருமை மிகப்பெரிது.

உலக நிலையில் அறியத் தக்க சிறிய பொருள்கள் முதல் முத்தி நிலையிற் காணும் பெரிய பொருள்கள் வரை எல்லாப் பொருள்களும் இதில் உண்டு. சாப்பிட இலைபோடும் மரபுகூட இதில் சொல்லி யிருப்பது பார்'' என்றெல்லாம் அவர் அவ்வப்போது எனக்கு அங்கங்கே எடுத்துக்காட்டும் சொற்கள் இப்போதும் என் காதிற்குள் ஒலிக்கின்றன. அவர் செய்த சிற்சில அரிய பெரியபுராணப் பிரசங்கங்களையும் நான் உடனிருந்து கேட்கும் பேறு பெற்றேன்" (மேலது, ப.11) என்று கூறுகின்றார். தமது தமிழாசிரியர் மூலம் பெற்ற உந்துதல், இவருக்குப் பெரியபுராணத்தைத் தொடர்ந்து படிக்கவேண்டும் என்ற ஆவலை உள்ளத்தில் உண்டாக்கியது எனலாம்.

"அதன் பயனாகப் பெரிய புராணத்தில் என்னை அறியாமலே எனக்கு ஓர் ஆசையும் அன்பும் அற்புதமும் தோன்றி மேன்மேல் வளர்ந்து வருவதாயிற்று. பெரிய புராணத்தினிடத்திலும் சேக்கிழார் திருப்பாதங்களிடத்திலும் பக்தி செய்து பயில்வதாயினேன். பெரிய புராணப் பித்துப் பிடித்தவன் என்று என்னை அறிந்தோர் சொல்லிப் பரிகாசமுஞ்செய்வர்'' (சேக்கிழார், முன்னுரை, ப. 6) என்று பெரியபுராண நூல் ஏற்படுத்திய தாக்கம் குறித்துச் சி.கே.சு. குறிப்பிடுகின்றார்.

தாக்கம் என்பது ஒரு நூலின் தனிப்பட்ட விளக்கங்களையோ படிமங்களையோ குறிப்பது அல்ல. அது அந்நூலில் பரந்தும் விரிந்தும் அந்நூல் முழுதிற்கும் உயிரோட்டமாக இருக்கவேண்டும் என்று ஒப்பிலக்கிய அறிஞர் கூறுவர். (வை. சச்சிதானந்தம், ஒப்பிலக்கியம், ப. 61) இக்கூற்றுக்கு ஏற்ப பெரியபுராணக் காப்பியம் சி.கே.சு.விற்கு உயிரோட்டமான தாக்கத்தை அளித்திருக்கின்றது.

சி.கே.சு. 'சேக்கிழார்' என்ற நூலை முதன்முதலில் வெளியிட்டுள்ளார். இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெரிய புராணம் பற்றி இவர் ஆற்றிய மூன்று நாள் சொற்பொழிவுகளின் விரிவாக்கம் ஆகும். இந்நூல் முதற் பதிப்பு 1933இல் வெளிவந்துள்ளது. 1941இல் இரண்டாம் பதிப்பும், 1952இல் மூன்றாம் பதிப்பும், 1954இல் ஐந்தாம் பதிப்பும் வெளிவந்துள்ளன.

சி.கே.சு. பெரிய புராணத்தைப் பல ஆண்டுகள் தொடர்ந்து பயின்றதோடு மட்டுமல்லாமல் பெரிய புராணச் சொற்பொழிவுகளைப் பலமுறை கேட்டு உள் வாங்கிக் கொண்டவர். "சி.கே. சுப்பிரமணிய முதலியார் திரு. கயப்பாக்கம், சதாசிவ செட்டியார் பி.ஏ., அவர்கள் கோவையில் பெரியபுராணப் படனம் செய்த போது உடனிருந்து முறையாகப் புராணம் கேட்டவர்கள் ஆனதினாலும் இத்தகைய

பெருஞ்செய்கைக்கு உரித்தானவர்கள் ஆயினார்கள். ஆங்கிலம், தென்மொழி இரண்டினும் உள்ளனவாம் தர்க்க நூல்களை ஆராய்ந்ததன் பயனாகச் சேக்கிழாரின் பாடல்களை நன்றாகத் துருவித் துருவி ஆராய்ந்து அவரது எண்ணங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். சேக்கிழார் பெருமானின் எண்ணப் போக்கினால் அவர் காலத்து அரசாட்சி, மக்களின் பழக்கவழக்கங்கள், நீதிமுறைகள் முதலியன எவ்வாறு ஒழுங்குபட்டன என்பதையும் விளக்கி இருக்கின்றார்கள். நமது நாட்டு மாணவர்களுக்கு இக்காலத்தில் இத்தகைய நூல்களே அவசியம் வேண்டற்பாலன" என்று இவரது சேக்கிழார் நூல் குறித்தும், தென்மொழி, ஆங்கில மொழி நூற் புலமை குறித்தும், தர்க்க முறை ஆய்வு குறித்தும் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் (சேக்கிழார், மதிப்புரை, ப. 21) குறிப்பிடுகின்றார்.

சி.கே.சு., பிற்காலத்தில் பெரியபுராணத்திற்கு விரிவுரை எழுதுவதற்குச் 'சேக்கிழார்' என்ற நூலே காரணமாக அமைந்தது. இது பற்றி அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "சேக்கிழார் என்ற தலைப்பில் செய்த 3 நாட் பிரசங்கங்களும் இப்புராணத்தையும் அதன் ஆசிரியரையும் பற்றியனவே. அந்தப் பிரசங்கங்களை அவர்களது உத்தரவு பெற்றுப் புத்தகமாக வெளியிட்ட பின்னரே புராணத்துக்கு ஒரு விளக்க உரை காணவேண்டும் என்னும் எண்ணம் தோன்றிற்று. இலௌகிகத்திலுங்கூட எந்தத் துறையில் மக்கள் வாழ்க்கை வாழவேண்டுமாயினும் அதற்குப் பெரியபுராணமே நன்கு துணை செய்வதாகும் என்ற எண்ணம் எனக்குள் வேரூன்றி வளர்ந்து வருகின்றது. இதனைப் பல துறைகளிலும் எனது 'சேக்கிழார்' என்ற நூலிற் காட்டியுள்ளேன்" (திருத்தொண்டர் புராணம் உரை, முதற்பகுதி, முகவுரைக்கு முன்னுரை ப. 13).

'சேக்கிழார்' என்ற நூல் மூன்று தலைப்புகளின் கீழ் அமைந்துள்ளது. அவையாவன:

1. பெரிய புராண ஆசிரியரும் அவர் காலமும்
2. பெரிய புராணமும் அதன் கலை ஞானங்களும்
3. பெரிய புராணம் - கவிச்சிறப்பும் பயனும்

## பெரியபுராண ஆராய்ச்சி

பெரியபுராணத்திற்கு முதல் ஆய்வு நூலாகக் கருதப்படுவது வா.மகாதேவ முதலியார் 1924இல் எழுதி வெளியிட்ட "பெரியபுராண ஆராய்ச்சி" என்ற நூலாகும். இந்நூல் 1924இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப்பட்டதாகும். இந்நூல் பதினொரு தலைப்புகளைக் கொண்டு அமைந்துள்ளது. இத்

தலைப்புகள் நூலாராய்வார்க்கு ஆய்வு முறையினை வகுத்துக் காட்டும் இலக்கணம் போன்றமைந்துள்ளது. (பெரியபுராண ஆராய்ச்சி, பதிப்புரை, ப. 5) இந்நூல் சி.கே.சு. போன்றோருக்குப் பெரியபுராண ஆய்வு பற்றி எழுதுவதற்கு வழிகாட்டியாக அமைந்தது என்று குறிப்பிடலாம்.

"பெரியபுராணத்துட் தொட்ட தொட்ட விடங்களிலெல்லாம் நயம் பலவுள வென்னும் உண்மையைப் பலருமறிய நூன்முகமாகத் தெரிவித்தல் வேண்டுமென அப்போதே துணிந்தனம். அன்று தொட்டுத் தெய்வப்புலமைச் சேக்கிழார் பெருமானாரின் கவிகளிற் பெரும்புலவர் கண்டுரைத்த அரும் பொருள்களையும், யாம் பன்முறை படித்துப் படித்து ஆழ்ந்து சென்று நுனித்தறிந்த நுண் பொருள்களையும் அப்போதைக்கப்போது குறித்து வைத்திருந்து அவற்றை ஒன்று திரட்டி ஒழுங்கு படுத்தி நூல் எழுதப்புக்கனம்" என்று வா. மகாதேவ முதலியார் நூலின் முகவுரையில் குறிப்பிடுகின்றார் (ப. 8). பெரியபுராணத்தில் காணப்படும் கவிதை நயத்தினையும், பொருள் நயத்தினையும் எடுத்துரைக்கும் முறையில் ஆய்வுரை எழுதியதாக நூலாசிரியர் குறிப்பிட்டாலும், பகுப்பாய்வு முறை, விளக்க முறை, ஆய்வு முறை, பாராட்டு முறைத் திறனாய்வு, ஒப்பாய்வு முதலிய ஆய்வு முறைகள் இவரது ஆய்வு நூலில் காணப்படுகின்றன. நூற்பெயர், நூற் பொருளும் ஆசிரியர் திறமும், நூலின் காலம் நூற்பாயிரம் செய்யுள் நலம் முதலிய தலைப்புகளில் இவர் கூறிய செய்திகள் இவரது நுட்பமான ஆய்வுத்திறனைக் காட்டுகின்றன. மேலும் இவர் பெரியபுராணத்தின் உள்ளடக்கத்தினை ஆராய்ந்து 'சிறப்புச் செய்கைகள்' என்ற தலைப்பில் 39 உட்தலைப்புகளில் பெரியபுராணத்தில் சுட்டப்பெறும் முக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து ஆராய்ந்துள்ளார் (மேலது, பக். 28-128). இவ் உள்ளடக்க ஆய்வின் மூலம் வா. மகாதேவ முதலியாரின் ஆய்வுப் போக்கினை அறிய முடிகிறது.

சி.கே.சு. வா. மகாதேவ முதலியாரின் ஆய்வுப் போக்கினை அடியொற்றிச் 'சேக்கிழார்' நூல் ஆய்வை அமைத்துக் கொண்டாலும் ஆய்வுப் போக்கு, நுட்பமான ஆய்வுப் பார்வை, பன்முகத் திறனாய்வு என்ற முறையில் ஆய்விலிருந்து வேறுபட்டு அமைகின்றது. வா. மகாதேவ முதலியாரின் 'பெரியபுராண ஆய்வு' வடமொழிச் சார்பு ஆய்வாக அமைந்துள்ளது என்று கூறலாம். ஆயின் சி.கே.சு. 'சேக்கிழார்' ஆய்வு 'தமிழ் நெறி' ஆய்வு வழிப்பட்டது எனலாம்.

திறனாய்வாளர்கள் இன்றைய காலக்கட்டத்தில் இலக்கியத்தை ஆராயப் ''பன்முகத் திறனாய்வு முறை'' தேவை என்று

குறிப்பிடுகின்றனர் (தி.சு. நடராசன், திறனாய்வுக் கலை, ப. 13). இப் பன்முகத் திறனாய்வு முறையைச் சி.கே.சு. 'சேக்கிழார்' என்ற நூலிலும், பெரியபுராண உரை ஆய்விலும் மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

சி.கே.சு. ஆய்வில் பகுப்பாய்வு, விளக்க முறை ஆய்வு, ஒப்பாய்வு, தத்துவவியல், வரலாற்றியல், வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு, சொல்லாய்வு முதலிய பன்முக ஆய்வு முறைகளைக் காண முடிகின்றது.

## 1. எடுத்துரைத்தல் முறை (Narrative Technique)

சேக்கிழார் பெரியபுராணக் காப்பியத்தை எடுத்துரைத்தல் (Narrative) முறையிலேயே கூறிச் செல்கிறார் என்று சி.கே.சு. குறிப்பிடுகின்றார்.

காலம் காலமாக வாய்மொழியாக வழங்கப்பட்டு வந்த கதை (Story), கதைப்பாடல் (Ballad) ஆகியன காவியங்கள் தோன்றுவதற்கு மூலங்கள் (Source) ஆகும். காலம் காலமாக வழங்கப்பட்டு வந்த கதையையே காவியப் புலவன் செம்மை செய்து காவியமாகச் செய்கின்றான். "காப்பியம் என்பது ஒரு வகையில் வழி வழி மரபாக வந்த கதை சொல்லலின் வளர்ச்சியே ஆகும். இந்த வளர்ச்சியில், தனிப் பெருந்தலைவரும், வீரமும் அவர்தம் அரிய செயல்களுமே அவர் பெற்றுள்ள புகழ் காரணமாகக் கொண்டாடத் தக்கவையாகத் தேர்வு செய்யப் பெறுகின்றன. காப்பியப்புலவன் செய்வதெல்லாம், பாட்டுடைப் பொருளில் அழுத்தங்களும், விரிவுகளும், விபரங்களின் வேறுபாடுகளுமே. அவனது ஆற்றல் முழுவதும் பயனாவது கதையை உண்டாக்கித் தருவதற்கல்ல. புகழ் மிக்க ஒரு கதையிலிருந்து காப்பியத்தை உண்டாக்கித் தருவதற்கே" (வை. சச்சிதானந்தம், மேலை இலக்கியச் சொல்லகராதி, ப. 78). இக்கூற்றுக்கு ஏற்பப் பெரியபுராணக் காப்பியம் அமைந்துள்ளது. தமக்கு முன்னே வழங்கி வந்த நாயன்மார்களின் கதையையே சேக்கிழார் பெருமான் செப்பம் செய்து பெரியபுராணமாக உருவாக்கியுள்ளார் எனலாம்.

'திருத்தொண்டத்தொகை' என்பது பெரியபுராணம் தோன்றுவதற்குரிய தொகை நூலாகும். நம்பியாண்டார் நம்பிகள் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதி அந்தாதி வகை நூலாகும். இந்நூல்களின் வழி வந்த 'விரி நூல்' பெரியபுராணம் ஆகும்.

மூவர் தேவாரங்களும், திருமூலர் திருமந்திரமும், காரைக்காலம்மையார் திருவந்தாதி முதலியனவும், சேரமான்

பெருமான் பாடிய பொன் வண்ணத் தந்தாதி முதலியனவும், ஐயடிகள் காடவர் கோன் நாயனார் அருளிய க்ஷேத்திர வெண்பாவும், பிற திருப்பாடல்களும் சேக்கிழார் நாயனாரது புராணத்திற்குப் பேராதரவுகளாய் விளங்கின என்றும், 'பெரியபுராணமாகிய' பெருமாளிகை மேற்கூறிய அடிநிலையின் மேற் கட்டப்பட்டது என்றும் சி.கே.சு. கூறுகின்றார்.

சேக்கிழார் கதை கூறும் முறையிலேயே தமது காப்பியத்தை அமைத்துக் கொண்டு போகின்றார். சேக்கிழாரின் எடுத்துரைத்தல் முறை பற்றி சி.கே.சு. "சேக்கிழார் செய்யுள் நடை மிகச் செம்பாகமானது. கடினமான சொற்கள் வாரா. பாட்டும் போக்கும் ஆற்றொழுக்கிற் போகும் போக்கிலே வைத்து உரைநடை வசனம் போலே பொருள் செய்யும்படி இருக்கும். பொருள் செய்யும் போது பாட்டின் ஓர் இடத்துள்ள சொற்களை வேறிடத்துக் கொண்டு சேர்த்துப் பொருள் செய்ய வேண்டிய அவசியம் சேக்கிழார் கவிகளிற் காண்பது மிக அரிது. சரிதத்தைத் தொடர்ச்சியாய்க் கதை சொல்வது போலப் பாட்டுக்களாலே அழகாகச் சொல்லிக் கொண்டு போவதில் சேக்கிழார் கைதேர்ந்தவர். அவர் பாட்டுக்களை மோனை, எதுகை, அடி, தொடை ஆகிய பாட்டு அமைப்பை நீக்கி வரிசையாய்த் தொடர்ந்து எழுதுவோமானால் உரைநடையாகவே ஆகிவிடும்" (சேக்கிழார், ப. 144) என்கிறார். நாயன்மார் வாழ்க்கை வரலாற்று நிகழ்வுகளை அழகிய கதைப் போக்காகச் சொல்லுகிறார் சேக்கிழார்.

## 2. நன்மையும் தீமையும்

சேக்கிழாரது செய்யுள் நடை கம்பீரமான பெருமிதம் உடையது. எளிய சொற்போக்கும் உயர்ந்த நோக்கங்கொண்டு படிப்போர் மனத்தை உயர்விலேயே கொண்டு போய் வைப்பது (மேலது, ப. 146) 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்பது காவியங்களின் உட்கருவாகும். சரிதம் சொல்லிப் போகும் போக்கிலேயே 'ஆழ்க தீயது' என்றபடி தீமைகளும், நன்மை களில்லாதவைகளும், பயனற்றவைகளும் சுருங்கி ஒதுங்கிப் போகும் (மேலது). "சரித நிகழ்ச்சியைப் படித்துக் கொண்டு போகும் பொழுதே தீமைகளில் வெறுப்பும், நன்மைகளில் விருப்பும் தாமாகவே படிப்போர் மனத்தில் உண்டாகும். வல்லவன் வடிக்கும் கூத்தையோ, அல்லது ஓர் உண்மை நிகழ்ச்சியையோ ஒருவன் நேரிற் கண்டால் எவ்வாறு அந்தந்த இடங்களிலே தக்கபடி சினம், நகை, ஆசை, அன்பு, இரக்கம் முதலிய மனவெழுச்சிகள் தாமாகவே காண்பவன் மனத்தில் உண்டாகி எழுந்து நிகழுமோ அது போலவே சேக்கிழார் கூறும் சரிதங்களைப் படிக்கின்றார்க்கும் நிகழும்" (மேலது ப. 147).

சொல்லும் பொருளும் ஒத்தியலும் நலம் சேக்கிழார் பெருமானது செய்யுள் நடையில் மிகச்சிறந்ததோர் இயல்பாகும். சொல்கின்ற பொருளுக்கேற்ற சொற்களும் சந்தமும் யாப்பமைதியும் ஒருங்கே காணலாம். (மேலது)

கவிதைக்குரிய நயங்கள் பெரியபுராணக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன. கவியின் குணமாகிய செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலே பொருண்மை, சாந்தம், வலி, சமாதி என்பன பத்தும் இப்புராணப் பாட்டுக்களில் அமைந்துள்ளதனை அங்கங்கே கண்டு கொள்க (மேலது, ப. 151) என்கிறார். மேற்கூறிய கவிதைத் திறனாய்வு வடமொழி ரசக் கோட்பாட்டை ஒட்டியது எனலாம்.

### 3. 'பெரியபுராணம்' பெருங்காவியம்

தண்டியாசிரியர் சொன்ன காப்பியக் கொள்கைகளை நன்கு உள்வாங்கிக் கொண்டு அவற்றைப் பெரியபுராணத்துள் பொருத்திப் பார்த்துள்ளார் சி.கே.சு.

காப்பியம் என்பது நால்வகை உறுதிப் பொருள்களையும் கூறுவதாய் ஒரு பழஞ்சரிதம் பற்றி வரும் தொடர்நிலைச் செய்யுளாம். அது பெருங்காப்பியம், சிறு காப்பியம் என்று இரு வகைப்படும் என்று காப்பியத்திற்கு விளக்கம் தருகின்றார் (மேலது, ப. 152).

பெருங்காப்பியத்திலே தெய்வ வணக்கமும், செயப்படு பொருளும், வாழ்த்தும் முன்னே அமைக்கப் பெற்றிருக்கும். அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருளின் பயனையும் தருவதையே பயனாகக் கொண்டிருக்கும் (மேலது).

பெரியபுராணமானது தனித்தனிச் சரிதங்கள் சேர்த்துக் கோத்த ஒரு கோவை என்று சிலர் கருதுகின்றார்கள். அஃது அப்படியன்று; 'திருக்கயிலாயத்தினின்றும்' திருவாணையின்படி ஒரு குறித்த காரியத்தின் பொருட்டு நிலவுலகிலே அவதரித்தருளிய சுந்தர மூர்த்திகள் இரு தேவியர்களை மணந்தும், உலகமுய்யும்படி திருத் தொண்டத்தொகையை அருளியும், பல பதிகளிற் சென்று வழிபட்டும், உலக உபகாரமாகப் பல அற்புதச் செயல்கள் நிகழ்த்தியும், மீளக்கயிலையைச் சென்று சேர்கின்றார் என்ற சரிதமே இதனுள் பேசப் பெறுகின்றது. இஃது ஒரு பெருங்காப்பியமேயாகும். காப்பிய அமைதிகள் யாவும் இப் பெரியபுராணத்திலே அமைந்துள்ளன என்று எடுத்துரைக்கின்றார் (மேலது, பக். 152-153).

காப்பியத்திற்குப் பாட்டுடைத் தலைவனும், தலைவியும் வேண்டும். மேலும் அது மலை, காடு, நாடு, நகர், கடல் என்ற இடத்தின் பகுதிகளையும் பெரும்பொழுது, சிறுபொழுது என்ற காலப்பகுதிகளையும் பற்றிய வளங்களைச் சிறப்பித்துக் கூறும். மணமுடித்தல், முடிகவித்தல், பொழில்விளையாட்டு, நீர் விளையாட்டு, உண்டாட்டு, புலவி, கலவி என்றிவற்றைச் சுவை பெறப் பேசுதலும் அதற்கிலக்கணமாம். மந்திரம், தூது, செலவு, போர், வெற்றி முதலியவற்றை எடுத்துக் கூறுதலும் அதன் தன்மை. அது சருக்கம், இலம்பகம், படலம் என்னும் பகுதிகளைப் பொருந்தியிருக்கும். இவ்விலக்கணங்கள் முழுதும் நமது பெரியபுராணத்திலே அமைந்திருத்தல் நன்கு புலனாகும் (மேலது).

'எடுக்கு மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்' என்று ஆசிரியர் கூறுவதால் இஃது ஒரு பழங்கதை பற்றிய தொடர்நிலைச் செய்யுளாகும் என்று கூறுகின்றார்.

'உலகெலாம்' என்று இறைவன் அடி எடுத்துக் கொடுக்கப்பாடிய முதற் செய்யுளிலே "வணங்குவாம்" என்றதனால் தெய்வ வணக்கமும் "வாழ்த்தி" என்றதனால் வாழ்த்தும் கூறியவாறாகும் (மேலது, ப. 153).

'அடியார் புகழே இப்புராணக் கருத்து' என்று கூறுகின்றார் (மேலது, ப. 156).

ஒரு பெருங்காவியமானது முதனூல், வழிநூல்களைக் கொண்டிருத்தலும் மரபு. அவை, தொகை, வகை, விரி என்றும் சொல்லப் பெறும். தொகை வகைகளின் வழி வந்த விரிநூல் பெரிய புராணம் என்று விளக்குகின்றார் (மேலது, பக். 158-159).

திருத்தொண்டத் தொகையின் அமைப்பையே பெரிய புராணத்தின் அடிநிலையாகவும், சருக்கம் முதலியனவாகவும் வகுத்திருக்கின்றமையும், அத்திருப்பதிகப் பாட்டுக்களிலே "ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே" என்ற பகுதியையே அந்தாதியில் அவ்வவ் விடங்களில் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு ஒவ்வோர் தோத்திரமாகவும், புராணச் சருக்கங்களின் இறுதியிலும் அவ்வாறே ஒவ்வொரு துதிகளாகவும் வைத்திருப்பதும் தொகை, வகை, விரி நூல்களி னியல்பைக் காட்டுவனவாம் (மேலது, ப. 159).

மேற்கூறிய விளக்கத்திலிருந்து பெரியபுராணத்தை அதற்கு முன் தோன்றிய மூல நூல்களோடு சேர்த்திப் பார்க்கும் மரபு வழித் திறனாய்வு முறையையும், மூல நூல்களின் அமைப்போடு பெரிய புராணக் காப்பியத்தின் அமைப்பும் ஒத்துப் போகிறது என்று

எடுத்துக் காட்டி விளக்கியிருப்பது சி.கே.சு.வின் அமைப்பியல் வழி ஆய்வு முறையினையும், காப்பியத் திறனாய்வு முறையினையும் காட்டுகின்றது.

## 4. பயன்படு பழமையும் பயனில்லாத புதுமையும்

பெரியபுராண ஆய்வில் சேக்கிழார் காலத்தில் வழக்கில் இருந்த பழக்கவழக்கங்கள், பண்பாட்டுக்கூறுகள், நம்பிக்கைகள், சடங்குகள், கலைகள் முதலானவற்றைத் தக்க சான்றுகளுடன் எடுத்துக் காட்டுகின்றார். தமிழர்களின் மிகப் பழமையான பயன்படு பழமையை (Usable Past) நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். நாகரிகம் என்ற பெயரில் பல பயனில்லாத புதுமைகளை நாம் பின்பற்றுவது கண்டிக்கத்தக்கது என்று பல இடங்களில் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

### அ. பொழுதுபோக்குகளும் விளையாட்டுகளும்

பண்டைத் தமிழர்களின் பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுப் பற்றிய செய்திகளைச் சி.கே.சு. தமது சேக்கிழார் எனும் நூலில் தொகுத்துக் கூறியுள்ளார். விளையாட்டுகளைப் பற்றிக் கூறும் போது முற்காலத்திலுள்ள விளையாட்டுகள் பற்றியும் இக்காலத்தில் உள்ள விளையாட்டுகள் பற்றியும் ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

நிலைச்செண்டு ஆடுதல், பரிச்செண்டு வீசுதல், தகர்ப்பாய்ச்சல் காண்டருளல், வாரணப் போரும் பிற புட்களின் அமர்த் தொழிலுங் காணல் முதலியவை பெரியபுராணத்தில் குறிப்பிடப்பட்ட பொழுதுபோக்கு விளையாட்டுகள் ஆகும் (மேலது, ப. 94).

'செண்டாடும் மகிழ்வு' ஒருவகைப் பொழுதுபோக்கான விளையாட்டாகப் பண்டைத் தமிழர் ஆடி மகிழ்ந்தமை இந்நாட் பந்தாட்ட விளையாட்டுகளோடு ஒப்பிட்டுக் காணத் தக்கதாகும் (மேலது, ப. 95).

'நிலைச் செண்டு' என்பது நின்ற நிலையிலிருந்தே பந்துகளை வீசி விளையாடும் தற்கால டென்னிஸ் முதலியன போல்வது என்கிறார். பரிச்செண்டு வீசுதல், குதிரைகளின் மீதிருந்து குறித்த விதிப்படி பந்தாடி மகிழ்தல் போலும் என்று விளக்குகின்றார். இவ்விளையாட்டுகள் எல்லாம் பண்டைக்கால நாகரிகத்தைத் தெற்றென விளக்குவன என்று குறிப்பிடுகின்றார்.

பாடல், ஆடல், பல இன்னியங்கள் பயிலுதல் மற்றும் நீடும் இனிய விநோதங்கள் என்பன இக்காலத்து அவ்வகையிலே உள்ள நாடகக் காட்சிகளையும், சினிமா முதலிய படக்காட்சிகளையும்

நினைவூட்டுகின்றன. பண்டைத் தமிழரின் பொழுதுபோக்குகள் பற்றியும் எடுத்துரைக்கின்றார். ஆராமங்கள் அதாவது சோலைகளிலே உல்லாசமாகக் காலங்கழித்தலும், சிறு சோற்றுப் பெருஞ்சிறப்பும் (Tea and garden parties), நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு வகைகளும் நமது முன்னோர்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளாக இருந்தன (மேலது, ப. 95).

பெரியபுராணம் குறிப்பிட்டுள்ள மகளிர் விளையாட்டுகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (மேலது, ப. 96).

ஆ. அழகுக் கலைகள்

பெரியபுராணத்துள் காணப்பெறும் அழகுக் கலைகள் (Fine Arts) குறித்தும் விளக்குகின்றார் சி.கே.சு. சிற்பம், ஓவியம், இசை, கூத்து என்றவை அக்காலத்தில் மிக மேலான நிலையில் விளங்கின என்கின்றார்.

பெரியபுராணத்தில் சுட்டப்பெற்ற இசை பற்றிய குறிப்புகளை மிக விரிவாக விளக்குகின்றார். ஆனாய நாயனார் புராணத்தில் குறிப்பிடப் பெறும் குழற் கருவியின் அமைப்பு, இலக்கணங்கள், குழலிசையின் இலக்கணங்கள், முறைகள் பற்றிச் சுட்டிக் காட்டுகின்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் புராணத்தில் கூறப்பட்டுள்ள யாழின் இலக்கணமும், யாழிசையின் தன்மையும் பற்றி விளக்குகின்றார்.

யாழும், குழலுமே தீஞ்சுவை தரும் இன்னியங்களிலே மிகச் சிறந்தன என்பதைத் தமிழர் உணர்ந்திருந்தனர் (மேலது, ப. 98) என்கின்றார்.

பெரியபுராணத்துள் கூறப்பெறும் பண்டைத்தமிழரின் இசைச் சிறப்பினை இன்றைய நாட்களில் காணப்படும் இசையோடு ஒப்பிட்டுக் காட்டி மனம் வருந்துகின்றார் சி.கே.சு. "இக்காலத்து நாம் கேட்டு மகிழும் உள்நாட்டு, பிற நாட்டுக் கோர அசுர வாத்திய விசேடங்களுடன் ஒத்துப் பார்ப்போமானால், நமது முன்னோர்களது உயர் நிலையிலிருந்து நாம் எவ்வளவு தூரம் கீழே இறங்கி யிருக்கின்றோமென்பதும், கீழ்க் கீழ்த் தாழ்ந்து கொண்டே போகும் நாம், அதை உணராமல் நாகரிகத்தில் மேன் மேல் உயர்ந்து போவதாய் மயங்கியிருக்கின்றோ மென்பதும் நன்கு விளங்கும் (மேலது, பக். 98-99).

இ) நாடகக் கூறு

பொதுவாகக் காப்பியத்திற்குள் நாடகக் கூறுகள் இடம் பெற்றிருக்கும். பெரிய புராணத்துள் காணப்படும் நாடகக் கூறுகளைச்

"சேக்கிழார்" நூலில் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார் சி.கே.சு. கண்ணப்ப நாயனார் புராணத்தில் வேடர்களின் உரையாடலை எடுத்துக்காட்டிப் பெரிய புராணத்தில் அமைந்துள்ள நாடகக் கூறுகளை விளக்குகின்றார் (மேலது, ப. 142).

### ஈ) இயற்கை மருத்துவம்

பண்டைக் காலத்தில் இயற்கை மருத்துவ முறை (Natural Folk Medicine) இருந்தது என்பதைப் பெரியபுராணத்தின் மூலம் அறியமுடிகின்றது. மூலிகை மருத்துவத்தின் மூலம் கத்தியால் ஏற்பட்ட புண்களை ஆற்றினார்கள் என்பதற்குக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் உள்ள செய்திகளை எடுத்துக்காட்டுகின்றார். நோய்கள் பற்றியும், இயற்கை மருத்துவமுறைகளைப் பற்றியும் சேக்கிழார் அறிந்திருந்தார் என்பதைச் சான்றுகள் மூலம் நிறுவுகின்றார் ஆசிரியர் (மேலது, பக். 103-104). பெரியபுராணத்துள் சுட்டப் பெறும் நோய்கள் குறித்துக் கூறுகின்றார். 'முயலகன்' என்ற பெருநோயைப் பற்றி மழவன் மகள் சரிதம் மூலமாகக் காணலாம் என்கிறார்.

பெருஞ்சுரம் பற்றிக் கூன்பாண்டியன் வரலாற்றில் காணலாம். பாம்பு கடித்தால் உடம்பில் படிப்படியாக ஏறும் விஷம் பற்றிச் சேக்கிழார் அப்பூதி நாயனார் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். பாம்புவிடம் தீர்வதற்கு அக்காலத்தில் மந்திர முறையைப் பின்பற்றினார்கள் என்று சேக்கிழார் கூறியதை எடுத்துக் காட்டுகின்றார் (மேலது, ப. 103).

## 5. பெரியபுராணத்தில் அணிநலன்கள்

கவிச் சிறப்பும் பயனும் என்ற தலைப்பில் பெரிய புராணத்துள் அமைந்துள்ள அணிகள், நயம், உருவகம், வருணனை, சுவை, சொல், பொருள் முதலியன பற்றி ஆராய்ந்து கூறியுள்ளார். பெரிய புராணத்துள் அமைந்துள்ள அணிகள் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார் சி.கே.சு. அணிகள் பற்றி ஆராய்வதற்குத் தொல்காப்பியர் கூறும் 'உவமவியல்' கோட்பாட்டை அடியொற்றியே ஆராய்கின்றார். தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கியக் கொள்கைகளைப் பெரியபுராணத்தில் தேவையான இடங்களில் பொருத்திப் பார்த்துள்ளார்.

'அணிகள் செய்யுளுக்கோ அன்றிக் காப்பியத்துக்கோ அழகு செய்வதால் அணியெனப் பெற்றன. சொல்லணிகள் பொருளணி களைப் போல் அத்துணை சிறப்புடையனவல்ல; ஆயினும் செய்யுளின்பத்தை மிகும்படி செய்து உவகையும் ஆர்வமும்

ஊட்டுவதால் அவையும் காப்பியத்தில் வேண்டப்படுவனவாம்' என்று சொல்லணிகள் குறித்து விளக்கம் தருகின்றார் (மேலது, பக். 123-124). சொல்லணி, பொருளணி, தன்மையணி முதலியவற்றுக்குப் பெரியபுராணப் பாடலிலிருந்து பொருத்தமான சான்றுகளைத் தருகின்றார்.

"சேக்கிழார் பெருமான் சொல்லணிகளை மிக அருகியே வழங்குவர். ஆயின் அவை இலகுவிற் பொருள்தரும் வகையில் அமைவன. அன்றியும் சிற்சில செய்யுட்களில் ஒரு சொல்லே மீளமீள வரும்படி ஆசிரியர் அமைப்பார். அவற்றில் அருகிய அழகிய பொருட்பேதம் பெற அமைக்கப்பெற்ற அந்தச் சொல்லானது படிப்போர் ஊன்றிப் பார்த்தாலல்லாது அவர்களிடமிருந்து அதன் பொருட்பேதங்கள் மறைந்து நழுவிவிடும்படி அமைக்கும் இயல்பு நம்மாசிரியரது மாண்பான தனி இயல்பாம்' (மேலது) என்று சேக்கிழார் பயன்படுத்திய உவமைகளைப் பற்றிக் கூறுகின்றார்.

அதிபத்த நாயனார் புராணத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள 'வலைஞர் சேரியை'யும் திருநாளைப்போவார் நாயனார்புராணத்தில் புலைப்பாடியையும் உள்ளதை உள்ளவாறே வருணிக்கும் திறனைத் தன்மையணிக்கு எடுத்துக் காட்டாகத் தருகின்றார். "சேக்கிழார் திருநாளைப் போவார் நாயனார் புராணத்திலே அந்நாயனார் வாழ்ந்த ஆதனூர்ப் புலைச்சேரியை எழுதிக்காட்டும் தன்மையணி ஓவியத்திலே நாம் உள்ளது உள்ளவாறே காண்கின்றோம்" (மேலது, ப. 130).

"எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது தன்மை. அது தான் பொருள் குணஞ் சாதித் தொழிலோடு புலனாம்" என்ற நூற்பாவை எடுத்துக்காட்டி, அதன் அடிப்படையில் பெரியபுராணத்தில் அமைந்துள்ள தன்மையணியை விளக்குகின்றார் (மேலது, ப. 126).

கண்ணப்ப நாயனார் புராணத்துள் சேக்கிழார் எடுத்துக்கூறும் வேடர்சேரியை, "மலை வாழ்நராகிய வேடர்களது சேரியின் தன்மையைத் தன்மையணியிலேயே இங்கே நம் முன் காண்கின்றோம். வேட்டைக்கு மிக உதவியாகும் தொங்கிய காதுகளையுடையை நாய்களும், அங்குள்ள விலாமரத்திலே தொங்கவிடப்பட்ட வார்வலையும், முற்றங்களில் பழக்கி வளர்க்கப்பட்டுத் தத்தம் இனமாகிய ஏனைய விலங்குகளை அகப்படுத்திக் கொண்டு வருவதற்காகப் பயிற்சி செய்யப்பெற்ற காட்டுப்பன்றி - புலி - கரடி - கடமை - மான் முதலிய பார்வை மிருகங்களும், வீட்டின் முன் பாறையாலியன்ற முற்றத்தில் உணவின் பொருட்டு உணங்கும் ஐவன அரிசியும், நம் கண் முன் வருகின்றன.

வேடர் சிறுவர் அங்குள்ள புலிக்குட்டிகளுடனும், யானைக்கன்று களுடனும் விளையாடலும், அச்சிறுமியர் மான்வகைகளுடன் விளையாடலும் காண்கின்றோம். மலையில் வாழும் வேடர்சேரியின் இயல்பையும் அங்குள்ள மாவும் உணவும் தொழிலும் ஆகிய பொருள்களையும் ஆசிரியர் மிக உருசி பெற இப்பாட்டுகளாலே படம் வரைந்து காட்ட, நாம் உள்ளதை உள்ளபடியே நம் கண்முன் நிற்பது போலக் காண்கின்றோம்" (மேலது, ப. 128) என்று தன்மையணிக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுத் தருகின்றார்.

சேக்கிழார் பயன்படுத்திய உவமை, உருவகம், சிலேடை முதலியவற்றைப் பொருத்தமான சான்றுகளுடன் எடுத்துக் காட்டுகின்றார் சி.கே.சு. "ஓர் ஊர் அல்லது நாட்டை அல்லது இடத்தைச் சொல்லும் போது அதனைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கியமான பொருள்களை எல்லாம் ஒருங்கே சுவை பெற அமைத்து வர்ணனை போல எடுத்துச் சொல்லிக் காட்டுவது சேக்கிழார் பெருமானது இயல்பு" (மேலது, ப. 140) என்று சேக்கிழாரின் வருணனைத் திறன் பற்றிக் கூறுகின்றார்.

### பக்திச் சுவை

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தின் உட்பொருள் 'பக்திச் சுவையை' எடுத்துரைப்பதாகும். 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்று மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சேக்கிழாரின் கவித்திறனைப் பற்றிக் கூறுவார். பக்திச் சுவையை வெளிப்படுத்துவதற்காகவே சேக்கிழார் உவமை, உருவகங்களைத் தமது காப்பியத்தில் பயன்படுத்துகின்றார். "தன்மையாயினும், உவமை, உருவகமாயினும், தற்குறிப்பேற்றம் முதலிய பிற எந்த அணிகளேயாயினும், ஆசிரியர் சேக்கிழாரின் கை பட்டபோது அவை பக்திச்சுவையே காட்டுவனவாம்" என்கின்றார் (மேலது, ப. 142).

## சேக்கிழாரின் தமிழ்ப்பற்று

சேக்கிழாரின் தமிழ்ப்பற்றினைப் பல சான்றுகள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார் சி.கே.சு. "தமிழின் மேன்மையையும், இனிமையையும் பாடிக் காட்டி யனுபவிக்கின்றார். தமிழின்பந் துய்த்துக் களிக்கின்றார்" என்று சேக்கிழாரின் தமிழ்ப்பற்றை விளக்குகின்றார். சேக்கிழார் பெரியபுராணத்துள் எடுத்தாண்ட பல்வேறு செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுள்களை எடுத்துக்காட்டிச் சேக்கிழாரின் தமிழ்ப்புலமையை விளக்குகின்றார் (மேலது, பக். 172-174).

## தனித்தமிழ் நூல்

சேக்கிழார் இயற்றிய பெரியபுராணம் உபமன்னிய பக்த விலாசம் என்ற வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு என்று சிலர் கூறுவர். இது முற்றிலும் தவறு. இது 'தனித்தமிழ்' நூலேயாம் என்று சி.கே.சு. கூறுகின்றார் (திருத்தொண்டர் புராணம் உரை, முதற்பகுதி, ப. 79).

## செய்யுள் தொகையும் இடைச் செருகல்களும்

சி.கே.சு. 'பெரிய புராணம்' பற்றிய பல பழஞ்சுவடிகளையும் பல பதிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்து உரையெழுதிப் பதிப்பித்துள்ளார். அச்சுப்பதிப்புகளிலே ஒரு பதிப்பிற் கண்ட சில செய்யுட்கள் மற்ற பதிப்பில் காணப்படவில்லை என்கிறார் (சேக்கிழார், ப. 211). பெரியபுராணத்தில் உள்ள மொத்த செய்யுட்கள் 4253 என்றும், இதற்கு மேல் 32 பாட்டுகள் பிற்காலப் புலவர்களால் பாடப்பட்டுப் புராணத்தில் சேர்க்கப்பட்ட இடைச் செருகல்கள் ஆகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

பல பழைய ஏட்டுப் பிரதிகளை ஒப்பிடும்போது ஒரு ஏட்டுப் பிரதியில் கிடைத்த வெண்பாவைச் சான்றாகக் காட்டுகின்றார்.

> "கொண்டலணி தண்டலைசூழ் குன்றை நகர்ச் சேக்கிழார்
> ஓண்டரணி யோருய்ய வோதினார் – கொண்ட புகழ்
> என்ற தொரு நாலாயிரத் திருநூற்றைம்பத்து
> மூன்று திருவிருத்தமும்"

என்ற பாடல் மூலம் பெரியபுராணம் 4253 பாடல்களைக் கொண்டது என்பதை அறிய முடிகின்றது (மேலது, ப. 209).

## புராணத்தின் பயன்

பெரிய புராணத்தின் பயன் குறித்துத் தத்துவ அடிப்படையில் விளக்கம் தருகின்றார் சி.கே.சு.

"இப்புராணத்தின் பயனாவது இருள் போக்குதல் என்க. என்னை? இருள் இருவகைப்படும். புறவிருள் ஒன்று, சிந்தையுள் நின்ற அகவிருள் மற்றொன்று. புறவிருள் போக்குபவன் செங்கதிரவன். அதுபோல் உயிரினிடத்துப் பொருந்திய ஆணவம் என்னும் வலிய இருளைப் போக்குவது இத்தொண்டர் புராணம்" என விளக்குகின்றார்.

## 6 காவியக் கட்டமைப்பு

காப்பியம் என்பது தொடர்ச்சியாக எடுத்துச் சொல்லப்படும் கதையாகும். காப்பியத்தின் தொடக்கமும் (The beginning),

நடுப்பகுதியும் (The middle), முடிவுப்பகுதியும் (The end) ஒன்றோடொன்று தொடர்புபட்டு அமைய வேண்டும் என்று காப்பியத் திறனாய்வாளர்கள் கூறுவர். இக்கூற்றுக்கு ஏற்பப் பெரிய புராணத்தின் தொடக்கம், நடு, முடிவுப் பகுதிகள் அமைந்துள்ளன. இதனையே காப்பியக் கட்டமைப்பு என்று மேலைத் திறனாய்வாளர்கள் கூறுவர்.

பெரியபுராணத்தின் தொடக்கம் 'உலகெலாம்' என மங்கல வாழ்த்தாகவும், இறை வாழ்த்தாகவும் தொடங்குகின்றது

உலககெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்று பெரியபுராணக் காப்பியம் தொடங்குகின்றது.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண்ணீற் றொளி போற்றிநின்
றாதி யாரருளாதலினைந் தெழுத்
தோதி யேறினா ருய்ய வுலகெலாம்

எனச் சிவபக்தியின் திறம் குறித்துக் காவியத்தின் நடுப்பகுதி எடுத்துரைக்கின்றது.

என்று மின்பம் பெருகுமியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்

என்று 'உலகெலாம்' என்ற மங்கலத்தொடருடன் காவியம் முடிகின்றது. தொடக்கமும், முடிவும் ஒன்று போல அமைந்து காவிய ஒருமைப்பாடு சிறக்கின்றது. மேற்கூறிய மூன்று பாடல்களையும் எடுத்துக்காட்டிச் சி.கே. சுப்பிரமணிய முதலியார் தனது சொற்பொழிவை நிறைவு செய்தது அவரது ஆழமான காவியப் பார்வையைப் புலப்படுத்துகின்றது.

# பெரியபுராணப் பதிப்புப் பணிகள்

அரங்க. சுப்பையா

## பெரியபுராணம் – அறிமுகம்

சைவக் குழுக்கள் இடையிலும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் இடையிலும் செல்வாக்கினைப் பெற்று விளங்கும் இலக்கியம் பெரியபுராணம் ஆகும். அருண்மொழித்தேவன் என்னும் சேக்கிழார் இதனைப் பக்திக் காவியமாகப் படைத்துள்ளார். இப்புராணம் தோன்றிய நாள் முதற்கொண்டு இன்று வரையில் தமிழ் மக்களிடையில் பெருமதிப்பைப் பெற்று விளங்குகின்றது. இதன் சிறப்பினை, தி.ந. இராமச்சந்திரன் சைவசமயக் கொள்கை யடிப்படையில்,

> பெரியபுராணம் சைவத்திற்கு அமைக்கப்பட்ட நினைவுச்சின்னம். பாரதநாட்டின் மிக மேம்பட்ட அறிவுப்பெட்டகம். உயர் அறிவின் பன்முகத் தோற்றம் இப்புராணத்தில் தெளிவாகத் தெரிகின்றது. பலப்பல நூல்களை, வரலாறுகளை, புராணங்களை இந்நூல் நினைவுகூர்கின்றது. அற்புத வருணனைகளும் பாத்திரங் களும் காலச்சூழல்களும் ஓர் உன்னத சாதனைக்கென இப்புராணத்தில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. திருமுறைப் பாடல்களைச் சேக்கிழார் பெருமான் கையாண்டிருக்கும் பாங்கு மிக அற்புத மானது. இலக்கண முறையாலும் இலக்கிய முறையாலும் திருமுறைப் பாடல்களைப் பெரியபுராணம் உண்மையாகப் பிரதிபலிக் கின்றது. தேவாரப் பாடல்கள் முழுவதும் என்று சொல்லும் அளவிற்கு அவை பெரியபுராணத்தில் சீரிய முறையில் நெய்யப் பட்டிருக்கின்றன. பெரியபுராணம் வெளிவந்தபிறகு எவரும் தேவாரப் பாடல்களைப் பெரியபுராணத்தின் மூலமே ஓதும் நிலை உருவாகியுள்ளது

என்கிறார் (பெரியபுராணப் பதிப்புக்கள், அணிந்துரை).

## புராண அமைப்பு

பெரியபுராணம் பதின்மூன்று சருக்கங்களாகப் பகுக்கப் பட்டுள்ளது. இச்சருக்கங்கள் இரண்டு காண்டங்களாகப் பிரித்து

அமைக்கப்பட்டுள்ளன. பாயிரம் தொடங்கி நமிநந்தி அடிகள் புராணம் முடியவுள்ள பகுதி முதற்காண்டம் என்றும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம் தொடங்கி இறுதி வெள்ளானைச் சருக்கம் முடிய உள்ள புராணங்கள் இரண்டாம் காண்டம் என்றும் கொள்ளப்பட்டுள்ளது. இது அறுபத்து மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும் தொகையடியார்களின் சிறப்பினையும் எடுத்துக் கூறுகின்றது.

## பெரியபுராணப் பதிப்பாசிரியர்களும் பதிப்புகளும்

பெரியபுராணப் பதிப்பாசிரியர்கள் பல்வேறுபட்ட நிலையினர். இலக்கிய ஆர்வலர்களும், சமயச்சார்புடையவர்களும் அரசியல்பற்றுடையோரும், மொழிச் சிந்தனையாளர்களும் பெரியபுராணத்தைப் பதிப்பித்துள்ளனர். இதன் பதிப்புப்பணி, மொழி நோக்கிலும், அரசியல் நோக்கிலும், சமூக நோக்கிலும், சமய நோக்கிலும் எதிர்கொள்ளப்பட்டது எனக் கூறுவர் (அரங்க. சுப்பையா, பெரியபுராணப் பதிப்பு வரலாறு, ப. 15). பெரியபுராணத்தைச் சில தனிப்பட்ட மனிதர்கள் பதிப்பித்துள்ளது போலவே மத நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் பதிப்பித்துள்ளனர்.

### பதிப்பாசிரியர்கள்

1. மழவை மகாலிங்கையர்
2. காஞ்சிபுரம் சபாபதி முதலியார்
3. திருமயிலை சுப்பராய ஞானியார்
4. சிதம்பரம் பே. இராமலிங்கம் பிள்ளை
5. ஆறுமுக நாவலர்
6. ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள்
7. திருமயிலை சுப்பராய நாயகர்
8. திருமயிலை செந்தில்வேலு முதலியார்
9. திரு. வி. கலியாண சுந்தரமுதலியார்
10. காஞ்சிபுரம் ஆலால சுந்தரம் பிள்ளை
11. சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

### பதிப்பு நிறுவனங்கள்

பெரியபுராணத்தைப் பல நிறுவனங்கள் பதிப்பாசிரியர்களின் துணைகொண்டு வெளியிட்டுள்ளன. சைவ மடங்கள் இதற்கென்று தனி நிதி ஒதுக்கிப் பதிப்பித்துள்ளன. தனியார் நிறுவனங்கள் சமய நோக்கிலும் வணிக நோக்கிலும் பதிப்பித்துள்ளன.

அவை,

1. சைவ சித்தாந்த மகாசமாஜம் (சென்னை)
2. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் (திருப்பனந்தாள்)
3. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்
4. திருவாவடுதுறை ஆதீனம்
5. வர்த்தமானன் பதிப்பகம் (சென்னை)
6. சேக்கிழார் ஆராய்ச்சி மையம் (சென்னை)
7. காந்தளகம் (சென்னை)

மழவை மகாலிங்கையர் பெரியபுராணத்தின் முதல் பதிப்பாசிரியர் ஆவார். ஓலைச்சுவடியிலிருந்த இப்புராணப் பாடல்களை அச்சுக்குக் கொண்டு வந்தவர் இவரே. 'பெரியபுராணத்தின் முதல் பதிப்பாசிரியர் இவரே' என்று பி.எஸ். கேசவன் குறிப்பிடுகின்றார். (History of Printing and Publishing in India, A Story of Cultural Re-awakening, Volume-1, P. 88). 1845இல் மழவை மகாலிங்கையரால் முதல் முதலில் அச்சுருவம் பெற்ற இதில் முதற்காண்டத்தில் முதல் மூன்று சருக்கங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. அதாவது ஆனாய நாயனார் புராணம் வரையில் அச்சிடப்பெற்றுள்ளது. இப்பதிப்பில் ஒவ்வொரு பாடலுக்கும் பொழிப்புரை அமைந்துள்ளது.

## சி.கே. சுப்பிரமணிய முதலியார்

இவர் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் என்று அழைக்கப்பெற்றார். இவர் சைவ இலக்கியங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர். பெரியபுராணப் பதிப்பாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர். இளமைக் காலத்திலேயே நுண்ணறிவு மிகுந்தவராக இருந்தார். இளம் பருவத்திலேயே பேரிலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் நன்கு கற்று செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்று புலவர்களாலும் மதிக்கப் பெற்றார்.

ஆங்கில மொழியைக் கற்று அதில் நன்கு எழுதும் தகுதி பெற்றிருந்தார். பல ஆங்கிலக் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் பயின்றார். இவர் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்ற போது பல வெற்றிகளைப் பெற்றார். மொழிபெயர்ப்பில் ஆங்கிலக் கவிஞரான 'டென்னிசன்' என்பாரின் கவிதைகளைத் தமிழில் கவிதை வடிவிலேயே மொழிபெயர்த்தமைக்காகப் பரிசு பெற்றுள்ளார் (வாழ்வியற்

களஞ்சியம், தொகுதி -9, ப. 248). அக்காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் மிகுந்திருந்தன. இவர் நாட்டுப்பற்று மிகுந்தவர். விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். பொதுக் கூட்டங்களில் ஆங்கில அரசைக் கண்டித்துப் பேசினார். வ.உ.சி.யின் நெருங்கிய நண்பராக விளங்கினார். மணியாச்சியில் நடந்த ஆஷ் கொலை வழக்கில் சிறைப்பட்ட நீலகண்ட பிரமசாரி கொடுத்த தகவலின் அடிப்படையில் சி.கே.சு.வின் வீடு காவல் துறையினரின் சோதனைக்கு உள்ளாயிற்று. திலகரின் மறைவிற்குப் பின் தேசிய அரசியலிலிருந்து விலகினார்.

தமிழகத்தில் இந்தி ஆதிக்கம் புகுந்து விட்டது; அதனை எதிர்த்துத் தமிழை நிலைபெறச் செய்ய வேண்டும் என்ற சிந்தனை எழுந்த காலத்தில் அது பெரும் மக்கள் போராட்டமாக மாறிற்று. தமிழகத்தில் பல்வேறு இந்தி எதிர்ப்புக் கூட்டங்களும் மாநாடுகளும் நடத்தப் பெற்றன. தமிழகத்து அறிஞர் பெருமக்கள் பலரும் அதில் கலந்து கொண்டனர். சி.கே.சு.வும் அதிற் கலந்து கொண்டார் (மறைதிருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, ப. 823).

## சி.கே.சு.வின் பதிப்புப் பணி (பெரியபுராணம்)

சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஏழு பகுதிகளாகப் பெரியபுராணத்தைப் பதிப்பித்துள்ளார். 1937இல் இப்பதிப்புப் பணியை அவர் தொடங்கியுள்ளார். நூலாகப் பதிப்பதற்கு முன்னரே சிறு சிறு பகுதிகளாக (சஞ்சிகை) எழுதி வெளியிட்டார். பின்னர் இப்பகுதிகளைச் சேர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். பெரிய புராணத்தின் முதல் சஞ்சிகை 1935 ஆண்டு வைகாசி 22ஆம் நாள் (5-6-1935) புதன் கிழமையன்று சேக்கிழார் சுவாமிகள் திருநட்சத்திரத்தினத்தில் சிதம்பரம் நடராசப் பெருமான் ஆலயத்தில் ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்து, வெளியிடப்பெற்றுள்ளது (பெரியபுராணப்பதிப்பு, முன்னுரை, முதற்பகுதி, ப. 19). பெரியபுராணத்தின் ஏழு பகுதிகளின் முதற் பதிப்பை அவரே வெளியிட்டுள்ளார். பல பகுதிகள் பல முறை வெளியிடப் பெற்றுள்ளன. சிவக்கவிமணி 1960இல் காலமானார். அவரது மறைவிற்குப் பின் க. மங்கையர்க்கரசி என்பவர் பதிப்பாசிரியராய் இருந்து வெளியிட்டுள்ளார். சிவக்கவிமணி தம்மை உரைப் பதிப்பாசிரியர் என்றே குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு பகுதியிலும் காண்டம், சருக்கம், புராணம் முதலியன தனித் தலைப்பிட்டுப் பிரித்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. பதிப்புகளில் இடம் பெற்றுள்ள பாடல்களின் எண்ணிக்கைத்

தொடர்ச்சி (Running Number), சருக்கம் ஆகியன மேல் அட்டைப் பகுதிகளிலும் தலைப்புப் பக்கத்திலும் தெளிவாகத் தரப்பெற்றுள்ளன.

## முதற்பகுதி

பெரியபுராணத்தின் முதற்பகுதியைச் சி.கே.சு. 1937ஆம் ஆண்டு வெளியிட்டார். இப்பகுதியில் 1-550 பாடல்கள் விருத்தியுரையுடன் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. திருமலைச் சருக்கம், தில்லை வாழ் அந்தணர் சருக்கம் என்னும் இரு சருக்கங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இதற்கு முன் இது சஞ்சிகையாக வெளிவந்துள்ளது. இம்முதற்பகுதியின் இரண்டாம் பதிப்பு 1960இலும் மூன்றாம் பதிப்பு 1975இலும் வெளியாகியுள்ளன. முதலிரு பதிப்புகளின் இரண்டாம் பதிப்புகள் வரை சி.கே.சு. இருந்து பதிப்பித்துள்ளார். முதற் பகுதியின் மூன்றாம் பதிப்பு வெளி வரும் போது சிவக்கவிமணி இல்லை. மங்கையர்க்கரசியாரே அதனை வெளியிட்டுள்ளார்.

## இரண்டாவது பகுதி

பெரியபுராணத்தின் இரண்டாம் பகுதி 1940இல் சி.கே.சு.வால் வெளியிடப் பெற்றது. இதில் 551 முதல் 1265 வரையுள்ள பாடல்கள் அடங்கியுள்ளன. எரிபத்த நாயனார் புராணம் முதல் சண்டேசுரநாயனார் புராணம் வரை இதில் இடம் பெற்றுள்ளன. இதன் இரண்டாம் பதிப்பினை 1968இல் மங்கையர்க்கரசி வெளியிட்டுள்ளார்.

## மூன்றாம் பகுதி

பெரியபுராணப் பதிப்பின் மூன்றாம் பகுதி 1943இல் பதிப்பானது. இது மூன்றாம் பகுதியின் முதற் பகுதியாகும். இப்பதிப்பு இரண்டு பாகங்களாகப் பிரித்து வெளியிடப்பெற்றுள்ளது. முதற்பாகம் 1943இல் வெளிவந்துள்ளது. முதற்பாகத்தின் இரண்டாம் பதிப்பு 1965இல் வெளிவந்துள்ளது. இரண்டாம் பாகம் முதற் பதிப்பு 1946இலும் இதன் இரண்டாம் பதிப்பு 1964இலும் வெளிவந்தன. முதல் பாகத்தில் 1266 முதல் 1694 ஆம் பாடல் வரை இடம் பெற்றுள்ளன. திருநாவுக்கரசு நாயனார் புராணம் மட்டும் முதற் பாகத்தில் அடங்கியுள்ளது. இரண்டாம் பாகத்தில் குலச்சிறை நாயனார் புராணம் முதல் நமிநந்தி அடிகள் புராணம் வரை உள்ளன. இதில் 1695 முதல் 1898 வரையிலான பாடல்கள் உள்ளன. திருநின்ற சருக்கம் முழுவதும் இம்மூன்றாம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

### நான்காம் பகுதி

நான்காம் பகுதியில் 1899 முதல் 2530 வரை உள்ள 623 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இது 1949இல் முதல் பதிப்பாக வெளிவந்துள்ளது. நான்காம் பகுதியின் இரண்டாம் பதிப்பு 1971இல் வெளிவந்துள்ளது.

### ஐந்தாம் பகுதி

வம்பறா வரிவண்டுச் சருக்கம் முதல் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தில் எஞ்சியுள்ள பாடல்கள் இப்பகுதியில் பதிப்பாகியுள்ளன. 2531ஆம் பாடல் முதல் 3154ஆம் பாடல் வரையில் உள்ள 1256 பாடல்கள் இதன் கண் அமைந்துள்ளன. இதனுடன் திருஞான சம்பந்த நாயனார் புராணம் முடிவுறுகிறது. இதன் முதல் பதிப்பு 1950இல் வெளியிடப்பட்டது. ஐந்தாம் பகுதியின் இரண்டாம் பதிப்பைக் க. மங்கையர்க்கரசி 1973இல் வெளியிட்டுள்ளார்.

### ஆறாம் பகுதி

வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் எஞ்சியுள்ள பகுதியும் (திருஞானசம்பந்த நாயனார் புராணம் நீங்க) அடுத்துள்ள வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தில் சில புராணங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. வம்பறா வரிவண்டுச் சருக்கம் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் தொடங்கிச் சிறுத்தொண்ட நாயனார் புராணம் முடிய மூன்று புராணங்கள் உள்ளன. பாடல்கள் 3155 முதல் 3747 வரை இதன்கண் இடம் பெற்றுள்ளன. இதன் முதல் பதிப்பு 1953இல் வெளியிடப்பட்டுள்ளது. ஆறாம் பகுதியின் இரண்டாம் பதிப்பு 1969இல் வெளிவந்தது.

### ஏழாம் பகுதி

ஏழாம் பகுதி இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. முதல் பாகத்தில் வார் கொண்ட வனமுலையாள் சருக்கத்தில் உள்ள கழற்றறிவார் நாயனார் புராணம் முழுதும் இடம் பெற்றுள்ளது. 3748 முதல் 3922 வரை 175 பாடல்கள் இப்பகுதியில் அடங்கியுள்ளன. இப்பகுதியின் இரண்டாம் பாகம் 'வார் கொண்ட வனமுலையாள்' சருக்கத்தின் எஞ்சிய புராணங்களும் மற்ற சருக்கங்களும் அமைந்துள்ளன. இதன் முதல் பதிப்பு 1954இல் வந்தது. இவ்விரு பாகங்களும் சி.கே.சு. இருந்த காலத்திலேயே வெளிவந்துள்ளன. இவற்றிற்கு இரண்டாம் பதிப்புகள் வெளிவரவில்லை.

## பதிப்புகுறித்த பிற தகவல்கள்

சி.கே.சு. பதிப்பில் முதல் பகுதியில் காணப்பெறும் சில தொடர்புடைய பகுதிகள் அடுத்தடுத்த பகுதிகளில் விடுபட்டுள்ளன. அனைத்து முதற் பதிப்புகளிலும் சி.கே.சுவின் முன்னுரையும் பதிப்புரையும் காணப்படுகின்றன. இரண்டாம் மூன்றாம் பதிப்புகளில் இவற்றுடன் பதிப்பாசிரியர் மங்கையர்க்கரசியின் பதிப்புரை அமைந்துள்ளது. பொருளடக்கம் அனைத்துப் பதிப்புகளிலும் இடம் பெற்றுள்ளது. சிவக்கவிமணியின் பெரியபுராணப் பதிப்பிற்குப் பிறர் அளித்துள்ள மதிப்புரைகள் முதற்பதிப்பில் மட்டும் காணப் படுகின்றன. அடுத்தடுத்து வந்த பதிப்புகளில் அவை இடம் பெறவில்லை. முதற்பதிப்பின் முதற்பகுதியில் தமது பதிப்புப் பணிக்குத் துணையாக இருந்த வேறுசில பெரியபுராணப் பதிப்புகள் குறித்துக் கூறுகின்றார்.

## பதிப்பில் இடம் பெற்ற பிற தகவல்கள்

1. நாயனார் திருநட்சத்திரம், 2. திருப்பதிகக்கோவை, 3. திருமுறைகண்ட புராணம், 4. திருத்தொண்டர் புராணச் சாரம், 5. திருத்தொண்டர் புராண வரலாறு, 6. சேக்கிழார் வரலாறு, 7. பழஞ்சுவடிகள் வரலாற்றுச் செய்திகள், 8. திருநாமக்கோவை, 9. சேக்கிழார் பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் (சில) முதலியன இவரது முதற்பாகம் முதற்பதிப்பில் அமைந்துள்ளன. நாயனார் பெயர் விளக்கங்கள் ஆறாம்பகுதி வரையில் அச்சிடப் பெற்றுள்ளன. இறுதிப்பகுதியான ஏழாம்பகுதியில் அவை இல்லை. சி.கே.சு. பதிப்பில் தில்லை வாழ் அந்தணர் சருக்க ஆராய்ச்சியுரை என்ற ஒரு பகுதியை எழுதி அமைத்துள்ளார். இது முதற் பகுதி முதற்பதிப்பின் இறுதியில் மட்டும் அமைந்துள்ளது. இரண்டாம் பதிப்பில் இப்பகுதி இல்லை. பதிப்புகளின் அனைத்துப் பகுதியிலும் 'பாட்டு முதற் குறிப்பு அகராதி' இடம் பெற்றுள்ளது.

'அருஞ்சொல் அகராதி' என்றொரு பகுதியைச் சி.கே.சு. அமைத்துள்ளார். இது முதல் பகுதி, ஏழாம் பகுதி ஆகிய இரண்டிலும் இல்லை. மற்ற பகுதிகளில் இடம் பெற்றுள்ளது. தேவாரப் பாடல்கள் சில பதிப்புகளில் நூல் இடையிலும், முடிவிலும் அமைந்துள்ளன. சில பதிப்புகளில் 'செய்யுள் மேற்கோள் அகராதி' என்றொரு பகுதியை எழுதியுள்ளார். மூன்றாம் பகுதியில் மட்டும் பிழை திருத்தம் காணப்படுகின்றது. மற்ற பகுதிகளில் இது இடம் பெறவில்லை. சி.கே.சு. பதிப்புகளில் பாயிரத்திலிருந்து முதற்காண்டம் தொடங்குகிறது. திருமலைச்சருக்கம் முதலாவது சருக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

## ஆராய்ச்சியுரைப் பதிப்பு

சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் பதிப்பு 'ஆராய்ச்சியுரைப் பதிப்பு' எனக் கூறத்தக்க அளவில் அமைந்துள்ளது. பின்வரும் நிலையில் இவரது பதிப்பு அமைந்துள்ளது. 1. பாடலுக்குப் பொருள் எழுதுதல் 2. விளக்க உரை 3. விளக்க உரையில் முக்கியமான சொற்களுக்குப் பொருள் எழுதுதல் 4. பிற இலக்கியங்களை ஒப்பிட்டுக் காட்டுதல் ஆகியன குறிப்பிடத்தக்கன. இலங்கையில் வெளியாகும் ஞானசித்தி என்ற பத்திரிகை (அக். 1935) இவர் உரை எழுதியுள்ள முறையைப் பாராட்டுகின்றது.

சில பாடல்களுக்கு உரை எழுதாமல் 'வெளிப்படை' எனக் குறித்துச் செல்கிறார். விளக்க உரை முடிந்ததும் பாட வேறுபாடுகளைக் குறிக்கின்றார். இலக்கணக் குறிப்புகள், சைவசித்தாந்தச் சாத்திரக் குறிப்புகள் முதலியனவற்றைத் தருகின்றார். 'எடுக்குமாக்கதை' எனத் தொடங்கும் பாடலுக்கு இம்முறையில் ஆழமான பொருள் எழுதியுள்ளார்.

சேக்கிழார் தாமே கூறுகின்ற கூற்று வருமிடங்களில் இது ஆசிரியர் கூற்று என எழுதுகிறார் (தடுத்தாட்கொண்ட புராணம் - பா. 349) சில சொற்களுக்குச் சிறப்பான பொருள் தருகின்றார். 'குயில் கூவ மயில் ஆலும்' என்பதில் 'ஆலும்' என்பதற்கு 'ஆடும்' எனப்பொருள் எழுதுகின்றார். ஆலுதல் - அசைந்தாடுதல். (திருநாளைப் போவார் புராணம், பா. 1489) பிற உரையாசிரியர்கள் கூறும் கருத்தினை மறுத்தும் எழுதுகிறார். பெரிய புராணப் பதிப்புகளில் சி.கே.சு. பதிப்பே நீள அகலம் என்ற அளவில் பெரிதாக உள்ளது. கோவைத்தமிழ்ச்சங்க வெளியீடு என்று ஒவ்வொரு பதிப்பிலும் குறித்துள்ளார். சி.கே.சு. 'திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம்' (1949, நா. பகு. முதல் பதிப்பு, 1992 - ஏழாம் பதிப்பு) பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம்' (1937, 1940, 1943 பதிப்புகள்) திருத்தொண்டர் புராணம் (1984) என்னும் பெயர்களில் பெரியபுராணத்தைப் பதிப்பித்துள்ளார். சேக்கிழாரின் பெயரை அருண்மொழித்தேவர் என்னும் சேக்கிழார் நாயனார் (ஏழாம் பதிப்பு) அருண்மொழித் தேவர் என்னும் சேக்கிழார் சுவாமிகள் (முதல் ஆறு பதிப்புகள்) சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித் தேவர் (முதல் பகுதி) என்னும் பெயர்களில் குறிப்பிட்டுள்ளார். ஏழாம் பதிப்பு ஆண்டு குறிக்கப் பெறாமல் உள்ளது. பதிப்புரிமை ஆசிரியருக்கே எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பெயரை முதற்கண் கூறியும், நூற்பெயரை முதற்கண் கூறிப் பின்னர் ஆசிரியர் பெயரைக் கூறியும் நூலுக்குப் பெயர்

அமைத்துள்ளார். இவரது அனைத்துப் பதிப்புகளிலும் முன்னுரை அமைந்துள்ளது.

பதிப்பு வரலாறு ஒவ்வொரு பதிப்பிலும் அமைந்துள்ளது. சி.கே.சு. பதிப்பிற்குப் பலர் மதிப்புரைகள் வழங்கி உள்ளனர். உ.வே.சா. உள்ளிட்ட பதினெண்மர் மதிப்புரை வழங்கியுள்ளனர். சி.கே.சு.வின் பெரியபுராணப் பதிப்புப் பணியைப் பாராட்டி, சித்தாந்தம், ஞானசித்தி, செந்தமிழ்ச் செல்வி, இந்து சாசனம் ஆகிய பத்திரிகைகள் எழுதியுள்ளன. ஒவ்வொரு பதிப்பிலும் நாயன்மார்களின் வரலாற்றை ஆராய்ந்து எழுதியுள்ளார். வெள்ளிப்பாடல்கள் எனக் கண்ணப்ப நாயனார் புராணம் 158-162 வரையுள்ள ஐந்து பாடல்கள் கூறப்படுகின்றன. இந்த ஐந்து பாடல்களையும் நீக்கி விட்டுப் பதிப்பித்துள்ளார். நூல் பகுதியில் பழந்தமிழ் எண்கள் குறிக்கப் பட்டுள்ளன.

திருநாவுக்கரசு சுவாமிகள், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருஞானசம்பந்த நாயனார் என நாயன்மார்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

## பாடவேறுபாடுகள்

சி.கே.சுப்பிரமணிய முதலியார் பாடவேறுபாடுகளை அந்தந்தப் பாடல்களுக்குக் கீழே குறித்துள்ளார். உயர்வ - உயர்வு (தடுத்தாண்ட கொண்ட புராணம் பா. 282) பொழிந்தார் - சொரிந்தார் (திருநகரச் சிறப்பு, பா. 130) முதலிய பாடவேறுபாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். சி.கே.சுவின் பதிப்புகள் எட்டு முறை பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளன.

# பெரிய புராண உரைத்திறன் - இலக்கிய, இலக்கண நோக்கு

மு. அ. மாணிக்கவேலு

பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாவதாக இடம் பெற்றிருப்பது திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம். அப்புராணத்தை இயற்றியவர் சேக்கிழார். அவர், அந்நூலினைப் பாட, சிவபெருமானே 'உலகெலாம்', என அடியெடுத்துக் கொடுத்தார். அந்நூலில், அவர் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றினைச் செம்மையுற எடுத்துரைத்துள்ளார். அந்நூலிற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரைகளுள் சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் உரைத்திறனை இலக்கண, இலக்கிய நோக்கில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். முதலில், உரையினது இலக்கணம், வகைகளைப் பற்றிக் காண்போம்.

## உரையின் வகைகளும் இலக்கணமும்

தொல்காப்பியர் காண்டிகை, உரை என இரண்டு வகைகளைக் குறிப்பிடுகிறார் (1603, 1604). இறையனார் அகப்பொருள் உரை கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத் திரட்டல், அகலங்கூறல் என நான்கு வகைகளைச் சுட்டுகிறது (ப. 14). நம்பியகப்பொருள் விளக்கம், இறையனார் அகப்பொருள் உரை கூறிய நான்கு வகைகளைக் கூறிப் பின்வருமாறு விளக்குகிறது.

> கருத்துரைத்தலாவது, சூத்திரத்து உட்கோள் உரைத்தல், கண்ணழித்தலாவது, சூத்திரத்துச் சொற்றோறும் சொற்றோறும் பொருளுரைத்தல், பொழிப்புத் திரட்டலாவது, சூத்திரத்துப் பொருளை எல்லாம் தொகுத்துரைத்தல், அகலங்கூறலாவது, சூத்திரப் பொருளைத் தூய்மை செய்வதற்குக் கடாவும் விடையும் உள்ளுரைத்து விரித்துரைத்தல் (பக். 8–9).

இதுவரை உரையின் வகைகளைக் கண்டோம். இனி, உரையின் பொது இலக்கணத்தை நன்னூலார் எடுத்துரைப்பதைக் காண்போம்.

> பாடங் கருத்தே சொல்வகை சொற்பொருள்
> தொகுத்துரை உதாரணம் வினா விடை விசேடம்

*விரிவதி காரந் துணிவு பயனோடு*
*ஆசிரிய வசனமென் றீரேழ் உரையே (21)*

மேலும், அவரே, அவ்வுரை காண்டிகையுரை, விருத்தியுரை என இருவகைப்படும் என்கிறார் (22, 23).

நாலடியார் பொழிப்புரை, விரிவுரை, கருத்துரை எச்சவுரை என நான்கு வகைகளை எடுத்துரைக்கிறது. இதனை,

*பொழிப்பகலம் நுட்பநூல் எச்சமிந் நான்கிற்*
*கொழித்தகலம் காட்டாதார் சொற்கள் - பழிப்பில்*
*நிரையாமா சேர்க்கும் நெடுங்குன்ற நாட*
*உரையாமோ நூலிற்கு நன்கு (319)*

என்ற பாடல் தெரிவிக்கிறது.

இத்தகைய உரை வகைகள் எல்லாம் பெரியபுராணத்திற்குச் சி.கே. சுப்பிரமணிய முதலியார் எழுதிய உரையில் இடம் பெற்றுள்ளன. அத்தகைய உரையின் சிறப்பை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம்.

### பல்துறையறிவு

ஒரு நூலுக்கு உரையெழுத வேண்டுமானால், பல்துறையறிவு தேவை. அந்த நூலைப் பற்றியல்லாமல், பிற இலக்கிய, இலக்கண அறிவும் தேவை. அத்தகைய தன்மையுடையவராக உரையாசிரியர் சி.கே.சு. விளங்கினார்.

### சங்க நூல்கள்

எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறநானூறு ஆகியவற்றிலிருந்து பாடலடிகளை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் உரையாசிரியர். அவர் நற்றிணை, ஐங்குறுநூறு பாடலடிகளை ஓர் இடத்திலும், கலித்தொகை பாடலடிகளை மூன்று இடங்களிலும், புறநானூற்றுப் பாடலடிகளைப் பதினேழு இடங்களிலும் பயன்படுத்தியுள்ளார்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் காஞ்சி மாநகரச் சிறப்பை விளக்கும் போது, 'கை விளங்கிய நிலையது காஞ்சிமா நகரம்' (1125) என்கிறார் சேக்கிழார். இதில் வரும் கை விளங்கிய என்ற தொடருக்கு, 'கை - ஒழுக்கம்' என்று விளக்கம் கூறியுள்ளார் அவர்; மேலும் 'கையொன் றறிகல்லாய்' (கலித் - 95) என்று கலித்தொகைப் பாடல் அடியைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

அதே புராணத்தில், நில வருணனையில், 'செறு' என்ற சொல் (1119) வருகிறது. அதற்கு, செறு - வயல். செறு என்பது அறுவா நாட்டு வழக்கு என்று விளக்கியுள்ளார் அவர். அதற்குச் சான்றாக, 'செறுவிற் பூத்த சேயிதழ்த் தாமரை' (புறநா. 397) என்று புறநானூற்று அடியை எடுத்தாண்டுள்ளார்.

பத்துப்பாட்டு நூல்களுள் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம், பட்டினப்பாலை ஆகிய நூல்களில் வரும் அடிகளை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். அவர், திருமுருகாற்றுப்படை பாடலடிகளை 25 இடங்களிலும், பெரும்பாணாற்றுப்படை அடிகளை 2 இடங்களிலும், மதுரைக்காஞ்சி அடிகளை 2 இடங்களிலும், பொருநராற்றுப்படை அடிகளை ஓரிடத்திலும் பட்டினப்பாலை அடிகளை ஓரிடத்திலும் கையாண்டுள்ளார்.

கண்ணப்ப நாயனார் புராணத்தில், 'அரும்பெறல் தம்பிரானார்க்கு அமுது கொண்டணைய வேண்டி' என்ற தொடர் (781) வருகிறது. அரும்பெறல் என்பதற்குப் பெறுதற்கரிதாகப் பெற்றவர் என்று விளக்கமளித்துள்ளார் உரையாசிரியர். 'அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக' என்று திருமுருகாற்றுப்படை அடியையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தில், 'விழவறாத அம்பொன் மணிவீதி' என்ற தொடர் (1175) இடம் பெற்றுள்ளது. இதற்கு, காஞ்சி நகரத்தில் ஆண்டின் ஒவ்வொரு மாதமும் பல விழாக்கள் நிகழ்வது இன்றும் சிறப்பாகும் என்று இன்றைய நிலையைக் காட்டியுள்ளார் உரையாசிரியர். மேலும், அவர் விழாக்கள் வீதிக்கும் சிறப்புத் தருவன என்று கூறி, 'விழவறாதன விளங்கொளி மணிநெடு வீதி (ஏயர்கோன் புரா. 3) என்ற அடியை மேற்கோளாகக் காட்டியுள்ளார். இதன் மூலம் ஒத்த செய்திகள் பெரியபுராணத்தில் எங்கெங்கு இடம் பெற்றிருந்தாலும், ஒப்பிட்டுக் காட்டக் கூடிய ஆற்றலுடையவர் சி.கே.சு. என்பது தெளிவாகிறது. இது மட்டுமல்லாமல், 'விழவு நின்ற வியன்மறுகு' (மதுரைக்காஞ்சி - 328) என்று மதுரைக்காஞ்சி அடியையும் சான்றாகக் காட்டியுள்ளார்.

### நீதிநூல்கள்

நீதிநூல்களுள் திருக்குறள், நாலடியார், திரிகடுகம் ஆகிய நூற்செய்திகளை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் சி.கே.சு. அவர் இவற்றுள் திருக்குறள் கருத்துகளையும், உரைக்குறிப்பையும் ஏறக்குறைய 223 இடங்களில் கையாண்டுள்ளார்; நாலடியார்

பாடலடியை நான்கு இடங்களிலும், திரிகடுகம் பாடலடியை ஓரிடத்திலும் பயன்படுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில், 'கரையில் கவலைக் கடற்கோர் கரை பற்றினார் போன்று' என்ற அடி (2628) இடம் பெற்றுள்ளது. இதற்குப் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார் உரையாசிரியர்.

> கவலைக்கடல் – கவலையாகிய கடல்; மிகுதி பற்றிக் கடல் என்றார். கவலைக் கடற்கு – கடலைக் கடந்தேறுதற்கு; கரை பற்றுதல் – கரையினைத் தலைப்படுதலால், அதனை நெகிழவிடாது பற்றிக் கொள்ளுதல். 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' என்றும், 'தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றலரிது' என்றும் வரும் திருக்குறள் கருத்துக்களை நோக்குக

என்று உரையெழுதியிருப்பதின் நயம் போற்றுதற்குரியது. முன்னர் கூறிய உரை இலக்கணத்திற்குப் பொருந்துமாறு இவ்வுரை அமைந்துள்ளது.

திருநாளைப்போவார் நாயனார் புராணத்தில் வரும், 'சேக்கை வெறிமலர்த்தண் சினைக்காஞ்சி விரிநீழல் மருங்கெல்லாம்' என்ற தொடருக்கு (1149) சேக்கை - நீழல், மருங்கு - சேவல்கள் தங்கும் பரந்த நீழலின் பக்கங்களில். சேக்கை - துயிலுமிடம் என்றலுமாம் என்று விளக்கமளித்துள்ளார் உரையாசிரியர். இதற்கு, 'சேக்கை மரனழியச் சேணீங்குபுள்' (நாலடி) என்று நாலடியார் பாடலடியைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

## ஐம்பெருங்காப்பியங்கள்

ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி ஆகிய நூல்களில் இருந்து பாடலடிகளையும், உரைக்குறிப்புகளையும் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் உரையாசிரியர். இவற்றுள் அவர் சிலப்பதிகாரப் பாடலடிகளை 26 இடங்களிலும், சிந்தாமணிப் பாடலடிகளை 8 இடங்களிலும், மணிமேகலைப் பாடலடிகளை 4 இடங்களிலும் சான்றாகப் பயன்படுத்தியுள்ளார்.

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தில், 'புலி இமயமால் வரையில் வைக்க ஏகுவோன் தனக்கு' என்ற தொடர் (1162) இடம் பெற்றுள்ளது. இதற்குக் கரிகாற் சோழர் இமயமலை வரை நாடு கொண்டு அடிப்படுத்தி, இமயத்தில் தமது புலிக்குறியைப்

பொறித்து வெற்றி கொண்டனர் என்பது வரலாறு என்று செய்தியைக் கூறிய உரையாசிரியர், அதனைச் சான்றுகளுடன் விளக்குகிறார்.

இதனை, 'அசைவி லூக்கத்து நசை பிறக்கொழியப் பகை விலக்கியதிப் பயங்கெழு மலையென விமையவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு' என்ற சிலப்பதிகாரத்தாலும் (இந்திரவிழா - காதை 95-98) அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையாலுமறிக. அவ்வாறு இமயம் நோக்கிப் புறப்படும் போது, வேடன் காஞ்சியின் பெருமை கண்டு வந்து சொன்னானாகக் கரிகாற்சோழர் அங்குச் சென்று, காடெறிந்து, நாடு கண்டு, நான்கு காதம் எல்லை வகுத்து நகராக்கி மதில் போக்கிக் குடியிருத்தினர்; காரிக்கடவுளை வழிபட்டு அவர்பாற் செண்டு பெற்று ஏகி, அச்செண்டினைக் கொண்டு இமயத்தலையில் எறிந்து வெற்றி பெற்றனர் என்பது இப்பாட்டிற் குறித்த சரித வரலாறாகும். இதன் மூலம் உரையாசிரியரின் வரலாற்றுப் புலமையை அறிய முடிகிறது.

மேலும், சோழர் இமயத்தில் புலி பொறித்த வரலாறு பற்றி 552-608இல் உரைத்தவையும் பார்க்க என்று கூறியுள்ளார். இக்கருத்து, மேலும் இரண்டு இடங்களில் சுட்டப்பட்டுள்ளது என்பதை மேற்கூறிய குறிப்பால் உணர முடிகிறது.

சண்டேசுர நாயனார் புராணத்தில், காவிரி ஆறு எந்நாளும் பொய்யாது அளிக்கும் என்ற செய்தி (1206) இடம் பெற்றுள்ளது. அவ்விடத்தில், 'தவாநீர்க் காவிரிப் பாவை' என்ற மணிமேகலை அடியைச் சான்றாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர்.

திருநாளைப்போவார் நாயனார் புராணத்தில் வரும், 'பாளை விரி மணங்கமழும்' என்ற பாடலுக்குப் (1044) பின்வருமாறு உரையெழுதி யுள்ளார் உரையாசிரியர். அவர்,

> இளம்பாளைகள் விரிந்து மணங்கமழ்கின்றனவும், பசிய காய்களையுடைய வலிய குலைகளைக் கொண்டனவு மாகிய தென்னை மரங்களின் அடிப் பாகத்தில் மரம் அசையுமாறு முட்டிப் பெரிய நீர்ப் பள்ளங்களினின்றும் மேலெழும்பிப் பாய்ந்த வாளை மீன்கள், தாம் கீழே புதையச் சொரிந்த அத்தென்னைகளின் நெற்றுக்கள் மிதக்கும்படி வண்மையுடைய பலாமரங்களின் நீண்ட முதிர்ந்த கனிகள் கிழிந்து பெருகிய தேனின் பெருக்கிலே (அவ்வாளை மீன்கள்) எழுந்து குதிக்கும். 'காய் மாண்ட தெங்கின் பழம் வீழ' என்ற சிந்தாமணிப் பாட்டை இங்கு ஒப்பு நோக்கி, இதன் உயர்வு கண்டு கொள்க

என்று கூறியுள்ளார். இதன்மூலம் "சிந்தாமணிக் கருத்தை விடப் பெரியபுராணக் கருத்து உயர்ந்தது என்பதை நீங்களே உணர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறிய நயம் போற்றுதற்குரியது.

## பக்தி இலக்கியம்

பன்னிரு திருமுறைகளுள் பதினொரு திருமுறைப் பாடலடிகளைப் பல இடங்களில் மேற்கோளாகப் பயன்படுத்தி யுள்ளார் உரையாசிரியர்; பெரியபுராணத்தில் வரும் ஒப்புமையுடைய தொடர்களையும், கருத்துகளையும் அங்கங்கே ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

## திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் புராணத்தில், அவர் செய்த ஏழு கட்ட திருத்தலப் பயணங்களை வரைபடத்துடன் சுட்டியுள்ளார் உரையாசிரியர். அப்படிச் செல்லும் பொழுது பாடிய பாடல்களை, வழியில் அருளியது, தலத்தை வலங் கொள்ளும் பொழுது அருளியது, திருக்கோயிலில் இறைவரது திருமுன்பு அருளியது, தலத்தில் வைகுநாள் பலமுறை விளம்பிய பதிகங்கள் எனப் பிரித்து உரையாசிரியர் சுட்டியுள்ள திறம் போற்றத்தக்க ஒன்றாகும்.

திருஞானசம்பந்தர் ஒவ்வொரு தலத்திலும் பாடிய பாடல்களில் முதற் பாடலும், இறுதிப்பாடலும் கொடுத்து விளக்கியுள்ளார் உரையாசிரியர்; மேலும், அதற்குப் பதிகக் குறிப்பு என்ற தலைப்பிட்டு எக்காரணத்திற்காக அப்பாடல் பாடப்பட்டது என்பதை விளக்கியுள்ளார். பதிகப் பாட்டுக் குறிப்பு என்ற தலைப்பில், பதிகத்திலுள்ள பாடற் கருத்தைச் சுருக்கித் தந்துள்ளார்.

சம்பந்தர் தேவாரத்திலிருந்து, 337 இடங்களில் பாடலடிகளை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். திருஞான சம்பந்த நாயனார் புராணத்தில், சீர்காழி நகரை வருணிக்கும் போது, 'வயலெங்கும் கடல் வெள்ளம்' (1911) என்கிறார் சேக்கிழார். இதனை, நீர்ப்பெருக்குடன் கயல்கள் நிறைவன என்பது கயலுடன் கூடிய வெள்ளம். கயலின் கூட்டம் என்பாருமுண்டு என்று விளக்க மளித்துள்ளார் உரையாசிரியர். இதற்குச் சான்றாக, 'மடையில் வாளை பாய' (பிள். தேவா. திருக்கோலக்கா) என்ற பாடலடியைப் பயன்படுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்த நாயனார் சரித ஆதரவுகள் என்ற தலைப்பில் அவர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை 16 உட்தலைப்புகளில் தேவார அகச்சான்றுகளும் மற்றும் சைவத் தெய்வத் திருமுறை

களிலும் கல்வெட்டுகளிலும் கண்டவற்றுட் சிலவும் கொண்டு தொகுத்துக் கூறியுள்ளார் உரையாசிரியர்.

## திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் நாயனார் புராணத்தில், 'புராணப் பாடற்றிரட்டும், அற்புதத் தேவாரத்திரட்டும் என்ற தலைப்பில், அவர் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும் பாடல்களை 26 உட்தலைப்புகளில் தொகுத்துச் சுட்டியுள்ளார் உரையாசிரியர்; பல புராணங்களில் வரும் திருநாவுக்கரசரைப் பற்றிய தோத்திரங்களைத் தொகுத்து, கே. ஆறுமுக நாயனார் உதவ அதனையும் முற்சேர்க்கையாகச் சேர்த்துக் கூறியுள்ளார்.

நாவுக்கரசர் ஒவ்வொரு தலத்திலும் பாடிய பதிகங்களின் முதற்பாடலும், இறுதிப்பாடலும் கொடுத்து விளக்கியுள்ளார் உரையாசிரியர். மேலும், அதற்குப் பதிகக் குறிப்பு என்ற தலைப்பிட்டு, எக்காரணத்திற்காக அப்பாடல் பாடப்பட்டது என்பதை எடுத்துரைத்துள்ளார்; பதிகப்பாட்டுக்குறிப்பு என்ற தலைப்பில், பதிகத்திலுள்ள பாடற்கருத்தைச் சுருக்கியும், அரும்பதவுரையும் தந்து விளக்கியுள்ளார்.

நாவுக்கரசர் தேவாரத்திலிருந்து பாடலடிகளை 337 இடங்களில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் உரையாசிரியர்.

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வரும், 'அகங் குடையப் படருழந்து' என்ற தொடருக்குப் (1315) பின்வருமாறு விளக்கமளித்துள்ளார் உரையாசிரியர்.

> குடைதல் – வயிற்றை மிகவும் உளையச் செய்தல், படர் – துன்பம். 'தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு தொடக்கி, முடக்கியிட ஆற்றேன்', 'வயிற்றோடு தொடக்கி முடக்கியிட', 'சுடுகின்றது சூலை', 'உடலுள்ளறு சூலை', 'என் வயிற்றினகம்படியே பறித்துப் புரட்டி யறுத் தீர்த்திட நான் அயர்ந்தேன்', 'சலித்தே யென் வயிற்றினகம் படியே கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன அலுத்தேன்', 'வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தாலென் வேதனையான' என்ற நாயனார் திருவாக்குகள் அச்சூலையின் முடுகிய நிலையினை விளக்கும் அகச்சான்றுகளாவன.

நாவுக்கரசர் சென்ற திருத்தல யாத்திரையை வரைபடத்துடன் விளக்கியுள்ளார் உரையாசிரியர். இராவ் பகதூர் சி.எம். இராமசந்திரன்

செட்டியார் எழுதிய அப்பர் சுவாமிகளது சரித்திர ஆராய்ச்சிக் குறிப்புகளைப் பிற்சேர்க்கையாகச் சேர்த்து, தாம் கூறிய கருத்துகளுக்கு வலுவூட்டியுள்ளார் சி.கே.சு.

## சுந்தரர்

நம்பியாரூரர் ஒவ்வொரு தலத்திலும் பாடிய பதிகங்களின் முதற்பாடலும், இறுதிப்பாடலும் கொடுத்து விளக்கியுள்ளார் உரையாசிரியர். மேலும், அதற்குப் பதிகக் குறிப்பு என்ற தலைப்பிட்டு எக்காரணத்திற்காக அப்பாடல் பாடப்பட்டது என்பதை எடுத்துரைத்துள்ளார்; பதிகப் பாட்டுக் குறிப்பு என்ற தலைப்பில், பதிகத்திலுள்ள பாடற் கருத்தைச் சுருக்கியும், அரும்பதவுரையும் தந்து விளக்கியுள்ளார். அவர் சென்ற தல யாத்திரை பற்றிய வரைபடத்தையும் கொடுத்துள்ளார். சுந்தரர் பாடிய பதிகம் முழுவதையும் சில இடங்களிலும், முக்கியமான 4 (அ) 5 பாடல்களைச் சில இடங்களிலும் விளக்கியுள்ளார் உரையாசிரியர்.

சுந்தரர் தேவாரத்திலிருந்து பாடலடிகளை 208 இடங்களில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் உரையாசிரியர். கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும் 'பெய் கருமுகில்' (736) என்றதனைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> பெய் - மழை பெய்யும் சூல் கொண்ட என்க. கருமுகில் - மழை பெய்யும் வெண்முகிலும் உளதாகலின் அதனின்றும் பிரிக்கக் கருமுகில் என்றார். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். வெண்முகில் மழைபெய்வதனை, ஒளிகொள் வெண் முகிலாய்ப் பரந்தெங்கும் பெய்யுமாமழைப் பெருவெள்ளம்' என்ற ஆளுடைய நம்பிகளது தேவாரத் தானறிக

## மாணிக்கவாசகர்

பொய்யடிமையில்லாத புலவர் யார்? என்ற கேள்விக்கு, மாணிக்கவாசகர்தான் என்று அதன் வன்மை மென்மைகளை ஆராய்ந்து கூறியுள்ளார் உரையாசிரியர். மேலும், அவர் தனியடியாரல்லர்; தொகையடியார் என்றும் கூறியுள்ளார் (3940).

மாணிக்கவாசகர் பாடிய திருவாசகப் பாடலடிகளை 366 இடங்களிலும், திருக்கோவையார் பாடலடிகளை 38 இடங்களிலும் கையாண்டுள்ளார் உரையாசிரியர். ஏனாதி நாயனார் புராணத்தில் வரும் 'விடக்கு' என்ற சொல்லுக்கு (643) உணவாகிய மாமிசம்.

அதனையுடைய பிராணிக்கு வந்தது ஆகுபெயர் என்று விளக்கிய உரையாசிரியர், 'வேற்று விகார விடக் குடம்பினுட் கிடப்ப' என்ற திருவாசகமும் காண்க என்று மேற்கோளாகச் சுட்டியுள்ளார்.

எறிபத்த நாயனார் புராணத்தில் வரும் 'பன்னகாபரணர்' (590) என்ற சொல்லிற்குப் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார் உரையாசிரியர்.

> பன்னகம் – பாம்பு – பாம்புகளை அணியாக அணிந்தவர் சிவபெருமான். 'குஞ்சரங் கோளிழைக்கும் பாம்பு' (திருக்கோவையார் – 21) என்றபடி. யானையையும் கட்டியிட வல்ல பாம்புகளை அணியாகப் பூண்டவர்க்குச் சாத்தும் மலரை யானை பறித்துச் சிந்தியது என்றதொரு குறிப்பும் காண்க.

என்று விளக்கியுள்ளதிறம் போற்றுதற்குரியது.

## திருவிசைப்பா

திருவிசைப்பா பாடலடிகளை 48 இடங்களில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும், 'இந்தனம்' என்ற சொல்லிற்கு (794) இங்குச் சிறுவிறகு குறித்தது என்கிறார் உரையாசிரியர். இதற்கு, 'இந்தன விலங்கலெறி புனந் தீப்பட்டெரிவ தொத்து (திருக்களந்தை யாதித்தேச்சரம் - 2) என்பது கருவூர்த்தேவர் திருவிசைப்பா என்று சான்றாகக் காட்டியுள்ளார்.

## திருப்பல்லாண்டு

சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டுப் பாடல்களை 8 இடங்களில் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் உரையாசிரியர். திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வரும், 'இங்கு யார் பெற்றனர்? என்ன இறைஞ்சினர்? என்ற தொடருக்கு (1343) இவ்வாறு அருள் பெற்றவர், தாம் பெற்ற அருளின் பெருஞ்சிறப்பை எண்ணிப் பாராட்டி அருளிற்றிளைத்தலும் பெரியோர் மரபு என்று விளக்கியுள்ளார் உரையாசிரியர். நாவுக்கரசர் தேவாரத்திலிருந்தும் திருவாசகத்திலிருந்தும் மேற்கோள் காட்டிய அவர், 'சேவடிக்கீழ் ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்' என்ற திருப்பல்லாண்டும் பிறவும் பார்க்க என்று கூறியுள்ள திறம் எண்ணி மகிழத்தக்கது.

## திருமந்திரம்

திருமந்திரப் பாடலடிகளை 42 இடங்களில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் இடம் பெற்றுள்ள தொடர், 'அடியார்க்கும் அடியேன்' என்பது (1266) அதற்கு, 'அவர்க்கு அடிமை செய்யும் தகுதியில்லேன் ஆதலின் அவரது அடியார்க்கு அடிமை செய்வேன். அதுவே போதியதாய் எனக்குச் செம்மை பயப்பிக்கும் என்றபடியாம்' என்ற விளக்கத்தைத் தந்துள்ளார். சான்றாக,

> அடியா ரடியா ரடியார்க் கடிமைக்
> கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்,
> அடியா ரருளா லவனடி கூட,
> வடியா னிவனென் றடிமை கொண்டானே

என்ற திருமந்திரப் (8-தந் - 503) பாடலைக் காட்டியுள்ளார்.

திருமூலரைப் பற்றித் துடிசைகிழார் அ. சிதம்பரனார் எழுதிய குறிப்புகளையும், மா. இராசமாணிக்கம் எழுதிய குறிப்புகளையும் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளார். திருமூலர் பற்றிய வரலாற்றுச் சிறப்புகளையும், 23 தலைப்புகளில் திருமந்திர நூலின் சிறப்புகளையும் எடுத்துரைத்துள்ளார் சி.கே.சு. மேலும், திருமந்திரம் முழுவதையும் படிக்க முடியாதவர்களுக்காகத் 'திருமந்திர மாலைத் திரட்டு' என்ற தலைப்பில் 350 பாடல்களைத் தொகுத்துக் கூறியுள்ளார்.

### காரைக்காலம்மையார்

காரைக்காலம்மையார் பாடிய பாடலடிகளை 34 இடங்களில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும், 'தழைகதிர்ப் பரிதி' என்ற தொடருக்குப் (778) பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்.

> தழைகதிர்ப்பரிதி – (மதியின் கதிர்போலன்றித்) தழைத்து வீசும் வெங்கதிருடைய ஞாயிறு. தழைத்தலாவது காலைப் போதிலிருந்து நாட்கூறு மேலேறக் கதிரின் ஒளியும் வெப்பமும் கூர்ந்து மிகுதல். "காலையே போன்றிலங்கு மேனி, கடும் பகலின், வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு; மாலையின் றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை" என்று அற்புதத் திருவந்தாதியில் அம்மையார் ஞாயிற்றின் கதிர் தழைத்துக் காட்டும் வகையை அழகு பெற எல்லாம் இறைவனது திருமேனியாக உவமித்துக் காட்டுதல் காண்க.

என்று விளக்கியுள்ள திறம் பாராட்டுதற்குரியது. காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதி முழுமைக்கும் உரையெழுதியுள்ளார் உரையாசிரியர்; நூல் பற்றிய சில குறிப்புகளையும் கொடுத்துள்ளார்; அவருடைய திருவிரட்டை மணிமாலைக்கும் உரையெழுதியுள்ளார்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் பாடிய க்ஷேத்திரத் திருவெண்பா பதினோராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. அந்நூலைப் பற்றியும், ஆராய்ச்சிக் குறிப்புகளையும் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளார். மேலும், அவர் பாடிய 24 பாடல்களுக்கும் உரை விளக்கம் கொடுத்துள்ளார். இராவ்பகதூர் சி.எம். இராமச்சந்திரன் செட்டியார் காடவர் கோனைப் பற்றி எழுதிய குறிப்புகளையும் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளார்.

கழறிற்றறிவார் நாயனார் என்னும் சேரமான் பெருமாள் நாயனார் அருளிய திருவாரூர்த் திருமும்மணிக்கோவைக்கு உரையெழுதிப் பிற்சேர்க்கையாகச் சேர்த்துள்ளார் உரையாசிரியர்.

## பெரியபுராணம்

கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும் 'எந்தையார்' (780) என்ற சொல்லுக்கு, எமது தந்தையார் என்று விளக்கம் அளித்துச் சம்பந்தர் பாடலையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார் உரையாசிரியர். மேலும் சான்றாக, 'யாவர்க்குந் தந்தை தாயெனுமவரிப் படி யளித்தார்' (திருஞான. புராண. 69) முதலிய திருவாக்குகள் காண்க என்று விளக்கியுள்ளார்.

## புராணங்கள்

கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரர் புராணம், பேரூர்ப் புராணம் முதலிய புராணங்களில் இருந்து பாடலடிகளை முறையே 42, 54, 11, 12 ஆகிய இடங்களில் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர்.

கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும் 'முருகவேள்' (659) என்ற சொல்லுக்குப் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார் உரையாசிரியர்.

"முருகவேள் - முருகு - இளமை எஞ்ஞான்றும் மாறாத - அழியாத - இளமையுள்ள வேள். வேள் - விரும்பப்படுபவன். இப்பெயரானறியப்படும் கரிய வேளாகிய அழகிய மன்மதனு முளனாதலின் அவனினின்றும் பிரித்துணரும் பொருட்டு முருகவேள் எனப் பிறிதின் இயைபு நீக்கிய விசேடணந் தந்தோதினர். இவரது

இளமையும் பேரழகும் பற்றி இவர்க்குக் குமரன் - இளையோன் முருகன், குழகன் முதலியவாக வழங்கும் பெயர்களும் காண்க.

> ஆயிரங் கோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி
> மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னிற்
> றூயநல் லெழிலுக் காற்றா தென்றினினைய தொல்லோன்
> மாயிரு வடிவிற் கெல்லா முவமையார் வகுக்க வல்லார்
> என்பது முதலிய கந்தபுராணத் திருவாக்கும் பிறவுங்
> காண்க

என்று விளக்கியுள்ள திறம் போற்றுதற்குரியது.

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் 'பருக்கையுடன் - ஒக்க - ஏந்தி - எறிந்தார்' என்ற தொடர் (1682) வருகிறது. அதற்கு, 'நவமின் சுடர்மணி.................. மணி போ கட்டி (1428) என்றவிடத்தும் மணிகளைத் திருவலகிட்டு மாற்றுதல் கூறப்பட்டது. ஆயின், அவை தேவர் முடிகளினின்று வீழ்ந்த சிறுமணிகள். அடியார் அடிகளை ஊறுபடுத்தாவாயினும் குப்பை என மாற்றப்பட்டன. 'அந்தியும் பகலும் தொண்ட ரலகிடுங் குப்பை யாக்கும்' என்ற திருவிளையாடற் புராணம் காண்க என்று விளக்கியுள்ளார்.

கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும், 'காதலின் நோக்கி நிற்பர்' என்ற தொடருக்கு (761) போய் வரும் எண்ணம் மேலிட்டதாகவே முன்னர் வந்தது போல் மீண்டு வராது, சென்று, சிறிது தூரத்தில் நின்றபடியே ஆசையோடு நோக்கி நிற்பாராயினர். இந்நிலையினையே, 'அன்புட னோக்கி நிற்ப ரழுவர்கை தொழுவர் வீழ்வர் இன்புற வெழுவர் பின்பா லேகுவ ரிரங்கி மீள்வர்' எனவரும் திருப்பாட்டிற் (திருவாதவூரர் புராணம் - திருப்பெருந்துறைச் சருக்கம் - 128) கூறுதலும் காண்க என்று கூறியுள்ளார்.

அதே புராணத்தில் ஒளிகளைப் பற்றிப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> "கண்டம், கண்டாகண்டம், அகண்டம் என ஒளிகள் மூவகைப்படும். கண்ட ஒளிகளாகிய விளக்கு முதலியவையும், கண்டாகண்ட ஒளிகளெனப்படும் இரவி - மதி முதலியனவும் அகண்ட ஒளியாகிய சிவவொளியின் முன்னர்ப் பிரகாசிக்க மாட்டா. சிவவொளியே ஏனை எல்லாவொளிகளுக்கும் ஒளி தரும் காரணமாம். ஆன்ம ஞானம், ஏனை அந்தக்கரண ஞான, இந்திரிய ஞானங்களின் மிக்கு அவற்றிற்கு

> மூலமாய் நிற்பது போலச் சிவவொளியே ஏனை எல்லாவொளிகட்கும் மேலாய் நிற்பது ........ 'ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தணிதரு மொளியாகி' என்ற பேரூர்ப் புராண (நிருத்தப் படலம்) மும் காண்க.

என்று விளக்கியுள்ளார்.

## கம்பராமாயணம்

கம்பராமாயணப் பாடலடிகளைப் பத்து இடங்களில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வரும், 'காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையா ரெனும் பெயரார்' என்ற தொடருக்கு (1288) உடற்பொலிவும் கண்டார் விரும்பும் கட்டழகும் மணமகனிடத்து வேண்டப்பட்ட தன்மைகள் என்ப. கண்களெண்ணிலாத வேண்டுங் காளையைக் காண வென்பார் (171) முதலியவற்றின் கருத்துகள் காண்க. 'ஆடவர் பெண்மையை யாவாவுந் தோளினாய்' என்று கம்பர் பாடியதும் இக்கருத்துப் பற்றியது என்று கூறியுள்ளார்.

## திருவாய்மொழி

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் வரும், 'மாமல்லை' (1718) என்ற ஊர்ப்பெயரைப் பின்வருமாறு விளக்குகிறார் உரையாசிரியர்.

> இது 'கடன்மல்லபுரம்' எனவும், மாமல்லபுரம் எனவும் வழங்கும். மாமல்லபுரம் என்பது மாவலிபுரம் என்றும், மல்லை என்றும் மருவியது போலும். மாவலிபால் மண்ணிரந்து அவனைச் சங்கரித்த திருமாலிருந்த தலமாதலின் வைணவர்களும் இதனைத் தங்களுடைய பெருந்தலங்களுள் ஒன்றாகக் கொண்டாடுகின்றனர். 'பிணங்கள் இடுகாட்டிற் பிஞ்ஞகனொடு .......... கடன்மல்லை' என்பது திருவாய்மொழி. இங்குள்ள திருமால் மாவலிமிண்டன் என்று வழங்கப்படுவர். இது வாமனாவதார நிகழ்ச்சியின் பின் திருமால் சிவபூசை செய்த தலம் என்பர். இங்குச் சந்தன மரத்தினாற் சமைக்கப்பட்ட கருப்பக்கிருக மண்டபத்தில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளமை, 'சந்தனச் சினைமிசைப் பவளமென் கொழுந்து வளரும்' என்றதன் உண்மையை விளக்கி நிற்றல் குறிக்கத்தக்கது.

என்ற ஆராய்ச்சியுரை பாராட்டுதற்குரியது. சைவ நூலுக்கு உரை எழுதியவர் வைணவ நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்கியிருப்பதிலிருந்து உரையாசிரியரின் சமயப் பொதுமையையும் உணர முடிகிறது.

## திருப்புகழ்

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழை 5 இடங்களில் மேற்கோளாகக் கையாண்டுள்ளார் உரையாசிரியர். ஏனாதி நாயனார் புராணத்தில் வரும், 'வென்றவன் மார்பு' என்ற தொடருக்கு (627) வென்றவன் சாரிகை முறைமையில் தொடையறத் தாள்வெட்டி வீழ்த்தியதனாலே தன்னை வென்றவனாக எண்ணிய அவன். மார்பு - அவ்வாறு எண்ணி இறுமாப்படைந்த நெஞ்சுக்கு இடனாகிய மார்பு என்பது குறிப்பு. வீரர்களது வீரச் செருக்குக்கு நிலைக்களன் மார்பிடமே என்பது .......... 'நானென்று மார்தட்டும் பெருமாளே' (திருப்புகழ்) முதலியவற்றான் அறிக என்று விளக்கியுள்ளார்.

## பாரதம்

பாரதத்தில் வரும் பாடலடியை ஓரிடத்தில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும் 'வில்லியார்' என்ற சொல்லிற்கு (741) 'வில்லவர்க்குள்எல்லாம் மிக்க வல்லவராகிய தலைவர் என்ற பொருளில் வந்தது. வில்லுக்கு விசயன் என்றபடி முற்பிறப்பிலே வில்வித்தையில் தலைவராய் நின்றதும் குறிப்பு என்று விளக்கியுள்ளார் உரையாசிரியர். 'வரிந்த வெஞ்சிலைக்கு மண் மதித்த வீரனே' என்றார் வில்லிபுத்தூராரும் என்று பாரதத்தைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

## ஔவையார்

ஔவையார் பாடிய பாடல்களை 3 இடங்களில் கையாண்டுள்ளார் உரையாசிரியர். திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வரும் 'ஒக்கல் வளர் பெருஞ்சிறப்பு' என்ற தொடருக்கு (1281) 'ஒக்கல் - சுற்றத்தார். தம்மோடு ஒத்த குலமும் மரபும் பண்பும் உடைமையால் இப்பெயர் பெற்றனர் என்ப. தாமே வந்து சுற்றிச் சூழுமியல்பு வேண்டப்படுதல் பற்றி, இவர் சுற்றம் எனப்படுவர் என்று குறிக்க, வளர் என்ற அடைமொழி தந்து ஓதினார் என்று சேக்கிழாரின் கவிநயத்தை எடுத்துரைத்துள்ளார் உரையாசிரியர். சுற்றத்திற்கு அழகு சூழ விருத்தல் (ஔவை) என்று ஔவையாரின் பாடலடியைச் சான்றாகக் காட்டி விளக்கியுள்ளார்.

இதுவரை சங்க இலக்கியம் முதல் ஔவை இலக்கியம் வரையுள்ள இலக்கியங்களில் இருந்து மேற்கோளாக உரையாசிரியர் சி.கே.சு. பயன்படுத்தியிருப்பதைக் கண்டோம். இதன் மூலம், அவரின் பல்துறையறிவை நம்மால் அறிய முடிகிறது. இனி, அவர் பயன்படுத்திய இலக்கண நூல்களைப் பற்றிக் காண்போம்.

## இலக்கண நூல்கள்

தொல்காப்பியத்தில் வரும் சூத்திர அடிகளை 58 இடங்களில் மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். ஏனாதி நாதநாயனார் புராணத்தில் வரும் தொடர் 'வயப்புலிப்போத்து' (620) என்பது. அதற்குப் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்.

> **வயம் - வெற்றியுடைய - வலிய என்றலுமாம். புலிப்போத்து - ஆண்புலி. போத்து - மிருகச்சாதியுட் சிலவற்றின் ஆண்பாற் பெயர். . . . போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும், யாத்த வாண்பாற் பெயரென மொழிப' என்பது தொல்காப்பியம் (பொருளதிகாரம் - மரபியல் 2)**

என்ற உரையாசிரியரின் விளக்கம் போற்றுதற்குரியது.

நன்னூல் சூத்திர அடிகளை 4 இடங்களில் கையாண்டுள்ளார் உரையாசிரியர். கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும், 'வரை' (692) என்ற சொல்லிற்குச் சலியாது தாங்கும் தன்மையும் நெடுமையும் பெருமையும் குறித்தது என்று விளக்கியுள்ளார். அளக்கலாகா அளவும் பொருளும், துளக்கலாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே (நன்னூல் - பாயிரம் - 28) என்ற இலக்கணமும் காண்க என்று சான்று காட்டியுள்ளார்.

புறப்பொருள் வெண்பா மாலையில் வரும் சூத்திர அடிகளை 3 இடங்களில் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். மூர்த்தி நாயனார் புராணத்தில் வரும் தொடர், 'இறப்ப உயர்ந்த' (992) என்பது. இதனை, மிக்க உயர்ச்சி பெற்ற - இறப்ப என்பது தனக்கு மேற்பட்ட எல்லையின்மை குறிக்கும் வழக்கு. 'இறப்பப் புகழ்ந்தன்று (பு. வெ. 11 - ஆண் 7 கொளு). என்று சான்று காட்டி விளக்கியுள்ளார்.

## நிகண்டுகள்

நிகண்டுகளிலிருந்தும் தம் உரையில் மேற்கோளாகக் காட்டியுள்ளார் உரையாசிரியர். ஈசன் என்றது (1969) முழுமுதற்

பொருளாய்ப் பதி எனப்படும் சிவபெருமானைக் குறிக்கும். ஈசன் - பகவன் என்பன சிவபெருமானைக் குறிக்கும் என்பது சூடாமணி நிகண்டு.

எறிபத்த நாயனார் புராணத்தில் வரும் 'தட்டி' என்ற சொல்லிற்குக் (581) 'கரடிப்பறை' என்று பொருள் கூறியுள்ளார். இதனைத் தட்டை என்பது பிங்கலம். 'கரடி நாமக் கட்டுரை தட்டை' என்று சான்றாகக் காட்டியுள்ளார் உரையாசிரியர்.

## பிறமொழிப்புலமை

கண்ணப்ப நாயனார் புராணத்தில் வரும் 'மச்சிது' (757) என்ற சொல்லிற்கு, மஞ்சு - அழகு. மஞ்சிது நன்றாகிய இதனை, 'மஞ்சுடை மணிநகு மாலை மண்டபம் (சூளாமணி). மஞ்சு என்பது எதுகை நோக்கி மச்சு என விகாரப்பட்டு நின்றது. இது, தமிழிலிருந்து பிறந்த தெலுங்கு மொழியில் மஞ்சிது என வழங்கி வருதல் காண்க என்று விளக்கியுள்ளார் உரையாசிரியர். இதன் மூலம் உரையாசிரியரின் தெலுங்கு மொழிப் புலமையை அறிய முடிகிறது.

திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் வரும் 'சாத்தம்' (1968) என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார் உரையாசிரியர்.

> சாத்தம் –அந்த ஞானத்தைக் கருதல் அளவையால் உணர்தற்கு ஏதுவாம் என்ற பௌஷ்ராகமப் பிரமாணமும் காண்க. 'சிவஸ்ய சம வேதாய சக்திர் ஞானத்மிகமலா , சைவ ஞான மிதிப்ரோக்தம் சாப்தந்தநுமாமதம்' என்பது பவுட்கராகமம் – (பதி படலம்)

என்று விளக்கியுள்ளதன் மூலம் உரையாசிரியரின் வடமொழியறிவை உணர முடிகிறது.

## இலக்கண விளக்கம்

சேக்கிழாரின் அணி இலக்கணப் பார்வையைத் தடுத்தாட் கொண்ட புராணத்தில் எடுத்துக் காட்டியுள்ளார் உரையாசிரியர். இயல்பாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் கருத்தை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். சுந்தரரின் திருமணக் கோலம் காண கதிரவன் உதயம் செய்தான் என்கிறார் சேக்கிழார். இத்திருமணம் முற்றுப் பெறாது இறைவனால் தடுக்கப் பெறுதல் பின்னர்ச் சரிதத்தில் காண்போம். ஆதலின் திருமணங் காண

என்னாது, திருமணக் கோலங் காண என்றார் என்ற நயம் படித்தின் புறத்தக்கது. மேலும்,

> ஞாயிறு எழுதல் - ஞாயிறு படுதல் முதலியவற்றை வருணித்துச் சொல்லுதல் பெருங்காவிய இலக்கணங் களில் ஒன்று. ஆதலின், இப்புராணமாகிய பெருங் காவியத் தலைவராகிய நம்பி ஆரூரர் திருமணத்தை ஒட்டி இங்குச் சூரிய உதயம் வருணிக்கப்பெற்றதாம். அடியார்களின் களிப்பிலே தாம் களித்தலும் பிறவும் காவிய ஆசிரியரது மனக்குறிப்பாம். அதனை இங்கு இரவிமேல் ஏற்றிக் கூறுதலின் இது உண்மையிலேயே தற்குறிப் பேற்றமாயிற்று. காமம்+உறு = காமுறு என மருவிற்று. காமம் இங்கு ஆசை குறித்தது.

என்ற உரையாசிரியரின் அணி இலக்கண விளக்கம் எண்ணி மகிழத்தக்கது.

தடுத்தாட் கொண்ட புராணத்தில் ஒரு கருத்தை உவமையின் மூலம் ஒப்பிட்டு விளக்கியுள்ளார் உரையாசிரியர். சுந்தரரைத் தடுத்தாட் கொள்ள முதியவர் வேடத்தில் வந்த சிவபெருமான், 'நீ ஓலை காணற் பாலையோ, அவைமுன் காட்டப் பணி செயற்பாலை' என்றவுடன் (189) அவர் கோபங் கொண்டார். இதனை, 'மாங்காய் முதலிற் பிஞ்சாகி உவர்த்துப் பின் காயாகிப் புளித்துப் பின் பழமாகி இனித்தல் போல, இறைவன் செயலாகிய இதுவும், முதலில் இங்கே வெறுப்பும் வெகுளியும் உண்டாக்கிப் பின் அருட்சக்தியாக மாறி, அருட்டுறையிலே இன்பம் பயந்தது காண்க என்று உவமையின் மூலம் கருத்தை விளக்கியுள்ள திறம் போற்றுதற்குரியது.

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில், திருமுனைப்பாடி நாட்டின் வளத்தைப் பின்வருமாறு பாடியுள்ளார் சேக்கிழார்.

> காலெல்லாந் தகட்டுவரால்; கரும்பெல்லாங் கண் பொழிதேன்
> பாலெல்லாங் கதிர்ச்சாலி; பரப்பெல்லாங் குலைக்கமுகு
> சாலெல்லாந் தரளநிரை; தடமெல்லாஞ் செங்கழுநீர்
> மேலெல்லா மகிற்றூபம் விருந்தெல்லாந் திருந்துமனை (1269)

இப்பாடலில் எல்லாம் - சொற்பொருட்பின்வருநிலை; விருந்து எல்லாம் - என்றவிடத்து எல்லாம் என்பது காலம் குறித்தது. பிறவிடங்களில் வரும் எல்லாம் - என்பன இடமுணர்த்தி நின்றன. எல்லாவிடத்தும் முற்றும்மைகள் தொக்கன என்கிறார் உரையாசிரியர்.

மேலும், அப்பாடலில் வரும் தகட்டுவரால் என்பதற்கு, வரால் மீன்கள் தகடு போன்ற வடிவுடையன; அகலமாய் நீண்டு துவளுதலாலும், துவளுந்தோறும் இருபுறமும் மின்னுதலாலும் தகடு போன்றன என்றார். சிறந்த தன்மையணி என்று இலக்கண விளக்கமளித்துள்ளார் உரையாசிரியர்.

## உரைச்சிறப்பு

ஒவ்வோர் அடியவர் பிறந்த (அ) சென்ற ஊரினைப் பற்றிக் கூறும் பொழுது அவ்வூரின் பழம் பெயரையும், அப்பெயர் பெற்ற காரணத்தையும், இன்றைக்கு வழங்கும் பெயரையும், கல்வெட்டுகளில் அவ்வூர் எப்படிக் குறிப்பிடப்படுகின்றது என்பதையும் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார் உரையாசிரியர். மேலும், அவ்வூரிலுள்ள இறைவன், இறைவியின் பெயரையும் சுட்டியுள்ளார் (221). இதன் மூலம் ஓரிடத்தைப் பற்றிக் கூறும் போது, அந்த இடத்தை நேரிடையே சென்ற கண்டு, செய்திகளைக் கூறுவதால் அவ்வூரின் உண்மையான வரலாற்றுச் செய்திகளை அறிய முடிகிறது.

வரலாற்றுக்குரிய கல்வெட்டுச் செய்திகளை உரையாசிரியர் சரிதப் பிற ஆதரவுகள் என்ற துணைத்தலைப்பில் கூறியுள்ளார். வரலாற்றிற்கு ஆதரவாகப் புகைப்படங்களையும் நிறைய சேர்த்துள்ளார் உரையாசிரியர். ஒவ்வொரு புராணத்திலும் வரும் பெயர்களை விளக்கத்துடன் (பெயர் விளக்கம் என்ற தலைப்பில்) அகர வரிசைப்படுத்திக் கொடுத்துள்ளார் உரையாசிரியர்.

## மரபு பிறழாமை

கண்ணப்பரின் வரலாற்றில் முற்பிறவியைப் பற்றிக் கூறும் போது (751) 'முன்பு செய் தவத்தினீட்டம் என்று பொதுப்படக் குறித்தாரன்றி, ஆசிரியர் அப்பிறப்பும் செய்தவமும் இன்னவெனக் கூறினாரல்லர். இஃதவர் மரபு என்க' என்கிறார் உரையாசிரியர்.

அவரே, அப்பர் சுவாமிகளது முற் பிறப்பையும், ஆளுடையப் பிள்ளையாரது முன்னைத் திருத்தொண்டின் நிலையையும் கூறினார். இவ்வாறு குறிப்பால் கூறுவதன்றி அவையின்னவென விரித்தாரல்லர். அவை அவ்வப்புராணச் சரிதங்களிற் கூற வேண்டிய நியதியும், இன்றியமையாத தொடர்பும் இன்மையான் என்க என்று விளக்கியுள்ளார். இதன் மூலம், சேக்கிழார் ஒரு நாயனாருக்கு முற்பிறப்புச் செய்தியைக் கூறி, மற்றவருக்குக் கூறாததற்கான காரணத்தை உரையாசிரியர் எடுத்துரைத்துள்ளார்.

## மறுப்புரை

பிறர் கருத்தை மனம் புண்படாத வகையில் மறுத்துரைப்பது ஒருவகை. அவ்வகையில் திருநாவுக்கரசருக்கு நஞ்சு ஊட்டப்பட்ட நிகழ்ச்சியைச் (1369) சாக்கிரடீசுக்கு நடைபெற்ற நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் கூறுவர். இதனை,

> இங்கு நாயனார் நஞ்சுண்டது அது போன்றதன்று. நாதரடியார்க்கு நஞ்சு அமுதமேயாகும் என்ற துணிபும் திருத்தொண்டின் உறைப்புமே – இங்கு முன்னின்றதும், ஏனையோர்க்கு அஃதில்லாமையும் அறிக. கிரேக்க நாட்டு அறிஞன் அவ்வாறு நஞ்சுண்டு இறந்தொழிந் தமையும் காண்க. இறவா தொழியினும் அடிமைத்திறம் பற்றிய இத்திருவருட் செயலோடு ஒப்பிடுந் திறத்தன பிற இல்லை. தெய்வத் திருவருள் கைவரப் பெறாது செத்துப் போன வேற்று மக்களைச் சிவானந்தப் பெருவாழ்வுடைய சீவன் முத்தரோடு செயலால் ஒப்புக் கூறுதல் வேண்டாத செயல் என்க

என்று உரையாசிரியர் மறுத்துரைத்திருப்பது போற்றுதற்குரியது.

## ஏற்புரை

பெரியபுராணத்திற்கு முன்னோர் எழுதிய உரைக் குறிப்புகளை அப்படியே ஏற்றுப் போற்றுகிறார். தடுத்தாட் கொண்ட புராணத்தில் வரும், 'சீர்மணம்' (152) என்பதற்கு, 'நம்பி ஆரூரர் இனி மேற்கொள்ளும் திருமணம் இறைவனே வலிய வந்து அடிமை கொள்வதற்கு ஏதுவாயிருத்தலால் சீர் என்னும் அடை கொடுத்து ஓதினார் - என்பது இராமநாதச் செட்டியார் உரைக்குறிப்பு என்று முன்னோர் மொழி பொருளை அப்படியே போற்றியுள்ள திறத்தைக் காண முடிகிறது.

## முடிவுரை

இதுவரை சி.கே.சு.வின் உரைத்திறனை இலக்கிய, இலக்கண நோக்கில் அறிந்தோம். அதில் உரையின் வகைகளும் இலக்கணமும் பற்றி முதலில் விளக்கப்பட்டது. உரையாசிரியரின் பல்துறையறிவை, சங்க இலக்கியம் முதல் ஔவை இலக்கியம் வரையுள்ள பாடல்களைப் பயன்படுத்தி இருப்பதின் மூலம் அறிய முடிந்தது. இலக்கண நூல்களிலிருந்து சூத்திரங்களை எடுத்தாண்டிருப்பது மட்டுமல்லாமல் அணி இலக்கணங்களை விளக்கியிருப்பதின் மூலம், இலக்கணப் புலமையை உணர முடிந்தது. நிகண்டுகளின் பொருட்குறிப்பையும்

உரையில் பயன்படுத்தியுள்ளார் உரையாசிரியர். மேலும் அவரின் பிறமொழிப் புலமையையும் சமயப் பொதுமையையும் உரையின் மூலம் அறிய முடிந்தது.

உரையாசிரியர் தலவிசேடம் என்ற தலைப்பில் ஒவ்வோர் ஊரைப் பற்றியும் கூறியுள்ள கருத்துகள் படிப்பவர்களுக்கும், அவ்வூருக்குச் செல்லுபவருக்கும் வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. சேக்கிழார் மரபுப்படியே முற்பிறவிச் செய்தியைக் கூறியுள்ளார் என்று எடுத்துரைத்துள்ளார். பிறர் கருத்தையும் மனம் புண்படாத வகையில் மறுத்துரைத்துள்ளார். முன்னோர் மொழி பொருளை அப்படியே ஏற்றுப் போற்றியுள்ளார். தம் கருத்திற்குச் சான்றாகப் புகைப்படங்களைச் சேர்த்துள்ளார். இத்தகைய அருமையான ஓர் உரைப்பெட்டகத்தை வழங்கிய சி.கே.சு.வுக்குப் பல முனைவர் பட்டங்களை வழங்கலாம்.

சி.கே.சு. பல ஆண்டுகளாக உழைத்து, பல இன்னல் களுக்கிடையே இறையருளால் அருமையாகப் பெரிய புராணத்திற்கு உரையெழுதி ஏழு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். அத்தகைய அரிய பணிபுரிந்த அவரை 'உரைச்செம்மல்' என்று அழைக்கலாம். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

# சித்தாந்தப் புலமை

கோமதி சூரியமூர்த்தி

சைவத்திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாக விளங்கும் சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணத்திற்கு உரை கண்டவர் பலர். அவற்றுள் மிகமிகச் சிறந்த உரை செந்தமிழறிவும், சிவபக்தியும் மிக்க சி.கே. சுப்பிரமணிய முதலியார் அருளிச் செய்த உரையாகும். இதற்குமுன் இதைப் போன்றதோர் உரை தோன்றியதில்லை. இனியும் தோன்றப் போவதில்லை. இஃது அவருடைய பல்லாண்டு உழைப்பின் பயனாய்த் திருவருள் துணை நிற்கத் தோன்றிய ஒப்பற்ற உரைநூல். இவ்வுரை திருக்குறள், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சைவ இலக்கியங்கள், இலக்கண நூல்கள் இவற்றில் ஆசிரியர்க்கு உள்ள புலமையை வெளிப்படுத்து கின்றது. பெரியபுராண உரைநூல்களின் துணை கொண்டு சி.கே.சு.வின் சித்தாந்தப் புலமையை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். மெய்கண்ட சாத்திரங்கள் எனப் போற்றப்படும் நூல்கள் பதினான்கு ஆகும். அவை:

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. சிவஞானபோதம்
4. சிவஞானசித்தியார்
5. இருபா இருபஃது
6. உண்மை விளக்கம்
7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப்பஃறொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மை நெறிவிளக்கம்
14. சங்கற்பநிராகரணம்

அவற்றை ஆசிரியர் தம் உரையில் ஏற்ற இடங்களில் எவ்வாறு மேற்கோள்களாகப் பயன்படுத்தி உள்ளார் என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்டுகின்றது.

## திருவுந்தியார்

### சிற்றின்பம் பேரின்பமாதல்

சிவபெருமான் கனவில் அறிவுறுத்தியபடி திருவாரூர் அடியார்கள் திருநாவலூர் நம்பிக்குப் (சுந்தரருக்கு) பரவையாரைத்

திருமணம் செய்வித்தனர். பரவையாரை நாவலூரரார் கூடியதை வர்ணிக்கும் சேக்கிழார்,

தென்னாவலூர் மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாருங் கொடி மருங்குல் பரவையெனும் மெல்லியல் தன்
பொன்னாரு முலை ஓங்கற் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில் யோகம் பரம்பரையின் விரும்பினார் (327)

என்கின்றார். பரவையாரின் ஓங்கிப் பருத்து வளர்ந்த முலை சுந்தரருக்கு மலையை நினைவூட்டிற்று. மலைகளின் உச்சி சார்ந்து தவம் செய்தல் யோகிகள் செயல். பிராணவாயுவை அடக்கிச் சுழுமுனையின் வழியே பிரமாந்திரத்தில் செலுத்தித் துவாத சாந்தத்திலே விந்துச்சோதியாகிய ஒளியைத் தரிசித்து, அக்காட்சியில் அழுந்தி அதன்மயமாய் நிற்றல் சிவயோகம் எனப்பெறும். சுந்தரர் யோகபாவனை நிகழ்த்த முலைக்குவடுகள் சார்பாக இருந்தனவன்றி, ஏனையோர் போலச் சிற்றின்ப விருப்பிற்குக் காரணமாகவில்லை என்பதை உரைக்கும் சி.கே.சு.,

பெற்ற சிற்றின்பமே பேரின்பமாம் அங்கு
முற்ற வரும் பரிசு உந்தீ பற
முளையாது மாயை என்று உந்திபற (33)

என்ற திருவுந்தியார் பாடலை (33) மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## எல்லாம் சிவன் செயல்

திருஆலவாயில் எழுந்தருளியுள்ள திருஞானசம்பந்தரைக் காண வந்த அவரது தந்தையார் உலக நன்மைக்காக யாகம் செய்ய வேண்டி நின்ற போது, சம்பந்தர் தந்தையார் முன்பே மொழிந்ததை நினைவில் கொண்டு தம்மிடம் பொருள் இல்லாததால், அந்தமில்லாத பொருளாய் உள்ளன இறைவனது திருவடிகளல்லவா என நினைந்து இறைவனிடமே பொருள்தரும் பொறுப்பை ஒப்படைக்கின்றார் (பெ. பு. 2321). இஃது எல்லாம் சிவன் செயல் என அறிந்து அவன் வழி ஒப்படைத்தல் வேண்டும் என்பதை உணர்த்தும் சி.கே.சு,

நம் செயலற்று இந்த நாம் அற்றபின் நாதன்
தன் செயல் தானே என்று உந்தீ பற
தன்னையே தந்தான் என்று உந்தீ பற

என்ற திருவுந்தியார் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## அரிய காட்சியர், காட்சிக்கு உரியராதல்

"அரிய காட்சியரான" சிவபெருமான் "உரிய அன்பினில் காண்பவர்க்கு உண்மையாம், பெரிய நல்லடையாளங்கள் பேசினார்" (பெ. பு. 2724) என்ற பாடலுக்கு உரைகூறும் சி.கே.சு.

> "அகளமாய் யாரும் அறிவரிது அப்பொருள்
> சகளமாய் வந்தது என்று உந்தீபற" (திருவுந்தியார்)

என்ற பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## சிவானந்தம்

சி.கே.சு. சில இடங்களில் நூற்பெயரைச் சுட்டாமல் திருவுந்தியார் பாடலை மேற்கோளாகக் காட்டுகின்றார். இன்ன தன்மையன் என்றறியாச் சிவனை உபமன்னியு முனிவர் ஆசை தீர அனுபவித்துக் கொண்டிருக்கிறார் (பெ.பு. 23) என்ற சேக்கிழார் கூற்றுக்குச் சி.கே.சு. இப்படியன் - இந்நிறத்தன் - இவ்வண்ணத்தன் - இவன் இறைவன் என்று பிரித்தறிய இயலாவிடினும், நிருவிகற்ப சமாதியில் அவன் தம்மை ஆட்கொண்டு அளிக்கும் ஆனந்தத்தில் திளைத்து அனுபவிப்பர் சிவானுபூதிமான்கள் என விளக்கி, இக்கருத்தையே,

> இங்ஙன் இருந்தது என்று எவ்வண்ணம் சொல்லுகேன்
> அங்ஙன் இருந்தது என்று உந்தீபற
> அறியும் அறிவதன்று உந்தீ பற'

என்று சாத்திரம் பேசும் எனப் பெயர் சுட்டாமல் திருவுந்தியார் பாடலை (4) மேற்கோளாகக் காட்டுகின்றார்.

ஞானசம்பந்தர் திருவாரூரிலிருந்து வரும் நாவுக்கரசரைச் சந்தித்து நீர் வரும் நாளில் திருவாரூரில் நிகழும் பெருமையை உரைப்பீர் எனக் கேட்க, அப்பெருமை 'திருவாதிரைத் திருநாளே' எனக் குறிப்பித்து அச்சிறப்பினை யான் எவ்வாறு சொல்வேன் என மறுமொழி பகர்கின்றார் நாவுக்கரசர் (1499 - 1500). அது சொல்ல முடியாதபடி அத்துணைச் சிறப்பினது என விளக்கம் கூறி முற்கூறிய திருவுந்தியார் பாடலையே (4) பெயர் சுட்டாமல் மேற்கோளாகக் காட்டுகின்றார் சி.கே.சு.

## திருக்களிற்றுப்படியார்

### வேண்டுங்கால் பிறவாமை வேண்டுக

கயிலைக்குச் சென்ற காரைக்காலம்மையாருக்கு இறைவன் உமாதேவியோடு காட்சி கொடுத்து, அம்மையே என அன்புடன்

அழைத்து, நீ வேண்டும் வரம் என்ன என்று வினவ, அம்மையார் முதலில் இறவாத இன்ப அன்பை வேண்டிப் பின் பிறவாமையை வேண்டுகின்றார் (1776). பிறவியில் வந்து வாதனைப்படும் மக்கள் இறைவனிடம் வேண்டிக் கொள்ளத்தக்க வரமாவது பிறவாமை ஒன்றேயாம் என்பது அறிவுடையோர் எல்லோரும் ஒப்பக் காட்டிச் சென்றதோர் உண்மை. இங்குச் சி.கே.சு.,

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றே வேண்டுக

என்ற திருக்களிற்றுப்படியார் பாடலை (40) மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## அகந்தை கொண்டோர்க்கு அரிய சிவன் அன்புடையோர்க்கு எளியர்

திருமாலுக்கும், பிரமனுக்கும் அரியவராகிய சிவபெருமான், சுந்தரர் மணக்கோலம் கொண்ட போது, அவர் முன்பு கையையில் வேண்டிக் கொண்டபடி தடுத்தாள உருவுதாங்கி வந்தார் (174). இதற்கு உரை கூறும் சி.கே.சு.

நல்ல சிவதன்மத்தால் நல்ல சிவயோகத்தால்
நல்ல சிவஞானத்தால் நானழிய – வல்லதனால்
ஆரேனும் அன்பு செயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன்

என அரியகாட்சியராகிய அரன், சுந்தரருக்குக் காட்சிக்கு உரியராய் உருவு தாங்கி வருகின்றார் என்பதற்குத் திருக்களிற்றுப்படியார் பாடலை (15) மேற்கோளாகக் காட்டுகின்றார். மேலும் அகந்தை கொண்ட இருவர்க்கு அரியவர், தாமே அன்புடைய ஒருவர்க்கு எளியவராயினமையும், அவர்கள் தேடவும் ஒளித்தவர், இவர் மறுப்பவும் இடைவிடாது வழக்கிட்டுப் பற்றியமையும் குறிப்பு என நயத்துடன் உரைக்கின்றார்.

"அரிய காட்சியரான" சிவபெருமான் "உரிய அன்பினில் காண்பவர்க்கு உண்மையாம்" என்ற பெரியபுராணப் பாடலுக்கு (2724) உரை கூறும் சி.கே.சு, முற்கூறிய திருக்களிற்றுப்படியார் பாடலை (15) மேற்கோளாகக் காட்டி, அரிய காட்சியராகிய அரன் காட்சிப்படும் நிலையினை ஞானசாத்திரம் கூறுதல் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது என்கின்றார்.

## தாயன்பு

ஞானசம்பந்தப் பெருமான் திருஆலவாய் இறைவன் கோயிலுக்குச் சென்றபோது, அரசி மங்கையர்க்கரசியாரும், கங்கை தாங்கும் சடையினையுடைய இறைவனைத் தொழும் ஆர்வத்தோடு சென்றார். அப்போது சம்பந்தர் எதிர்ப்பட ஒரு பக்கத்தில் ஒதுங்கி விழிகளில் தெள்ளிய நீர் பெருக நின்றார் (2567). தெள்ளுநீர் விழி - கண்கள் நீர் பெருக்குவது அன்பின் அடையாளம். இது தாயாம் தன்மை நிலையினால் எழுந்தது என்று கூறும் சி.கே.சு, அரசியாரின் தாயன்பைப் புலப்படுத்த,

சுரந்த திருமுலைக்கே துய்ய சிவஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடைய தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு

என்ற திருக்களிற்றுப்படியார் பாடலைச் (54) சான்றாகக் காட்டுகின்றார்.

## நாமச்சிறப்பு

ஞானசம்பந்தரும், அவரது அடியார்களும் மதுரையில் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர்கள் தீ வைக்க, அது பையவே சென்று பாண்டியனைப் பற்ற, அரசியாரும், அமைச்சரும் மன்னனுக்கு இந்நோய் வந்ததற்குக் காரணம் அமணர்கள் செய்த தீச்செயலாகும்; எனவே ஞானசம்பந்தர் வந்தால் இந்நோய் தீரும் என்கின்றனர் (2617, 2618). அது கேட்ட மன்னனின் நிலையைச் சேக்கிழார்,

மீனவன் செவியினூடு மெய்யுணர்வு அளிப்போர் கூற
ஞானசம்பந்தர் என்னும் நாம மந்திரமும் செல்ல
ஆனபோது அயர்வு தன்னை அகன்றிட (2619)

என்கின்றார். ஞானசம்பந்தர் என்னும் நாம மந்திரம் - ஞானசம்பந்தர் என்பது ஒற்று நீக்க ஐந்தெழுத்தேயாதலின் மந்திரம் எனப்பட்டது. மந்திரம் - நினைப்போனைக் காப்பது. சிவமூல மந்திரத்தைச் சொல்ல சிவனருளால் நோயின் கடுமை நீங்குவது போல, அவனன்பனான ஞானசம்பந்தர் என்னும் நாமமந்திரம் மன்னனின் செவியில் செல்ல அவனது அயர்வு நீங்கியது. இங்குச் சி.கே.சு,

தான் செய்யும் தன்மைகளும்
ஆக்கியிடும் அன்பர்க்கு அவன்

என்ற திருக்களிற்றுப்படியார் பாடலைச் (69) சான்றாகக் காட்டுகின்றார்.

## இறைவனை முற்றிலும் அறிதல் இயலாது

அரிய காட்சியராய்த் தமது அங்கைசேர்
எரியர் ஏறுகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆரறிவார் அவர் பெற்றியே

என்ற திருஞானசம்பந்தரின் திருப்பாசுரத்தில் வரும் "ஆயினும் பெரியர்" என்பதைச் சேக்கிழார் விரித்துரைக்கின்றார் (2725). 'அரியகாட்சியர்' என்பது இறைவனது சொரூபநிலை. "எரியர் - ஏறுகந்து ஏறுவர்-கரியர்- காடுறை வாழ்க்கையர்" முதலியன இறைவனது தடத்த நிலை. இவ்வாறு ஆன்மாக்களை உய்யக் கொண்டருளும் பொருட்டு, முற்கூறிய சொரூப, தடத்த நிலைகளை மேற்கொண்டருளினும், அவ்வருளினைத் திளைக்கும் அன்பர்களது கருத்தினாலும் அளக்கலாகாதபடி நிற்பவர் என்பது "ஆயினும் பெரியர்" என்றதன் குறிப்பாகும் என்கின்றார் சி.கே.சு. இதற்கு அரணாக,

கடல் அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல் அளக்க வாராதாற் போலப் - படியில்
அருத்தி செய்த அன்பரை வந்து ஆண்டதுவுமெல்லாம்
கருத்துக்குச் சேயனாய்க் காண்" (களிறு 90)

என்ற ஞானநூற்கருத்து ஈண்டு உய்த்துணர்தற் பாலது என்கின்றார்.

## சிவஞானபோதம்
## சிவவேடச் சிறப்பு

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் சேக்கிழார்,

தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழி கண்ணும் பதிகச்செந்நூல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே (1405)

என்று திருநாவுக்கரசரின் திருவேடத்தை வர்ணிப்பார். திருவேடத்தின் சிறப்பை உணர்த்த சி.கே.சு.,

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான் கொடுத்துத்
தன்னுணரத் தன்னுள் இருத்தலால்

என்ற சிவஞானபோத பன்னிரண்டாம் சூத்திரக் கருத்தை விளக்கும் உதாரண வெண்பாவை (76) எடுத்துக்காட்டாகக் காட்டுவார். அடியவர்களே இறைவனைக் காணுமிடங்களாயும், அவரருள் விளங்கும் இடங்களாயும் உள்ளனர்.

## ஆரிய வழிபாடு

> இந்நாளில் திருப்பணிகள் செய்கின்ற இன்றமிழ்க்கு
> மன்னான வாகீசத் திருமுனியும் மதிச்சடைமேல்
> பன்னாகம் அணிந்தவர்தம் பதி பலவும் சென்றிறைஞ்சிச்
> சொன்னாமத் தமிழ்புனைந்து தொண்டு செய்வான்
> தொடர்ந்து எழுவார் (1412)

என்ற பாடலுக்கு உரை விளக்கம் செய்யும் சி.கே.சு., நாவுக்கரசர் ஞானச்சரியையை விளக்க வந்த ஆசாரியராதலின் அணைந்தோர் தன்மையைத் தமது வாழ்க்கையில் நடந்து காட்டினர் என்கின்றார். "ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே" என்பது சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திரம். நாயனார் பல தலங்களும் சென்று வணங்கியதும், பதிகம் பாடியதும், பணி செய்ததும் பிறவும் இக்கருத்துப் பற்றியன என்கின்றார்.

> வண்டமிழ் மென்மலர் மாலை புனைந்தருளி மருங்குள்ள
> தண்டுறை நீர்ப்பதிகளிலும் தனிவிடையார் மேவியிடங்
> கொண்டருளும் தானங்கள் கும்பிட்டு (1420)

என்ற பாடலில் "மேவி இடங்கொண்டருளும் தானங்கள்" என்றது இறைவன் பொருந்தி வெளிப்பட்டு வீற்றிருக்கும் இடமாகிய திருக்கோயில்களைக் குறிக்கும். இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்துள்ளான். அவனைத் திருக்கோயில்களில் போய்த்தான் கும்பிட வேண்டுமா என வினா எழுப்புவார்க்கு விடைகூறுவது போல அதற்கான காரணத்தை, "நேயமலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்ற சிவஞான போதப் பன்னிரண்டாம் சூத்திரத்தில், "அவன் மற்றிவ்விடங்களில் பிரகாசமாய் நின்றே அல்லாதவிடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்" என ஆசிரியர் ஏதுக்கூறினமை (வார்த்திகம் 536) காண்க எனச் சி.கே.சு. விளக்குகிறார்.

திருநல்லூர்த் தலத்தினை அடைந்ததும், சம்பந்தர் முத்துச் சிவிகையிலிருந்து இறங்கி, மறையவர் குழாம் முன்னே செல்ல, அடியவர்களும், பரிசனங்களும் தம்முடன் கூடிப் பரவி வர, இறைவனது திருக்கோபுரத்தை வணங்கித் திருக்கோயிலினுள்

அணைந்தருளினார் (2265). இங்கு ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என்று அணைந்தோர் தன்மையினை ஞானசாத்திரம் (சி.போ.சூத், 12) கூறும் பகுதி நினைவுகூர்தற்பாலது என்கின்றார்.

## பெரிய புராணப் பொருட்சிறப்பு

சொல்லால் பெறப்படும் பொருள் சிறந்ததானால் அதனைச் சொல்லும் சொல் சிறந்ததல்லாவிட்டாலும், அது பற்றி இகழாது பொருளின் சிறப்பையே நோக்கி, அப்பொருளைச் சொல்லும் சொல்லை யாவரும் கைக்கொள்வர். அதுபற்றியே இதனுள்ளே குறித்த அடியார் புகழாகிய பெரும்பொருளுக்கு எனது நூல் சிறிதேயாயினும் உண்மைப் பொருளையே உணரும் உரிமையுடைய பெரியோர் இதனை அந்த மேன்மையே கருதி இகழாது கைக்கொள்வர் எனச் சேக்கிழார் பாயிரத்துள் கூறுகின்றார் (பெ. பு. 7). இப்பாடல் கருத்துக்கு உரைகூறும் சி.கே.சு,

> தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
> எம்மை உடைமை எமை இகழார் – தம்மை
> உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
> புணராமை கேளாம் புறன்

என்ற சிவஞானபோத அவையடக்கச் செய்யுளை மேற்கோளாகக் காட்டுகின்றார் (சேக்கிழாரின் சொல்லாட்சியும் மிகச் சிறந்தது. அவையடக்கத்தால் அவர் இவ்வாறு கூறினார்).

## அரனே ஆதி

"ஆதியாய்" (350) என்றது எல்லா உலகங்களும் தோன்றுதற்குக் கருத்தாவாய் எனப் பொருள். "அந்தம் ஆதி" என்று உண்மைநூலில் கண்டவாறு, மகரசங்கார காலத்திலே, எல்லா உலகங்களும் சங்கார கருத்தாவாகிய இறைவனிடத்தே ஒடுங்கி நின்று, மீளவும் சிருட்டிக் காலத்தில் அவனிடத்தினின்றும் தோன்றி உளவாம் என்பது முடிவு. "ஒடுங்கி மலத்துளதாம்" - சிவஞான போதம் 1ஆம் சூத்திரம். ஆதி - தொடக்கம். மீளத் தோன்றுதற்கு இடமாய் நிற்கின்ற நிலையைக் குறித்தது. முதலில் சங்கார கருத்தாவாகிய தன்னிடத்திலே உலகம் எல்லாம் ஒருங்கச் செய்தலாலே சங்கார கருத்தாவும், பின்னர் மீளவும் தோன்ற நிற்றலாலே சிருட்டி கருத்தாவும் தானே ஆகியவன் என்பது ஆதி என்பதனால் பெற்றாம் என்கின்றார் சி.கே.சு.

## திருவடிநிழல்

மெய்ப்பொருள் நாயனாருக்கு இறைவன் முக்தி கொடுத்ததை,

**தொண்டனார்க்கு இமையப் பரவை துணைவனார் அவர்முன் தம்மைக்**
**கண்டவாறு எதிரேநின்று காட்சி தந்தருளி, மிக்க**
**அண்டவானவர்கட்கு எட்டா அரும்கழல் நீழல்சேரக்**
**கொண்டவாறு இடையறாமல் கும்பிடுங் கொள்கை ஈந்தார்**
**(489)**

இப்பாடலில் 'அருட்கழல்நீழல்' என்றது திருவடி வியாபகத்தின் நிறைவே நீழல் எனப்பெறும். இறைவனின் திருவடி, பிறவித் துன்பமாகிய வெப்பத்தை ஆற்றும் நிழல். வெயிலின் வெப்பம் ஆற்றும் நிழல் போலத் துன்பம் நீக்கி இன்பமான தன்மை தருவதனாலே 'நிழல்' என்று உருவகப்படுத்திப் பேசப்பெறும். இதற்கு அரணாக, "தன்னிழலாம் பதி" என்ற சிவஞானபோத ஒன்பதாம் சூத்திரத்தைச் சான்றாகச் சி.கே.சு. காட்டுகின்றார்.

## தவத்தால் ஞானம்

காளத்திமலை மீது ஏறும் கண்ணப்பநாயனாரின் நிலையை,

**முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலான**
**இன்பமான அன்பினை எடுத்துக் காட்ட** (751)

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். தவம் என்றது ஈண்டு சிவபூசையைக் குறித்தது. "தவத்தினில் உணர்த்த விட்டு" என்ற ஞானசாத்திரமும் காண்க என்று சி.கே.சு. நூற்பெயர் சுட்டாமல் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தில் வரும் தொடரை எடுத்துக்காட்டுகின்றார்.

## சிவத்தைப் பற்றல்

தவப்பெருக்கினால் உயிர் உலகத்தை விடவிடச் சிவத்தைப் பற்றுகிறது என்பது உண்மை. இதற்கு அடுத்த பாடலில், 'ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல" (752) கண்ணப்பர் மலை மீது ஏறிச் சென்றதாகச் சேக்கிழார் கூறுகின்றார். ஆணையாம் சிவம் - புறப்பொருளை நோக்காது பேரறிவு மாத்திரமாய் நிற்கின்ற சைதன்னியமே சிவம். அச்சிவம் உயிர்களுக்குப் பசுத்துவத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதலின் உள்ளதாகிய இரக்கமே அருள். ஆதலின் "ஆணையாம் சிவம்" என்றார். அருள் - சக்தி - ஆணை என்பன ஒரு பொருட்சொற்கள். இதற்குச் சான்றாக, "ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே" என்ற சிவஞானபோதத் (சூத்திரம், 2) தொடரை எடுத்துக்காட்டுகின்றார் சி.கே.சு. இனி, இச்சிவமென்னும் பொருள் உயிர்கட்கு அருளும் பொருட்டுத் தோன்றுங்கால் அருளாகிய

ஆணையிடமாகத் தோன்றுதலின் "ஆணைஆம்" என்றார் என சி.கே.சு. விளக்குவார்.

## கண்ணப்பர் ஏகனாகி இறைபணி நின்ற நிலை

காளத்திமலைக் குடுமித்தேவரைச் சிவாகம முறைப்படி பூசை செய்யும் சிவகோசரியார், திண்ணனார் செய்த பூசைப் பொருட்களைக் கண்டு 'இவ்விடத்து இவ்வநுசிதங்களைச் செய்தாரைக் கண்டிலேன், உம்முடைய திருவருளினாலே இதனை ஒழித்தருள வேண்டும் என்று இறைவனிடம் விண்ணப்பிக்க அன்று இரவு இறைவன் அவர் கனவில் தோன்றி,

**அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்று**
**அவனுடைய அறிவெல்லாம் நமைஅறியும் அறிவென்று**
**அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனியவாம் என்று**
**அவனுடைய நிலை இவ்வாறு அறி நீ என்றருள்செய்வார் (806)**

அன்பு என்றது இச்சையினையும், அறிவு ஞானத்தையும், செயல் கிரியையையும் உணர்த்துவன. எனவே அவரது இச்சை முதலியன மூன்றும் இறைவனையே விடயித்து நின்றன ஆதலின்,

**அவனே தானே ஆகிய அந்நெறி**
**ஏகனாகி இறைபணி நிற்க**
**மலமாயை தன்னொடு வல்வினை இன்றே (சூத், 10)**

என்று சிவஞானபோதத்தில் சொன்னபடி இறைவனது பணியில் நின்றார் திண்ணனார். இங்கு "நிலை இவ்வாறு" என்றது சிவத்தோடு ஏகனாகி இறைபணி நின்ற நிலையைக் குறித்தது என விளக்குவார் சி.கே.சு. இறுதியடியில் வரும் "அறிநீ" என்றது "அறிவிக்க அன்றி அறியா உளங்கள்" (உதாரண வெண்பா, 48) என்று சிவஞானபோதத்தில் கூறியபடி இறைவன் காட்டுகின்றார் என சி.கே.சு. விளக்குவார் (மேலது, ப. 195).

## மெய்ப்பொருள்

திருஆலங்காடு செல்ல அம்மையார் கயிலையில் இறைவனிடம் விடைபெற்றதை,

"செம்மை வேத மெய்ப்பொருளானார் தம்மை விடை கொண்டு" (1775) என்று சேக்கிழார் கூறுகின்றார். மெய்ப்பொருள் என்பது "சத்தாயுள்ள சிவம்" (சிவஞானபோதம், சூத், 6) என்று ஞானசாத்திரத்தினுள் பேசப்படுவது என்று சி.கே.சு. கூறுகின்றார்.

## தொழுவார்க்கு அருளல்

"தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான்" (1976) என்ற பெரியபுராணப் பாடலுக்கு உரை கூறும் சி.கே.சு, ஆயின், தொழாதார்க்குச் சிவபெருமான் அருளுகின்றதில்லையோ? எனின் அப்படியன்று. அவர்க்கும் அவ்வவரது அறியாமை நோய்க்குத் தக்கவாறு தண்ம முதலியவற்றால் வெளிப்படும் என்பர். அவையும் அவ்வாற்றால் அருளேயாம்.

> சார்ந்தாரைக் காத்தல் சலமிலனாய்ச் - சார்ந்தடியார்
> தாந்தானாச் செய்து பிறர் தங்கள் வினை தான் கொடுத்தல்
> (உதாரண வெண்பா, 64)

என்பதை எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார். அறக்கருணை, மறக்கருணை பற்றியும் உணர்க.

> சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால்
> நலமிலன் நாடொறும் நல்குவான் நலன் (4:109)

என்ற நாவுக்கரசர் வாக்கும்,

> நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
> சலமிலன் பேர் சங்கரன் (திருவருட்பயன், 9)

என்ற உமாபதிசிவம் வாக்கும் சி.கே.சு.வின் கருத்துடன் ஒப்பிடத்தக்கன.

## ஒன்றிய சிந்தை

சம்பந்தர் கொல்லிமழவன் மகளின் முயலகன் நோயைத் தீர்த்ததும் மழவனும், மகளும் சம்பந்தரின் அடிபணிய,

> நின்ற அருமறைப் பிள்ளையாரும் நீரணி வேணி நிமலர் பாதம்
> ஒன்றிய சிந்தையுடன் பணிந்தார் (2218)

என்கின்றார் சேக்கிழார். இங்கு ஒன்றிய சிந்தையுடன் பணிந்தார் என்றது,

> அவனே தானே ஆகிய அந்நெறி
> ஏகனாகி இறைபணி நிற்க (சி.போ. சூத். 10)

என்ற கருத்து என்கின்றார் சி.கே.சு.

## சிவசக்தியும், பௌதீக சக்தியும்

ஞானசம்பந்தரும், பரிசனங்களும் நெடுநாள் கொடிமாடச் செங்குன்றூரில் தங்கியிருந்தபோது குளிர்சுரம் தாக்குவது போல

உணர்ந்து, பரிசனங்கள் பிள்ளையாரிடம் விண்ணப்பிக்க அவர், இறைவனின் திருவருளைத் தொழுது, இஃது இந்த நாட்டின் இயல்பே ஆயினும், இதன் கொடுமைகள் நமக்கு வந்து சேரமாட்டா என்ற கருத்துடன் இறைவன் மீது பதிகம் பாடினார் (2231 - 2232). "இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப் பெறா" என்றதன் உட்கருத்தை விளக்கவரும் சி.கே.சு, "குளிர்சுரம் உயிர்களைப் பீடித்தல் நிலத்தின் அமைந்த தன்மையே ஆயினும், சிவன் அடியாராகிய நம்மிடம் வந்து பொருந்தாது. மந்திரவாதியை விடம் பற்றாமை போலவும், அக்கினித்தம்பனம் வல்லோரைத் தீச்சுடாமை போலவும் நிலத்தின் தன்மை சிவன் அடியாரைத் தொடராது. ஏனென்றால் மேலாகிய சிவன் அடிமைத்திறமாகிய சக்தியின்முன், கீழாகிய பௌதீகசக்தி தன்மை குன்றிச் செயல் செய்ய மாட்டாது. "சத்தின்முன் அசத்துப் பிரகாசியாது (சூத் 7, முதல் ஆதிகரணம், மேற்கோள்), "யாவையும் சூன்யம் சத்து எதிர்" (சூத். 7) என்பன ஞானநூல் முடிபுகளாகிய உண்மை" என்கின்றார்.

### அன்பரோடு மருவுதல்

திருநீலகண்டயாழ்ப்பாணர் சம்பந்தர் அருளும் திருப்பதிகங்களின் இசையினை யாழில் வாசித்து, அவரைப் பிரியாமல் சேவித்து உடனிருக்கும் பேறு வேண்டும் என்று விண்ணப்பிக்க, சம்பந்தரும் மனமகிழ்வுடன் இசைந்தருள, பாணனார் தம்பிரான் அருள் இதுவென வழிபட்டு என்றும் பிரியாத நட்புடன் சம்பந்தருடன் எழுந்தருளியிருந்தார் (2038 - 2039). "தம்பிரான் அருளிதுவே" என்றது (2039) இறைவன் உயிர்கட்குச் செய்யும் அருளாவது ஆசாரியனாக வந்து அருளுதலும், அடியார் கூட்டத்துடன் சாரவைத்தலுமாம் என்பது உண்மை நூல்களின் முடிந்த துணிபு எனச் சி.கே.சு. விளக்கி, "அன்பரொடு மரீஇ" (சூத், 12) என்பதை நினைப்பூட்டுவார்.

### பேய்த்தேர்

திருவலஞ்சுழியில் ஞானசம்பந்தர் தம் அடியார் கூட்டத்துடன் தங்கியிருந்தபோது, முதுவேனில் பருவம் வந்தது. அதை வர்ணிக்கும் சேக்கிழார்,

> அறல் மலியும் கான் ஆற்றின் நீர் நசையால் அணையும் மான்
> பெறல் அரிய புனல் என்று பேய்த்தேரின் பின் தொடரும்
>
> (2284)

என்கின்றார். பேய்த்தேர் என்பது கானல்நீர். பாலைநிலத்தில் வேனிற்காலத்தில் காணப்படும் ஒரு தோற்றம். தூரத்திலிருந்து பார்க்கும் போது நீர்நிலைபோல் தோன்றும். அருகில் சென்றால் ஒன்றும் இராது. மேலும் ஞாயிறு மறைந்தால் கானல்நீரும் மறையும். இங்குப் பேய்த்தேர் என்ற சொல்லின் பொருளை விளக்கும் சி.கே.சு,

பேய்த்தேர் என்று வரும் பேதைக்கு மற்றணைந்த
பேய்த்தேர் அசத்தாகும் பெற்றிமை (சி.போ.உ.வெண்பா 41)

என்பதையும், அது அசத்து - நிலையற்றது; இல்லை என்று சொல்வதற்கு ஏதுவானது என்ற இயல்பை உணர்த்த, அசத்துப் பொருள்கட்கு உதாரணமாக "நீரின் எழுத்தும், நிகழ்கனவும் பேய்த்தேரும்" (சி.போ. உ. வெண்பா, 34) இவற்றை உதாரணங்களாக மெய்கண்டார் காட்டுவதைச் சி.கே.சு. கூறுவார். நீரில் எழுத்து தோன்றியவுடன் மறையும், கனவு முடியாது இடையில் மறையும். பேய்த்தேர் ஞாயிறு மறைய மறையும்.

## காப்பு நிலையும் கடந்த நிலையும்

இறைவன் எல்லாப் பொருட்களுடனும் கலப்பினால் ஒன்றாகவும், பொருள்தன்மையால் அவற்றிலிருந்து வேறான வனாகவும், உள்ளிருந்து இயக்கும் தன்மையால் உடனாகவும் விளங்குகின்றான் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடாகும். இறைவன் இவ்வாறு ஒன்றாக, வேறாக, உடனாக விளங்கும் நிலை அத்துவிதம் என்று சொல்லப்படும்.

எப் பொருளுமாய் நின்றார் இரும்பூளை எய்தினார் (2297)

என்ற அடியில் "எப்பொருளுமாய் நின்றார்" என்றது கலப்பினால் இறைவன் எல்லாப் பொருட்களிலும் அவையேயாய் நிற்கின்றான் என்பதாம். "அவையே தானேயாய்" (சூத். 2) என்ற சிவஞானபோதமும் காண்க என்கின்றார் சி.கே.சு. இதே போன்று,

வானாகி நிலனாகி அனலுமாகி
மாருதமாய் இருசுடராய் நீருமாகி
ஊனாகி உயிராகி உணர்வுமாகி
உலகங்களனைத்துமாய் உலகுக்கு அப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் (2461)

என்ற பாடலடிகளில் ஆகி - என்பது முதலிய ஆக்கச் சொற்கள் வான் முதலிய தத்துவங்களைப் பற்றி, மூவகை மாயைகளையும் இயக்கும் இறைவன் நிமித்தகாரணனாகும் தன்மையையும், உயிராகி

என்ற இடத்து "அவையேயாய்" (சி.போ.2) என்றபடி உயிர்களேயாகி அவற்றுடன் அத்துவிதமாய் இறைவன் கலந்து நிற்கும் நிலையையும் உணர்த்தின. உலகுக்கு அப்பால் ஆனாத வடிவாகி - தத்துவங்களை யெல்லாம் கடந்து நின்ற இறைவனது சொரூபநிலை குறித்தது. இது "தானேயாய்" (சி.போ.சூத். 2) என்ற நிலை எனச் சி.கே.சு. விளக்குவார் (ப. 681).

## மெய்த்தவர்

ஞானசம்பந்தர் சென்ற இடமெல்லாம் அவரை "மெய்த்தவர் குழாம்" எதிர்கொள்கிறது (2418). மெய்த்தவம் என்பது சிவபூசையும், ஏனைச் சிவநெறி நிற்றலுமாம். மெய்த்தவர் என்ற சொல்லை மெய்கண்டார் பயன்படுத்துவதை,

"பரனுணர்வால் உணரும் மெய்த்தவரை மேவா வினை"
(சி.போ.உ. வெண்பா, 75)

எனச் சி.கே.சு. சுட்டிக் காட்டுகின்றார்.

## முதல்வனை உணரும் முறை

ஞானசம்பந்தர் பாடிய திருப்பாசுர 12 பாடல்களைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் 22 பாடல்களில் விரித்துரைப்பார். திருப்பாசுரத்தின் 2ஆவது பாடலில் சம்பந்தர் இறைவனை "அரிய காட்சியர்" என்கின்றார். அதன் கருத்தைச் சேக்கிழார் ஒரு பாடலில் விளக்குவார் (2724). காட்சிக்குரியர் எனில் அது பொருள் என்ன வரும். "அறிபொருள் அசித்தாம் அறியாதது இன்றாம்" (சி.போ. சூத். 6) என்றாற்போல் காட்சிக்குரியராயின் அழிபொருளாம். எவ்வாற்றானும் காட்சிப்படாரெனில் பயனின்றாம். ஆதலின் இவ்விருவகையுமின்றி உள்பொருளாய்ப் பாசஞானத்தாலும், பசு ஞானத்தாலும் பார்ப்பரிதாய்ப் பதிஞானம் ஒன்றானே காணப்படுவதாய் உள்ளது அந்த முதல்வனது இயல்பு என்பார் "காட்சியரியர்" என்னாது "அரிய காட்சியர்" என்றார். மேலும் இதனை விளக்க,

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக்கண்ணினில் சிந்தை நாடி (சூத். 9)

என்ற சிவஞானபோதக் கருத்தையும் எடுத்துக்காட்டாகச் சி.கே.சு. கூறுவார்.

## ஆன்மாவே ஐயுணர்வுகளை உணரும்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன் மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்

தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள் (2626)

இப்பாடலில் கண்களிப்ப என்ற சொல்லில் களித்தல் - உயிரின் உணர்வு நிகழ்ச்சி, கண்ணாகிய புற இந்திரியமும், மனமும் ஆகிய இவற்றுடன் ஆன்மா இயைந்து கண்ட காட்சியினால் உயிர் களிப்பை அடைந்தது என்க. கருவிகள் ஆன்மா இன்றி எவற்றையும் தாமே உணரமாட்டா. “அவற்றினான் ஆன்மா ஒன்றித்துக் காணின் அல்லது அவை ஒன்றையும் விடயியலா ஆகலான் ஐயுணர்வுகளை ஆன்மா உணரும்” என்ற சிவஞானபோத 5ஆம் சூத்திரக் கருத்தைக் காண்க என்று சி.கே.சு. கூறுகின்றார்.

## சிவஞான சித்தியார்
## மூவகைத் திருமேனி

பாயிரத்தின் முதற் செய்யுளில் சேக்கிழார் இறைவனை **‘உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்”** என்கின்றார். உணர்தல் - மனத்தின் தொழில். ஓதுதல் - வாக்கின் தொழில். எனவே உட்கரண, புறக்கரணங்களாகிய கருவிகளின் தொழிலுக்கு அப்பாற்பட்டவன் என்பதாம். இங்குக் குறித்தது இறைவனது சொரூப இலக்கணம். இது சித்தாகிய அவனது அருவத் திருமேனி. உயிர்கள் தமது பசு, பாச ஞானத்தால் எட்டுதற்கு அரியவன் என்பது. "நிலவு உலாவிய நீர் மலி வேணியன்" என்றது இறைவனது தடத்த இலக்கணம். இஃது அவனது உருவத் திருமேனி. அருவத் திருமேனியிலிருந்து உருவத் திருமேனி தாங்கி வருவது உயிர்களுக்கு அருள்புரியும் பொருட்டு. நிலவும், நீரும் சடையில் தாங்கிய வரலாறுகள் அவனது அருளைக் குறிப்பன. ''அலகில் சோதியன்'' என்பது இறைவனது அருவத்திருமேனியாம். இறைவன் அருவம்-உருவம்-அருவுருவம் என்ற மூன்று திருமேனிகளையும் தாங்கி வருவது உயிர்களிடத்துக் கொண்ட கருணையினால் ஆகும். இதற்குச் சி.கே.சு.,

உருமேனி தரித்துக் கொண்டது என்றலும் உருவிறந்த
அருமேனி அதுவும் கண்டோம்;அருவுருவான போது
திருமேனி உபயங் கண்டோம்; செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் விளைவு காணே (75)

என்ற சிவஞான சித்தியார் பாடலை ஆதாரமாகக் காட்டுகின்றார்.

## பிறவிப்பயன்

> ***ஊனடைந்த உடம்பின் பிறவியே***
> ***தானடைந்த உறுதியைச் சாருமால் (2)***

இங்கு 'உறுதி' என்றது பிறந்த பயனைக் குறிக்கும்.

> ***மானுடப் பிறவி தானும் வகுத்தது மன வாக்கு காயம்***
> ***ஆனிடத்து ஐந்து ஆடும் அரன் பணிக்காக அன்றோ***
> ***வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்தனை அர்ச்சிப்பர்***
> ***ஊனெடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ***
> ***(சிவஞானசித்தியார், 182)***

என்ற சாத்திரமும் காண்க என்கின்றார் சி.கே.சு.

## அருமறையாலும் அறிவதற்கு அரியவன்

> *அருமறை முறையிட்டு இன்னும் அறிவதற்கு அரியான் (192)*

வேதம் பிரணவத்திலும், பிரணவம் நாதத்திலும் தோன்றும். இறைவனோ தத்துவங்கடந்தவன் - தத்துவாதீதன் ஆதலின் வேதம் அறியாது என்பர். இக்கருத்துக்கு அரணாக,

> *வேதசாத்திரம் மிருதி புராண கலை ஞானம்*
> *விரும்பு அசபை வைகரி ஆதித்திறங்கள் மேலாம்*
> *நாத முடிவானதெல்லாம் பாசஞானம் (சித்தியார், 293)*

எனவும்,

> *"பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும்*
> *பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத்தாலே*
> *நேசமொடு உள்ளத்தே நாடி" (சித்தியார், 292)*

எனவும் வரும் பாடல்களைச் சி.கே.சு. காட்டுகின்றார்.

## இறைவனின் இருவேறுபட்ட தன்மை

இறைவன் எல்லாமாய் விளங்குவதை விளக்கும் சேக்கிழார், "பெண்ணுமாய் ஆணும் ஆகி" *(350)* என்கின்றார். சக்தியும், சிவமுமாய் உலகெலாம் நிறைந்து நிற்கும் தன்மை. இவ்வாறு இறைவன் தன்னுள்ளே சக்தி, சிவமென இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலாலே தான், பல்வேறு வகைப்பட்ட உயிர் வடிவங்களெல்லாம் குறியாலும், குணத்தாலும் ஆண், பெண் எனப் பேர் பெற்று அந்தந்த யோனிக்குள்ளே இருவேறு வகையாய் அடங்கித் தம்முள் கூடிக் களித்து வாழ்கின்றன. இதற்கு,

> **சக்தியும் சிவமுமாய தன்மை இவ்வுலக மெல்லாம்**
> **ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உணர் குணகுணியுமாகி**
> **வைத்தனன்**

என்ற சித்தியார் பாடலை (69) சி.கே.சு. சான்றாகக் காட்டுவார்.

## முக்தி இலக்கணம்

மெய்ப்பொருள் நாயனார் முக்தி அடைந்ததைக் குறிப்பிடும் சேக்கிழார்,

> **அண்ட வானவர்கட்கு எட்டா அருட்கழல் நீழல்சேரக்**
> **கொண்டவாறு இடையறாமல் கும்பிடுங்கொள்கை ஈந்தார்**
> *(489)*

என்கின்றார். இப்பாடலில் வரும் "இடையறாமல் கும்பிடுங் கொள்கை" என்பதனைச் சி.கே.சு. இதுவே சைவசித்தாந்தத்தின்படி முக்தி இலக்கணமாம். முக்தி நிலையிலும் உயிர் இறைவனுக்கு அடிமையேயாகி அவனைக் கும்பிட்டு இன்புற்றிருக்கும்" இதற்கு,

> குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே இருப்பர்

என்ற சித்தியார் பாடலடியைச் (308) சான்றாகச் சி.கே.சு. காட்டுகின்றார்.

## வளர் திருத்தொண்டின் நெறி

> திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
> வருஞானத் தவமுனிவர் வாகீசர் (1266)

எனச் சேக்கிழார் திருநாவுக்கரசரைப் பற்றிக் குறிப்பிடுவார். இப்பாடலில் வரும் "வளர் திருத்தொண்டின் நெறி" என்றது சரியையாதியாக எண்ணப்படும் சிவநெறி தொண்டு செய்து சிவனை அடையும் நெறி.

> **சன்மார்க்கம் சகமார்க்கம் சத்புத்ரமார்க்கம்**
> **தாதமார்க்கம் என்றுஞ் சங்கரனை அடையும்**
> **நன்மார்க்கம் நாலு அவைதாம் ஞானயோகம்**
> **நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்**

என்ற சித்தியார் பாடலைச் (270) சான்றாகச் சி.கே.சு. காட்டுகின்றார். இந்நெறி நான்கினுள் ஆதாரமாக முதலில் நிற்பது தாதமார்க்கம் என்னும் சரியையாகும். நாயனார் உழவாரப்பணி செய்வதனை மேற்கொண்டு அதனைத் தேற்றமாகக் காட்டினார். சைவசமய

பரமாச்சாரியர்கள் நால்வர்களுள் சரியையினை விளக்கிக்காட்ட அவதரித்தவர் இந்நாயனார் என்று வழங்குவது மரபு. ஞானத்தவம் என்றதனால் சரியை மட்டுமேயன்றி அது முதலாக ஞானம்வரை நான்கு நெறிகளையும் விளக்கினர் என்பதாம்.

ஞான யோகக் கிரியா சரியை நாலும்
நாதன்தன் பணி ஞானி நாலினுக்கும் உரியன்

என்ற சித்தியார் பாடலைச் (326) சி.கே.சு. சான்றாகக் காட்டுவார்.

## சரியையின் இலக்கணம்

திலகவதியார் திருவதிகை வீரட்டானக் கோயிலில் செய்த திருப்பணிகளை,

*புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற*
*நலமலியான் சாணத்தான் நன்கு திருமெழுக்கிட்டு*
*மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்*
*பலர்புகழும் பண்பினால் திருப்பணிகள் பல செய்தார் (1309)*

என வர்ணிக்கிறார் சேக்கிழார். இங்குக் கூறிய சரியையின் இலக்கணத்திற்கு,

*தாதமார்க்கம் சாற்றில் சங்கரன்தன் கோயில்*
*தலம் அலகிட்டு இலகு திருமெழுக்கும் சாத்திப்*
*போதுகளும் கொய்து பூந்தார் மாலை கண்ணி*
*புனிதற்குப் பல சமைத்துப் புகழ்ந்து பாடித்*
*தீதில் திருவிளக்கிட்டுத் திருநந்தவனமும்*
*செய்து திருவேடங்கண்டால் அடியேன் செய்வது*
*யாது பணியீரென்று பணிந்தவர் தம் பணியும்*
*இயற்றுவது இச்சரியை செய்வோர் ஈசன் உலகிருப்பர்*

என்ற சிவஞானசித்தியார் பாடலைச் (271) சி.கே.சு. மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## சீவன் முத்தர் இயல்பு

நாவுக்கரசரைச் சமணர்கள் ஏழுநாள் சுண்ணாம்புக் காளவாயிலிட்ட போது அவர்,

*ஈண்டு வரும் துயருளவோ ஈசன் அடியார்க்கு என்று*
*மூண்ட மன நேர்நோக்கி முதல்வனையே தொழுதிருந்தார்*
*(1362)*

என்கின்றார் சேக்கிழார். அதாவது நாவுக்கரசர் மனத்தில் வேறு சிந்தனை எதுவுமில்லை. சிவனது திருவடிகளையே சிந்தித்துத் தொழுது கொண்டிருந்தார். இஃது அணைந்தோர் இயல்பாகும்.

> பரஞானத்தால் பரத்தைத் தரிசித்தோர் பரமே பார்த்திருப்பர்
> சிவன் முத்தர் சிவமே கண்டிருப்பர்

என்ற சிவஞானசித்தியார் பாடலைக் (311) காண்க என்கின்றார் சி.கே.சு.

## அடியார் கூட்டுறவு

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருப்புகலூரில் முருகநாயனாரது திருமடத்தில் ஒருசேர எழுந்தருளியிருந்தபோது, சிறுத்தொண்ட நாயனாரும், திருநீலநக்க நாயனாரும் அங்கு எழுந்தருளினர் (1507). இந்த இரண்டு நாயன்மார்களும், சம்பந்தரையும், நாவுக்கரசரையும் கண்டு தொழுது போற்றி உடனிருக்கும் வாழ்வு பெறற்பொருட்டு எழுந்தருளினர் எனச் சி.கே.சு. காரணம் கூறுகின்றார். "இஃது அடியார்தன்மை.

> ஆசையோடும் அரனடியார் அடியாரை அமைந்திட்டு
> அவர் கருமம் உன் கருமமாகச் செய்து
> கூசிமொழிந்தருள் ஞானக்குறியில் நின்று
> கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே

என்று சிவஞான சித்தியார் (323) கூறுவதைக் காண்க. இவ்வாறு மற்றும் பல அடியார்களும் எழுந்தருளிச்சேர்ந்ததும் காண்க" என்கின்றார் சி.கே.சு.

## எல்லாம் சிவன்

பெரியபுராணத்திற்கு விரிவான உரை விளக்கம்செய்த சி.கே.சு. அந்தந்த நாயன்மார் வரலாற்றினைக் கூறும்பொழுது ஆங்காங்கே அவர்கள் பாடிய பதிகங்களையும் குறிப்பிட்டுக் குறிப்புரையோ, பதவுரையோ, சிறுவிளக்கவுரையோ தருகின்றார். காரைக்காலம்மை யாரின் அற்புதத் திருவந்தாதியில்,

> எக்கோலத்து எவ்வுருவாம் எத்தவங்கள் செய்வார்க்கும்
> அக்கோலத்து அவ்வுருவேயாம் (அ.தி. 33)

என்ற அடிகட்கு விளக்கம் செய்யும்போது,

> யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
> மாதொரு பாகனார் தாம் வருவர் (சித்தியார், 115)

*அறுவகை சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்*
*(சித்தியார், பாயிரம், 2)*

என்பனவற்றைச் சி.கே.சு. மேற்கோள்களாகக் காட்டுவார்.

## உயிர்களின் படிமுறை மேம்பாடு

திருஞானசம்பந்தரின் வரலாற்றினைச் சேக்கிழார்,

*வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப்*
*பூத பரம்பரை பொலிய (1899)*

எனத் தொடங்குகின்றார். இங்கு, பூதபரம்பரை பொலிய என்றால் - உயிர்கள் வழி வழி மேம்பாடடைய. பூதம் - உயிர்கள். பொலிதலாவது - கன்மத்துக்கீடாகப் பற்பல பிறவிகளிலும் வரும் உயிர்கள் சிருட்டியின் கருத்தாவாகிய திருவருளினை அவ்வவற்றின் பக்குவத்திற்கேற்பப் பெறுதற்குத் தகுதிபெற மேலோங்குதல். அவ்வாறு பொலிவடைந்தது எனும் படிமுறையினை,

*புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்*
*புகல் மிருதிவழி உழன்றும் புகலும் ஆச்சிரம*
*அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்*
*அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும்*
*சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத*
*சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத்*
*திறத்தடைவர் இதில் சரியை, கிரியா யோகம்*
*செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்*
*(சித்தியார், 263)*

என்று அருணந்திசிவாசாரியார் அருளியது காண்க என்று சி.கே.சு. கூறுகின்றார்.

## அரனன்பரின் பாவம் அறமாதல்

ஞானசம்பந்தப் பெருமான் திருச்சேய்ஞலூர் எழுந்தருளிய போது, அவ்விறைவனின் கருணையைத் துதித்துத் தாதையின் தாளைத் தடிந்த பாதகத்துக்குச் சண்டீசப்பிள்ளையாகிய பரிசினைப் போற்றிப் பாடினார் (2146). இக்கருத்துக்கு அரணாகச் சி.கே.சு. (அரனடிக்கு அன்பர் செய்யும் பாவமும் அறமதாகும் . . . . நரரினில் பாலன் செய்த) "பாதகம் நன்மையாய்த்தே" (சித்தியார், 119) என்பதனை எடுத்துக்காட்டாகக் கூறுகின்றார்.

## இறைஇயல்பும் உயிரியல்பும்

ஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் இருந்த போது, சீர்காழியிலிருந்து வந்த அந்தணர்கள் அவரைக் கண்டு வணங்கி, சீர்காழிக்கு எழுந்தருளும்படி வேண்ட, சம்பந்தரும் நாளை திருவீழிமிழலை இறைவரது திருவருளைப் பெற்று நாம் போகலாம் என்று சொல்ல, அன்றைய இரவு இறைவன் அவர் கனவில் தோன்றி, சீர்காழியில் இருந்த காட்சியினை நாளை திருவீழிமிழலைக் கோயில் விமானத்தில் காட்டுகின்றோம்; காண்பாயாக என அருளிச் செய்தார் (2450 - 2453).

> தேரணியின் நாம் அங்கிருந்த வண்ணம்
> தூமறை வீழிமிழலை தன்னுள்
> சேணுயர் விண்ணின்று இழிந்த இந்தச்
> சீர்கொள் விமானத்துக் காட்டுகின்றோம்
> பேணும் படியால் அறிதி (2453)

இப்பாடலில் வரும் 'காட்டுகின்றோம் - - - - - அறிதி' என்றது இறைவனின் எங்கும் நிறைந்த தன்மையைக் காட்டுகின்றது. அவன் காட்டக் காணும் தன்மையுடையன உயிர்கள் என்று உயிர்களின் தன்மையும் உணர்த்தப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாகச் சி.கே.சு.,

> அறிவிக்கப்படும் சித்து இவன்றான்
> அவன் தானே அறியும் சித்து (சித்தியார், 320)

என்பதைக் காட்டுகின்றார்.

### காலத்தத்துவம்

திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது சம்பந்தரும், நாவுக்கரசரும் இறைவனிடம் வேண்டிப் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்தனர். பின் உலகில் மழை பெய்ததனால், உணவுப் பொருட்கள் பெருகி, அதனால் எல்லா உயிர்களும் துன்பம் நீங்கித் திருவருளினால் உலகம் முழுவதும் செழிப்படையும் நற்காலம் வந்தது (2476). இதற்கு விளக்கம் கூறும் சி.கே.சு. "விதியினுக்குக் காலமும் கடவுள் ஏவலால் துணைக்காரணம் காண்" (சித்தியார், 30) என்றபடி காலம் இறைவன் ஏவலால் உயிர்கட்கு வினைப்பயன்களின் நுகர்ச்சியை வரையறுக்குமாதலின், உயிர்களால் விலக்கலாகா வலிமையுடைத்து ஆயினும் அதன் பயன் அடியாரைத் தாக்கி நலிவு செய்யாமல் படிக்காசு வைத்தனர். அக்கால எல்லை நீங்க உலகம் மழையால்

செழிப்புற்று இன்புறும் காலம் வர அதுவரை இறைவரைப் போற்றி நின்றனர் இருபெருமக்களும். காலக்கொடுமை தாக்காமைக்கும், தீர்வதற்கும், நன்மை வருவதற்கும் திருவருளே துணையாம் என்பது விளக்கப்படும்" என்கின்றார்.

## மும்மலச் சிதைவு

திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளிய இறைவனின் கோலத்தை வர்ணிக்கும் சேக்கிழார், அவர் கையிலுள்ள சூலத்தை 'மருள்பொழி மும்மலம் சிதைக்கும் வடிச்சூலம்" என்கின்றார் (3694). மும்மலங்களும் சிதைக்கப்படவேண்டும். ஏன்?

> **முன்னமே ஆன்மாவின்தன் மும்மலத்து ஒன்றதாகிக்**
> **கன்மமும் மூலம் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்**
> **(சித்தியார், 129)**

ஆதலால் கன்மம் சிதைக்கப்படுதல் வேண்டும். மாயை உயிரறிவை விளக்கம் செய்யும். சூரியோதயம் வரை இரவில் இருட்டை நீக்க, கைவிளக்கு உதவுவது போல, உயிர்களிடத்துச் சிவப்பேரொளி பிரகாசிக்கும் வரை உயிர்களின் அக இருளை நீக்க இறைவனால் தரப்பட்டதல்லவா மாயை. அது ஏன் நீக்கப்படவேண்டும் என ஐயம் எழலாம். இதனைப் போக்கச் சி.கே.சு. மாயை ஆணவத்தோடு சேரும்பொழுது மயக்கத்தைத் தரும்;

> **வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே**
> **(சித்தியார், 143)**

என வருதலின் அதுவும் சிதைக்கப்படவேண்டும் என்கின்றார்.

> **ஆன்மாவின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து நின்று**
> **என்றும் அஞ்ஞானம் காட்டும் ஆணவம் (சித்தியார், 170)**

ஆதலின் அதனைச் சிதைத்தாலன்றி உயிர் வீடு பெறாது. ஆதலின் "மருள்பொழி மும்மலம் சிதைக்கும்" எனச் சி.கே.சு. விளக்குகின்றார்.

## இறைவனின் உருவத் திருமேனியின் இயல்பு

சிறுத்தொண்ட நாயனார் வீட்டிற்கு இறைவன் வைரவக் கோலத்தோடு வருகின்றார். இத்திருக்கோலம் இறைவர் தம் இச்சையால் பூண்டது. பசுக்களாகிய ஏனைத் தேவர்களும், மக்கள் முதலிய உயிர்களும் கொள்வன போன்று மாயையில் தோன்றிவரும் உடல்போல்வதன்று என்று உரைத்து, அதற்குச் சான்றாக,

> **குறித்தது ஒன்றாக மாட்டாக் குறைவிலன் ஆதலானும்**
> **நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும்**

வெறுப்போடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமையானும்
நிறுத்திடு நினைந்தமேனி நின்மலன் அருளினாலே

(சித்தியார், 65)

என்ற பாடலைச் சி.கே.சு. காட்டுகின்றார் (மேலது) இறைவனின் உருவம் அருட்டிருமேனி. அவன் நினைந்த வடிவம் எடுக்கும் வல்லமையுடையவன் என்பது உணரப்படும்.

## இருபா இருபஃது

## பக்குவ ஆன்மாக்களே ஞானோபதேசம் பெறற்குரியன

வைகைக் கரையில் ஞானசம்பந்தப் பெருமான் தென்னன் பாண்டியன்முன் திருப்பாசுரம் பாடினார். இதனை,

தென்னவன் மாறன் தானும் சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றையார் தம் திருநீறு பூசப் பெற்று
முன்னை வல்வினையும் நீங்க முதல்வனை அறியுந் தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்றலாலே

(2717)

என்றும்,

உலகியல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்
நிலவு மெய்ந்நெறி சிவநெறியது என்பதும்
கலதிவாய் அமணர் காண்கிலர் ஆயினும்
பலர் புகழ் தென்னவன் அறியும் பான்மையால் (2718)

என்றும் சேக்கிழார் கூறுகின்றார். அமணர்கள் வைதிக நெறி ஒழுகாதவர். அதனால் அதனின் மேம்பட்ட சைவநெறியின் உண்மைத்திறத்தை உணராத புறச்சமயிகளாவர். எனவே இப்பதிகம் அமணர்கட்கு அறிவுறுத்துவதற்காக அன்றி, முதல்வனை அறியும் தன்மை துன்னிய பக்குவமுடைய தென்னவனை அறிவுறுத்தித் தேற்றுவதற்கு எழுந்த ஞானோபதேசமாகும் எனச் சி.கே.சு. உரை விளக்கம் கூறி, "மன்ற பாண்டியன் கேட்பக் கிளக்கும் மெய்ஞ்ஞானம்" (இருபா இருபஃது, 2) என்பதனைச் சான்றாகக் காட்டுகின்றார். உயிர்கள் ஞானம் பெற உயிர்களிடத்துப் பக்குவமும் வேண்டும். ஞானகுருவும் வேண்டும். இங்குப் பக்குவான்மா பாண்டியன். ஞானகுரு சம்பந்தர். வைகைக்கரையே தீட்சாமண்டபம். செய்தது சாத்திரத் தீக்கை.

**உண்மை விளக்கம்**

## ஆன்மாவின் குறிக்கோள் சிவபோகம் துய்த்தல்

கைலைமலையில் அம்மையைக் கண்ட இறைவன் "அம்மையே" என அன்புடன் அழைத்து "நீ வேண்டும் வரம் யாது" என வினவ அம்மையாரும் பின்வருவனவற்றை வேண்டுகின்றார்.

1. இறைவாத இன்ப அன்பு
2. பிறவாமை
3. மீண்டும் பிறப்புண்டேல் இறைவனை என்றும் மறவாமை
4. அவன் ஆடத் தான் மகிழ்ந்து பாடி அவனடிக்கீழ் இருத்தல் (1776).

பிறவாமையைப் பெறுவதும், அது பெறாது எப்பிறப்பாயினும் பெற்று மறவாமையைப் பெறுவதும் தம்வயத்தன அல்ல. இவற்றுள் எதுவரினும் திருவடிக்கீழ் என்றும் நீங்காது பாடிக் கொண்டிருக்கும் பேற்றினையே சிறந்த முடிபாகிய வரமாகக் கேட்டனர். ஏன்? அவை கிடையாவிடின் மேலுள்ள நிலைகள் முற்றுப் பெற்றனவாகா. உயிர்கள் இறைவன் திருவடிகளை அடைந்துப் பேரின்பம் துய்த்தலே சித்தாந்த முக்தி. முக்தி நிலையில் உயிர் சிவப்பேரின்பதை மட்டுமே அனுபவித்துக் கொண்டிருக்கும். "சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு" (உண்மை விளக்கம், 50) என்றபடி இறைவரது திருவடிக்கீழ் நின்று ஆனந்தமுறுதலே ஆன்மா பெறத்தக்கது எனச் சி.கே.சு. விளக்குகின்றார்.

## கோபுரமும் சிவனும்

தந்தையாருடன் சீகாழிக் கோயிலுக்குச் சென்ற ஞானசம்பந்தர், தந்தை பிரமதீர்த்தத்தில் நீராடும் போது காணாது, கரையிலிருந்து,

> தம்மேலைச் சார்புணர்ந்தோ? சாரும் பிள்ளைமை தானோ
> செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம் பார்த்து
> அம்மே அப்பா என்றென்று அழுது அருளி அழைத்தருளினார்
> (1961)

இங்குத் திருத்தோணி சிகரம் என்றது தோணிவடிவிலுள்ள அக்கோயிலின் விமானத்தைக் குறித்தது. ஆனால் சி.கே.சு. இங்குப் புதுப்பொருள் கூறுகின்றார். கரம் சாரியை என்று கொண்டு சிகரம் -சி என்ற எழுத்து என்று பொருள் கொண்டு இதற்குத்

திருத்தோணியிலுள்ள சிகரப் பொருளாகிய சிவபெருமானை உள்ளே பார்த்து என்கின்றார். திருவைந்தெழுத்தினுள்,

> **ஈசன் அருள் ஆவி எழிலார் திரோதமலம்**
> **ஆசில் எழுத்து அஞ்சின் அடைவாம் (உண்மை விளக்கம், 40)**

என்றபடி 'சி' சிவனைக் குறிப்பது என்ற ஆகமமும் காண்க என்கின்றார்.

## அந்தக்கரணங்களின் தொழில்

ஞானசம்பந்தரும், அவரது அடியார்களும் தங்கியிருந்த மடத்திற்குச் சமணர்கள் மன்னனின் அனுமதி பெற்று மந்திரம் சொல்லித் தீ வைக்க முயன்றனர். அது பற்றவில்லை. "மற்று இனிச் செய்யும் புந்தியாவது இங்கு இது" என (2598) நிச்சயித்து வஞ்சனையால் உண்மையாகத் தீ வைத்துவிட்டனர். புந்தி - புத்தி தத்துவத்தின் தொழில். புத்தி தத்துவம் இது செய்யத்தக்கது என நிச்சயித்தும், இதனை நான் செய்வேன் என்று அகங்காரம் பல்கால் எழுந்திருந்தும் செயல் புரியும்.

> **அந்த மனம் புத்தியுடன் ஆங்காரம் – சிந்தையிவை**
> **பற்றியது நிச்சயித்து பல்கால் எழுந்திருந்து ஆங்கு**
> **உற்றது சிந்திக்கும் உணர் (உண்மை விளக்கம், 16)**

என்று அந்தக் கரணங்களின் தொழில்களாகிய இவற்றின் தன்மைகளை ஞானசாத்திரம் பேசுதல் காண்க என்கின்றார் சி.கே.சு. (மனம் - விடயங்களைப் பற்றும். புத்தி இன்னது இது என நிச்சயிக்கும். ஆங்காரம் எழுச்சியுற்றுச் செயல் புரியும்.

## சிவப்பிரகாசம்
## கருணைகூர் நோக்கம்

கண்ணப்பநாயனார் காளத்திமலை மீது ஏறிக் குடுமித் தேவரைக் காண்பதற்கு முன்பே, "அங்கணர் கருணைகூர்ந்த அருட்டிரு நோக்கம்" அவருக்கு எய்திற்று (753). இங்குக் கருணைகூர்ந்த நோக்கம், அருட்டிருநோக்கம் எனக் கூட்டுக. கருணைகூர்ந்த நோக்கமாவது, இருவினைப்பயனை ஊட்டித் திரோதான உருவமாய் நின்ற மறக்கருணை மாறி அறக்கருணையாய்ச் சிறந்த நோக்கம். அருள்திரு நோக்கம் என்பது சட்சு தீக்கை. இதனை, பாசபந்தம் நீங்கும் பொருட்டுச் சீடன் ஆசாரியனால் பார்க்கப் படுகிறான் என்று ஆகமம் கூறும்.

> **முன் சினமருவு திரோதாயி கருணையாகித் திருந்திய**
> **சத்திநிபாதம் திகழுமன்றே**

என்ற ஞானசாத்திரத்தால் (சிவப்பிரகாசம், 48) கருணைகூர்ந்த திருநோக்கம் விளக்கப்பட்டது என்கின்றார் சி.கே.சு.

## ஞானம்

ஞானசம்பந்தர் ஞானம் பெற்ற நிலையினை,

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில் (1968)

என்கின்றார் சேக்கிழார். இங்கு "உவமையிலாக் கலைஞானம்" என்றது அபரஞானத்தையும், ''உணர்வரிய மெய்ஞ்ஞானம்'' என்றது பரஞானத்தையும் குறித்து நின்றன. ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" "பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்'' என்பன முறையே இவற்றை விளக்கும் விசேடணமாகக் கொள்க. இவ்வாறு கொள்வது ஆசிரியர் கருத்தென்பதை,

மேவரும் ஞானம் இரண்டு அவற்றுள் ஒன்று விமலனார்
பாத தாமரையே
ஓவறு அன்பினின் உணர் திருவளிக்கும் ஒப்பிலா
உயர்கலைஞானம்
தாவரும் பவத்தை வேரொடும் களையும் தக்க மெய்ஞ்ஞானம்
ஒன்று இவற்றால்
சாவதும் பிறப்பும் தனப்புறச் சிவத்தைச் சார்ந்து அதுவாய் நிற்றல்
யோகம்

(திருத்தணிகைப் புராணம் – அகத்தியன் அருள்பெறு படலம், 353)

என்று கச்சியப்ப முனிவர் இத்திருப்பாட்டினை விரிவுரை செய்தருளியவற்றால் நன்கு புலப்படும் என்றும்,

உயர் ஞானம் இரண்டாம் மாறா மலம் அகல மன்னுபோதத்
திருவருள் ஒன்று ஒன்று அதனைத் தெளிய ஓதும் சிவாகமம்
என்று உலகறியச் செப்பு நூலே (பாயிரம் – 10)

என்று சிவப்பிரகாசத்தினுள் உமாபதிசிவம் உபதேசித் தருளியவாற்றாலும் இது தெளிவுபடும் என்று சி.கே.சு. கூறுகின்றார்.

## இறைச்செயலனைத்தும் அருளே

மதுரையில் ஞானசம்பந்தரும், அவரது அடியார்களும் தங்கியிருந்த மடத்திற்கு அமணர்கள் வஞ்சனையால் தீ வைக்க,

எய்தவன் இருக்க அம்பை நோவது என் என்றபடி சம்பந்தர் அந்த வெப்பு நோய் பாண்டியனைப் பையவே சென்று பற்றும்படி பதிகம் பாட, இறையருளால் வெவ்விய தீத்தொழில் முழுதினும் கூடிய வெம்மையின் தொகுதி வெப்பமாக மன்னனைப் பற்றியது (பெ. பு. 2603 - 2604). ஒருவற்கு நோய்வரச் செய்தல் அருளாமோ எனின், உலகில் வரும் நோய்கள் யாவும் பலவாற்றாலும் உடலுள் புகுந்த கேடுகளை நீக்கும் பொருட்டே உடலியல்பின் அமைக்கும் இறைவரது அருளமைப்பேயாம் என்பது மருத்துவநூல் துணிபு. இங்கு உயிரின்கண் சேரும் பாவவினையையும் நோய் தந்து தீர்த்தல் இறைவரருளேயாம் (இறைவன் ஐந்தொழில்களையும் உயிர்களிடத்திலுள்ள அருள் காரணமாகவே செய்கின்றார். படைத்தல் - மலபரிபாகம் வர; காத்தல் - வினைப்பலன்களை நுகர; மறைத்தல் - அதில் நிலை நிறுத்த; ஒடுக்கல் - இளைப்பாற்றுவிக்க; அருளல் - பேரின்பம் துய்க்க) இங்குச் சி.கே.சு,

தோற்ற மலபாகம் வரக் காத்தல் போகம்
துய்ப்பித்தல் திரோதாயி நிறுத்தலாகும்
போற்றவரும் அருள் அருளேயன்றி மற்றும்
புகன்றவையும் அருளொழியப் புகலொணாதே
(சிவப்பிரகாசம், 18)

என்பதனை மேற்கோளாகக் காட்டுகின்றார்.

## திருவருட் பயன்

### வாய்மை – பொருள் விளக்கம்

திருநாவுக்கரசு நாயனார் புராணத்தின் தொடக்கத்தில் "வாய்மை திகழ் பெருநாமச்சீர்" (1266) என்கின்றார் சேக்கிழார். வாய்மை திகழ்வதற்கு ஏதுவாகிய திருப்பெயர் என்பது பொருளாம். இங்கு வாய்மை என்பது சிவபோகமாகிய சிவானந்த நிலையைக் குறித்தது. யான், எனது என்ற அகப்பற்று, புறப்பற்றுடன் செய்யும் செயல்கட்குப் பயன் பிறப்பறுப்பு. பற்றற்று அருள்வழி நின்றுசெய்யும் செயலுக்குப் பயன் வீட்டின்பம் என்று உமாபதிசிவம் அணைந்தோர் தன்மையில் கூறும், "வறும் தொழிற்கு வாய்மை பயன்" (திருவருட்பயன், 97) என்பதைச் சி.கே.சு. மேற்கோளாகக் காட்டுகின்றார்.

### சிவமந்திரம்

நாவுக்கரசரைச் சமணர்கள் கல்லோடு கட்டிக் கடலில் விட்ட போது அவர்,

**எப்பரிசாயினும் ஆக ஏத்துவன் எந்தையை என்று**
**செப்பிய வண்டமிழ் தன்னால் சிவன் அஞ்செழுத்தும்**
**துதிப்பார் (1390)**

என்கின்றார் சேக்கிழார். "சிவன் அஞ்செழுத்தும் துதிப்பார்" என்றது சிவனை உள்ளடக்கிய மகாமந்திரம். சிவனை அடைவிக்கவல்ல - சிவனருளைத் தேடித்தரவல்ல என்பது பொருளாம் (பிரணவ மந்திரமும் சிவனை உள்ளடக்கியதே).

**இறைசக்தி பாசம் எழில் மாயை ஆவி**
**உற நிற்கும் ஓங்காரத்துள்** (திருவருட்பயன், 82)

என்கின்றார் சி.கே.சு..

## இறைவன் அருள்புரியும் முறை

கண்ணப்ப நாயனாரது வரலாற்றில் பொத்தப்பி நாட்டிலுள்ள உடுப்பூரில் மலைவாழ் குறவர்களின் இடங்களில் காட்டுப்பன்றி, புலி, கரடி, கடமை முதலிய மானினங்களும், அவற்றின் பார்வை மிருகங்களும் உள்ளன (652) என்கின்றார் சேக்கிழார். இப்பாடலில் வரும் பார்வை என்றது பார்வை மிருகங்களைக் குறிக்கும். வேடர்கள் மிருகங்களைப் பிடித்துப் பழக்கி வைத்து அவற்றின் உதவியால் பழக்கப்படாத ஏனைய காட்டு மிருகங்களைப் பிடிப்பர். "மான் காட்டி மான் பிடிப்பது போல" என்ற பழமொழி இதனின்று எழுந்ததாம். இறைவன் அவ்வவ்வுயிர்க்கும் அவ்வவையாய்த் தோன்றி அருள்புரிபவன் என்ற ஞானசாத்திரக் கருத்தும் காண்க என்ற சி.கே.சு,

பார்வை என மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக் காணார் புவி (திருவருட்பயன், 45)

என்பதை மேற்கோளாகக் காட்டுகின்றார். வேட்டுவர்கள் பார்வை விலங்கைக் காட்டி ஏனை விலங்குகளை வசப்படுத்திப் பிடிப்பர். அதுபோல சகலவர்க்கத்தினராகிய ஆன்மாக்களைத் தன் வசப்படுத்தி ஆட்கொள்ளுதற் பொருட்டு இறைவன் மானுடச் சட்டை தாங்கி வருகின்றான். இதனை உலகோர் அறியார் என்பது பொருள்.

### கண்ணின் பயன்

சண்டேசுரர் அவதரித்த தலத்தின் சிறப்பைக் கூறும் சேக்கிழார் பல உவமைகளைக் கூறுகின்றார். அவற்றுள் ஒன்று "கண்ணின் பயனாம் பெருகுஒளி" என்பதாம் (1214). காட்டும்

ஒளியாகிய ஞாயிறு முதலிய பேரொளிப் பொருள்களும் கண்ணுக்குப் பயனாகா. காணுமொளியாகிய கண்ணொளியே கண்ணுக்குப் பயனாம் என விளக்கி,

**ஒளியும் இருளும் உலகும் அலர்கண்**
**தெளிவு இல் எனில் என் செய** (திருவருட்பயன், 16)

என்பதனை மேற்கோளாகச் சி.கே.சு. காட்டுகின்றார்.

## வல்லிருள்

இறைவனை உணராவண்ணம் உயிரறிவை மறைப்பது ஆணவம். இந்த மறைத்தல் சக்தி காரணமாக ஆணவம் இருள் என்று சொல்லப்படுகின்றது. "இறைவனை இடைவிடாது சிந்திப்பவர்களது இருவினைகள் தொடர்வதற்குக் காரணமாகிய பொய்ம்மையை விளைத்து நிற்கும் மலஇருளை இம்மையே இறைவன் நீக்குவார்" என்கின்றார் சேக்கிழார் (2729). இங்கு இருளை 'வல்லிருள்' என அடைமொழி கொடுத்துக் கூறுகின்றார். வலிமையாவது ஏனைப் பொருள்களையும் மறைத்து, அவ்வாறு மறைக்கும் பொருள் உண்டு என்பதையும் அறியவொட்டாது தன்னையும் மறைத்து உடன் நிற்கும்.

ஒரு பொருளும் காட்டாது இருள் உருவம் காட்டும்
இரு பொருளும் காட்டாது இது (திருவருட்பயன், 23)

என்கின்றார் சி.கே.சு. இருள் பிறபொருட்களை மறைத்தாலும் தன்னைப் புலப்படுத்துவதால் அதிலிருந்து விடுபட மக்கள் முயற்சிப்பர் (விளக்கினை ஏற்றுவர்). ஆனால் அக இருளாகிய ஆணவமோ உயிர்கட்கு இறைவனையும் மறைத்துத் தன்னையும் புலப்படுத்தாது மறைப்பதால் அதிலிருந்து விடுபட உயிர்கள் முயற்சிப்பதில்லை. அகஇருள் உயிர்கட்குச் செய்யும் கொடுமையைப் புலப்படுத்தவே வல்லிருள் என்றார்.

## போற்றிப்பஃறொடை

## மூலகன்மம்

கண்ணப்ப நாயனாருக்குத் திருக்காளத்தியப்பரின் அருட்டிரு நோக்கம் எய்தியதால், பரிசனவேதியினால் இரும்பானது பொன்னானாற் போல், யாக்கையின் தன்மையும், வினைகள் இரண்டும், சாரும் மலம் மூன்றும் ஆறுதலால், அன்புப் பிழம்பாய்த் திரிவார் என்கின்றார் சேக்கிழார் (803). இங்கு வினை இரண்டாவன

- புனருற்பவத்திற்கு ஏதுவாக உயிரால் ஈட்டப்பட்ட அறம், பாவங்கள். "சாரும் மலம் மூன்று" என்றது ஆணவம், மாயை, கன்மம் என்பன. வினைகளிரண்டும் என்று முன்பு குறிப்பிட்டுவிட்டபடியால், மும்மலங்களுள் ஒன்றாகக் கூறப்படும் கன்மம்; இங்கு மூலகன்மம் குறித்தது. இதுவே முதலுற்பவத்தில் சூக்குமதேகம் பெறுதற்கு ஏதுவாயது. இதனை, (முந்துற்ற)

> நெல்லுக்குமி தவிடு நீடு செம்பிற் காளிதமும்
> தொல்லைக் கடல்தோன்றத் தோன்றவரும் - எல்லாம்
> ஒருபுடை ஒப்பாய்த்தான் உள்ளவாறு உண்டாய்
> அருவமாய் எவ்வுயிரும் ஆர்த்தே உருவுடைய
> மாமணியை உள்ளடக்கும் மாநாகம் வன்னிதனைத்
> தான் அடக்கும் காட்டத் தகுதியும் போல் - ஞானத்தின்
> கண்ணை மறைத்த கடிய தொழில் ஆணவத்தால்
> எண்ணுஞ் செயல் மாண்ட எவ்வுயிர்க்கும் - உள்நாடிக்
> கட்புலனாற் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
> பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்
> தனுகரணமும் புவனமும் தந்து (கண்ணி 6-12)

என்ற போற்றிப்பஃறொடையாலும் உணர்க என்கின்றார் சி.கே.சு.

### மாயையின் புணர்ப்பு

இறைவனை இடையறாது சிந்திப்பவர்களது இருவினைப் பொய்ம்மை வல்லிருளை அவர் போக்குவார் எனச் (2729) சேக்கிழார் கூறுகின்றார். "இருவினை - இருள்", எனக் கன்மம், ஆணவம் என இரண்டையுமே கூறினார். மும்மலங்களுள் மாயையாவது,

> கட்புலனால் காணார்தம் கைக்கொடுத்த கோலேபோல்
> பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் - முற்பால்
> தனு கரணமும் புவனமும் தந்து (கண்ணி, 11-12)

(முற்பால் - முதலுற்பவம்) என்பதால் மயக்கத்தை நீக்க இறைவன் தரும் உபகாரமாதலும், மலம் என்று உபசரித்துப் பேசப்படும் என்பதும் அறிக என்ற சி.கே.சு, இருவினைப் பொய்ம்மை வல்லிருள் போக்கவே அதன் பொருட்டுத் தரப்பட்ட மாயைப் புணர்ப்பும் உடனொழியும் ஆதலால் அதனை வேறு எடுத்துக் கூறாராயினர் என்கின்றார்.

### சங்கற்பநிராகரணம்

### சம்பந்தர் முருகர் அவதாரமா?

ஞானசம்பந்தருக்குப் பெயர் இடுதலாகிய அழகிய சடங்கினைத் திருஅவதார நாளுக்கு இசையும்படி செய்வித்து, நலம்

பயக்கும் ஞாயிறு போன்ற பெருமானைத் தாமரையின் மேல் எழுந்தருளிய தனிமுதலாகிய குழவிபோலத் தூயமணிகளை வரிசையாக அமைத்து அணி செய்யப்பட்ட தொட்டிலில் அமரும்படி செய்தனர் (1939). இங்குத் "தனிமுதல்குழவி" என்றது முருகப் பெருமானைக் குறிக்கும். இப்பாடலுக்கு உரைவிளக்கம்செய்யும் சி.கே.சு. முருகனைத் தனிமுதற்குழவி என்றதனாலும், உவமானமாக எடுத்தலானும், ஞானசம்பந்தரே முருகன் என்போர் கூற்றுப் பொருந்தாது என்கின்றார். "தருதிட்டாந்தமுந் தாட்டாந்திகமும் ஒரு பொருளாகி உவமை பெறாதே" (சங்கற்பநிராகரணம்) என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

## நிறைமொழி மாந்தர் ஆணை திருவருளாணை

திருஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துத் திருத்தெளிச்சேரியை அடைகின்றார். அவர் செல்லுமிடமெல்லாம் "பரசமய கோளரி வந்தான்" என்பது போலத் திருச்சின்ன ஓசை ஒலித்தது. அப்போது போதிமங்கைப் புத்தநந்தி என்பவன் எங்களை வாதில் வென்றபிறகே இச்சின்னத்தினை ஊதல் வேண்டும் என்று தடுத்தான், அப்பொழுது திருப்பதிகம் எழுதும் திருத்தொண்டர் சினந்து, திருஞானசம்பந்தரின் அஞ்செழுத்துத் திருப்பதிகத்திலுள்ள "புத்தர் சமண் கழுக்கையர்" என்னும் திருப்பாடலை ஓதித் திருச்சின்னத்தைத் தடுத்தோன் தலையில் இடி விழுக என்றார். அவர் சொற்படியே புத்தநந்தி தலையில் இடிவிழ அவன் இறந்தான் (2802 - 2808). "புத்தநந்தி வாக்கின் போர் ஏற்று அவன்தன் தலையும், மெய்யும், அற்றுவிழ அத்திரவாக்கு அதனால் அன்பர் அறுத்ததுவும்" (2808) - இங்கு வாக்கதனால் அறுத்தலாவது வாக்கில் கூறப்பட்ட சிவனது மந்திரமே படையாகக் கொண்டு என்பதாம்.

காழிமாநகர்க் கவுணியர் கடவுள்
ஞானமாகிய நற்பதிகங்கள்
எழுதுறும் அன்பர்தம் இன்புறு மொழியால்
களிறென அணைந்த கல்மனப் புத்தன்
முரண்டுச் சிரம் ஒன்று உருட்டினர் அன்றி
வாய்ந்த வாளொன்று ஏந்தினர் இலரே

(சங்கற்ப நிராகரணம்) என்று கூறுவது காண்க என்கின்றார் சி.கே.சு. இதனால் அடியவர்களின் சொல் குறித்த பயனை உடனே பயக்கும் என்ற உண்மை உணர்த்தப்பட்டது. எனவே அவர்கள் நிறைமொழி மாந்தர் எனப்பட்டனர். அவர்கள் ஆணை திருவருள் ஆணை ஆகும். இதனை, இந்நிகழ்ச்சி நடந்ததைக் கேள்விப்பட்ட திருஞானசம்பந்தர், "எதிர்ப்பட்ட இடையூறு நீங்கும்படி பொருந்திய இறைவனது

அருள்விதியே அதுவாகும். அதனால் சிவனை வழுத்தி "அர! அர! என்று சிவநாதம் ஓதி முழக்கம் செய்க" என்று கூறியருளியதால் (2808) உணரலாம்.

## சிவஞானபோதச் சிற்றுரை

### ஆணவத்தின் தன்மை

கண்ணப்பநாயனார் வரலாற்றில் "சாரும் மலம் மூன்று" (803) என்றது ஆணவம், மாயை, கன்மம் என்பன. இவற்றுள் ஆணவமானது சகசமலம் எனப்படும். ''இச்சகசமலம் ஞானதிரோதகமாய்த், திரவியமாய், அறியாமைக் குணத்ததாய்ச் செம்பிற் களிம்புபோல உயிரின் குற்றமாய், அநாதி பந்தமாய், ஒன்றேயாய், விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப்படும் பாகுபாட்டிற்கு ஏதுவாய், உயிர்கள் தோறும் தனித்தனி வெவ்வேறாய் மறைத்துநின்று தத்தம்கால எல்லையில் நீங்காவனவாகிய சக்திகள் பலப்பலவுடைத்தாய் உயிர்கள் மூன்றவத்தைகளும் படுதற்கு மூலகாரணமாய், நித்தமாய், வியாபகமாய், வியாபகஉயிர் அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் ஆணவம் என்னும் பெயர்த்தாய்ப்; பசுத்துவம் பசுநீகாரம் மிருத்தியு - மூர்ச்சை - மலம் - அஞ்சனம் - அவித்தை - ஆவிருதி என்றற்றொடக்கத்துக் காரணக்குறிகளுமுடைத்தாய் நிற்பது எனவும், படலம் படர்ந்த கண் ஞாயிற்றின் சந்நிதியில் நிற்பினும் படலந்தான் அவ்வொளியை இழந்து இருளின் அழுந்துமாறு போல, முதல்வன் சந்நிதியில் நிற்பினும் சோபான முறையில் அறிவிக்க அறியும் தன்மைத்தாய உயிர், அநாதியே அறிவித்தால் அறியமாட்டாமையின், அவ்வறிவை இழந்து அறியாமையாய் அழுந்துதலின் அஃது அவ்வுயிர்க்குப் பந்தமாயிற்று எனவும் உணர்க'' என்ற சிவஞானபோதச் (4சூத் - 2 அதிகரணம்) சிற்றுரையான் இதன் தன்மை அறியப்படும் என்கின்றார் சி.கே.சு.

### அஞ்செழுத்தைக் கணித்தல்

ஞானசம்பந்தர் மதுரையிலுள்ள திருமடத்தை அணைந்ததை, 'அஞ்செழுத்தின் மெய்யுணர்ந்தவர் திருமடத்து அணைந்தார்" (2410) என்கின்றார் சேக்கிழார். அஞ்செழுத்தின் மெய்யுணர்ந்தவர் - விதிப்படி திருவைந்தெழுத்தை எண்ணுவதனால் மெய்ப்பொருளைத் தம் உணர்ச்சியில் கைவரப் பெற்றவர். அஞ்செழுத்து என்றது முக்திப் பஞ்சாக்கரம். திருவஞ்செழுத்தால் சாதிக்கப்படும் பொருளும் அதுவேயாம். உணர்தல் - பாசத்தை ஒருவி ஞானத்தைப் பெற்று, ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள்

பயக்கும் திருவஞ்செழுத்தை அவ்விதிப்படி அறிந்து கணித்தல் (சி.போ. 9ஆம் சூத். சிற்றுரை - பிண்டப் பொழிப்பு) என்கின்றார் சி.கே.சு.

## சிவஞானமாபாடியம்

## சிவவேடத்தின் சிறப்பும், இயல்பும்

இனி பக்தரது திருவேடத்தையும், சிவாலயத்தையும் பரமேசுவரன் எனக் கண்டு வழிபடுக என்று (சி.போ.சூம். 12, அதி. 3) கூறுகின்றது. பக்தர்களின் வேடம் சிவனுருவை நினைப்பூட்டுவது. உலகத்தார் சிவபெருமானது உண்மைத்தன்மையை நேரே அறியமுடியாது. அதனால் சிவபெருமான் தனக்கேயுரிய திருநீறு, சடைமுடி முதலிய திருவேடங்களைத் தன் அடியார்கட்குக் கொடுத்து, அவர்கள் வாயிலாக மக்களுக்குத் தன்னியல்பை உணர்த்துகின்றான். இதனால் அடியார்கள் சிவமே என்று உணரலாம்.

திருவேடத்தின் இயல்பினை விளக்க மாதவச் சிவஞானமுனிவர்,

> தூயவெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
> நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
> பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச்செஞ்சொல்
> மேய செவ்வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே (1405)

> சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
> கந்தை மிகையாம் கருத்தும் கை உழவாரப் படையும்
> வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலி திருநீறும்
> அந்தமிலாத் திருவேடத்து அரசு எதிர் வந்தனைய (2168)

என்ற திருப்பாடல்களைச் சிவஞானமாபாடியத்துள் (பாடியம், சி.சு.மணிவிளக்கம், 1994, ப. 1084) எடுத்துக்காட்டினார் என்கின்றார் சி.கே.சு.

திருவேடத்தினைச் சிவமெனவே வழிபடவேண்டும் என்பதை,

> கண்ட கவுணியக் கன்றும் கருத்தில் பரவு மெய்க்காதல்
> தொண்டர் திருவேட நேரே தோன்றியது என்று தொழுதனர்
> (2169)

என்ற பெரியபுராண பாடலடிகளை மேற்கோளாகச் சிவஞான முனிவர் காட்டியதைச் (பாடியம் மு.நூல், ப. 1085), சி.கே.சு. குறிப்பிடுகின்றார்.

## நூற்பெயர்ச் சுட்டாமல் சித்தாந்த உண்மைகளைக் கூறல்
## பாசநீக்கமும், சிவப்பேறும்

சி.கே.சு. தம் பெரியபுராண உரையில் சாத்திர நூற்பெயரைச் சுட்டாமல் சித்தாந்த உண்மைகளைப் பல இடங்களில் எடுத்துரைக்கின்றார். திண்ணனாரின் தந்தை நாகனின் அழைப்பிற்கு இணங்கக் காணவந்த தேவராட்டியை நாகன், "அன்னை! நீ நிரப்பு நீங்கி இனிதிருந்தனையோ" (698) என வினவுகின்றான். "நிரப்பு நீங்கி" என்றது துன்ப நீக்கமும், நன்றினி திருந்தனையோ என்றது சிவப்பேறும் குறித்தன. துன்பநீக்கம் முதற்கண் வேண்டப்படுவது. அதன்பின்னர் இன்பம் வருவதாம். துன்பநீக்கமும், இன்பப் பேறுமாகிய இவையே சைவசித்தாந்த முடிபின் உள்ளுறையாதலும் உன்னுக என்கின்றார் சி.கே.சு.

### ஞானம்

சிவஞான இன்னமுதைக் குழைத்த உமையம்மையின் திருமுலைப்பாலை உண்ட ஞானசம்பந்தர் ஞானம்பெற்ற நிலையைச் சேக்கிழார் அழகாக வர்ணிப்பார் (1968). அதற்கு உரையருளிய சி.கே.சு., "ஞானம் என்பது தொகையால் ஒன்றாம். வகையால் பரம், அபரம் என இரண்டாம். பெறும் வாயில் விரியால் கேட்டல் முதலியவற்றால் நான்காம். இனி ஞானவேள்வி ஐந்தாயும், சரியை முதலிய நிலை பற்றி உண்மை, உபாயம் என்ற வேறுபாட்டால் எட்டாயும், தசகாரியம் பற்றிப் பத்தாயும், முன்கூறிய எட்டு நிலைகளும் ஒவ்வொன்று நான்காகும் முறை பற்றி முப்பத்திரண்டாயும் இன்னும் பலவாறாயும் விரிந்து நிற்பது ஞானம் என்பர். அவையெல்லாம் பரம், அபரம் என இருமுதல் ஞானங்களுள் அடங்கும் என்க என்கின்றார் சி.கே.சு. இவ்வாறு பல சித்தாந்த உண்மைகள் வெளிப்படும் இடங்களைப் பெரியபுராண உரை முழுதும் காணலாம்.

### முடிவுரை

சித்தாந்த நோக்கில் பெரியபுராணத்தை ஆய்வார்கட்கு சி.கே.சு.வின் பெரியபுராண உரை நூல்கள் மிகச்சிறந்த வழிகாட்டிகளாகும்.

# சட்டப் புலமை

மு. முத்துவேலு

தெய்வச் சேக்கிழார் அருளிய பெரியபுராணம் தமிழர் காப்பியம்; சைவநெறி தழைத்தோங்கத் தோன்றிய காப்பியம். எனினும் உலகம் உய்ய உயர்நெறிகள் பலவற்றை எடுத்துரைக்கும் காப்பியமும் ஆகும். இக்காப்பியப் புலவரின் உளப்பாங்கை உரைநடையில் விளக்க முற்பட்ட தண்டமிழ்ச் சான்றோர்கள் சிலர். அவர்களுள் தொழுவூர் வேலாயுத முதலியார், ஆறுமுக நாவலர், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், திரு. வி. கலியாணசுந்தரனார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆனால் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணத்திற்கு மிக விரிவான உரை எழுதியவர் என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

'இருட்டறையில் உள்ள எழில்மிக்க ஓவியத்தைக் காணக் கண்கள் மட்டும் இருந்தால் பயனில்லை. இருளைப் போக்கும் ஒளி வேண்டும். பழம்பொருட்காட்சிச் சாலையில் உள்ள பலவகையான கலைச்செல்வங்களைக் கண்டுகளிக்க அவற்றைப் பற்றிய விளக்கவுரை வேண்டும். இனிய பலாப்பழத்தைச் சுவைத்து மகிழ, அதனை முறையாக அறுத்துச் சுளை எடுத்துத் தருபவரின் உதவி வேண்டும். இவ்வாறே பழம்பெரும் இலக்கண இலக்கியச் செல்வங்களைக் கற்று மகிழ்வதற்குத் தக்க உரையாசிரியர்கள் வேண்டும். காட்டுவித்தால் அன்றி அவற்றைக் காண இயலாது என்பர் (மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள் ப. 31). சிவக்கவிமணியும் இருள்நீக்கும் ஒளியாய், பழம்பொருட்காட்சித் துணைவராய், பலாச்சுளைத் தருநராக இருந்து, பெரியபுராணத்துப் புதையல்களை நமக்கு அகழ்ந்தெடுத்துப் பொற் குவியல்களாய்த் தந்துள்ளார்.

சேக்கிழார், அனபாயச் சோழனின் அமைச்சராய் விளங்கியவர்; பல்துறை வல்லுநர்; பல்கலைச் செல்வர். அவர்தம் அறிவார்ந்த புலமை நலன்கள் எல்லாவற்றையும் பெரியபுராணம் என்னும் செந்தமிழ்ப் பேழையுள் தேக்கி வைத்துள்ளார். அவற்றையெல்லாம் வெளிக் கொணர்ந்து விளக்குதற்குத் தோய்ந்த உள்ளமும் ஆழ்ந்த புலமையும் வேண்டும். 'ஓர் ஆசிரியர் தமிழ் நூல்கள் அனைத்தையும் கற்கலாம்; பிறமொழிகளிலுள்ள பெரு நூல்களையும் பயிலலாம்; உரைகள் எழுதித் தம் கல்வித் திறனைக் காட்டலாம். ஆயின்

நூலாசிரியரின் உள்ளத்தில் நுழைந்து அவர் கருத்தை அறிவதும் அளப்பதும் அரிது. இப்பணியில் பேராசிரியர் பெரிய வெற்றி பெற்று விட்டார். உலகத்தில் பலதிறப்பட்ட தொழில்கள் உள்ளவர் களுக்கும் இவ்வுரை இன்பமளிக்கும். சட்டம், சிற்பம், இசை, மருத்துவம், தத்துவம், விஞ்ஞானம் இன்னும் அநேகக் கலைகளின் நுட்பங்கள் செறிந்த தொண்டர் புராணத்தை அந்நுட்பங்களை வெளிப்படையாகக் கூறியிருக்கும் தனிப்பெருமை உரையாசிரியர் அவர்களுக்கே உரியது' என்று சிவக்கவிமணியின் பெரியபுராண உரையின் (நான்காம் தொகுதி, பக். 9-10) சிறப்பை ஏ.சி.ஷண்முக நயினார் புலப்படுத்துகின்றார்.

## உரையாசிரியரின் பல்துறைப் புலமை

சிவக்கவிமணியின் பல்துறைப் புலமையைப் பெரியபுராண உரை எங்கிலும் பரவலாகக் காண்கிறோம். தத்துவம், வரலாறு, அறிவியல், சட்டம், உலக மரபு, மருத்துவம் எனப் பல்துறைச் செய்திகளையும் அவர் விளக்கியுள்ளார். சைவத் தத்துவம் மற்றும் தமிழக வரலாற்றுச் செய்திகளுக்கு உரை முழுவதும் சான்றாகும். அறிவியல், மருத்துவம், உலக மரபு ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக ஒவ்வொன்றைக் காண்போம். சட்டப்புலமையை விரிவாகக் காண்போம்.

## அறிவியற் புலமை

தண்டமிழ் அறிஞர்கள் அறிவியல் துறையிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதற்குச் சிவக்கவிமணி சிறந்த சான்றாக விளங்குகின்றார்.

நம்பிஆரூரர் பெண்ணையாற்றைக் கடந்து, ஒரு மாலைப் பொழுதிலே திருவதிகை வீரட்டானத்தின் புற எல்லையை அடைகிறார். அந்த அரிய மாலைக்காட்சியைக் காப்பியப் புலவர்,

> நிலவுபசும் புரவிநெடுந் தேர்ரவி மேல்கடலில்
> செலவணையும் பொழுதணையத் திருவதிகைப் புறத்தணைந்தார்

என்ற அடிகளில் விளக்குகிறார்.

இவ்வடிகளில் வரும் 'நிலவுபசும் புரவி நெடுந்தேர் ரவி' என்னும் தொடருக்கு உரை வகுக்கும் சிவக்கவிமணி, 'சூரியனது தேர்க்குதிரைகள் ஏழு என்பது மரபு. அவை முறையே நீலம் முதல் சிவப்பு இறுதியாக ஏழு நிறமுடையன என்றும், நிறங்களே புரவிகளாகக் கூறப்பெறுவன என்றும் சொல்வர். இந்நிறங்கள் சூரியக்

கதிரின் பகுத்த தோற்றமாகிய இந்திரவில்லில் காணப்பெறுவன. இவை VIBGYOR என்ற ஆங்கிலக் குறியீட்டு மொழியின் ஏழு எழுத்துகளாலும் உணர்த்துவர் நவீன பௌதீக நூலோர். Violet, Indigo, Blue, Green, Yellow, Orange, Red (முதற் தொகுதி ப. 264) என்று விளக்கம் தருகிறார். இவ்விளக்கம் உரையாசிரியரின் அறிவியல் நோக்கையும், அறிவியற் புலமையையும் எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றது.

### மருத்துவ நூற் புலமை

தத்துவத்தில் மட்டுமல்ல, எத்துறையிலும் சிவக்கவிமணி புலமை பெற்றவர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. நவீன மருத்துவத்துறையில் அவருக்குள்ள புலமைக்கொரு சான்று காணலாம்.

மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில், முத்தநாதன் பத்திரம் வாங்கிச் செய்த செயலால், நாயனாரது திருமேனியில் இருந்து குருதி கொட்டுகிறது, அதனால் நாயனார் சோர்ந்து வீழ்கின்றார். இக்காட்சியை உரையாசிரியர் மருத்துவ நூற் கருத்துக் கொண்டு விளக்குகிறார்.

"உடலினின்றும் இரத்தம் பெருக வெளிவருவது மிக்க அயர்ச்சிக்கும், இறுதியில் இறப்புக்கும் காரணமாகும் என்பது உடல் நூல் துணிபு. Death due to Hemorrage and loss of Blood என்பர் நவீன மருத்துவர். இரத்தம் உயிர் நிலைப்பதற்கு ஆதரவாம். அதன் கழிவு உயிர் போதற்குக் காரணமாம் என்பர். இரத்தத்தை Life Blood என்ற ஆங்கில வழக்கும் காண்க' (மேலது, ப, 597). என்ற உரை சைவப் பெரியாரை மருத்துவ வல்லுநராக எடுத்துக் காட்டுகின்றது.

### உலக மரபினை உணர்த்துதல்

தமிழர்களுக்கு ஆங்கிலக் கல்வி அறிவின் வாயில்களைப் பெருக்கியுள்ளது என்பது உண்மை. ஆனால் அக்கல்விமுறை அவர்தம் அருமைமிகு மரபினை மதிக்கும் பண்பினை மறக்கச் செய்து விட்டது என்பதும் உண்மையே. இதனையும் உரையாசிரியர் வாய்ப்புக் கிட்டும் இடங்களில் எல்லாம் சுட்டிச் செல்கிறார்.

திருவாரூர் மக்கள் சுந்தரரை வரவேற்கும் காட்சியைச் சேக்கிழார்,

> குளிர் தரளம் மணிபரப்பித்
> தாதவிழ் பூந்தொடை மாலைத் தண்பந்தர்களும் சமைத்து,
> **வீதிகள்உண் துகள்அடங்க விரைப்பனிநீர் மிகத் தெளித்தார்**

எனப் பாடுகின்றார். இதற்கு,

"சாந்து, குளிர், தரளம், தண்பந்தர் - பனிநீர் இவை குளிர்தரும் பொருள்கள் - வெப்பமிகுந்த நம் நாட்டு வழக்குப் பற்றிக் குளிர்ச்சிப் பொருள்களைக் கொண்டு வரவேற்றல் முறையாம். இதனைத் தேசாசாரம் என்பர். இதற்கு மாறாய்க் குளிர்ந்த மேனாடு முதலியவற்றில் இவ்வாறன்றிச் சூட்டுப் பொருட்களையே வரவேற்புக்கு உரியனவாய்க் கொள்வதும், சூடான வரவேற்பு (Warm reception) என்று கூறி மகிழ்வதும் நாட்டு வழக்காதல் காண்க. அதனை நாமும் பின்பற்றுவது நம் நாட்டிற்கு அடாத செயலாம்" (மேலது, ப. 317) என்று உரை வகுத்திருப்பது பண்பாட்டைப் போற்றும் உரையாக அமைந்துள்ளது.

## இலக்கிய உரையில் சட்டப்புலமை

இன்பத்தமிழ்மொழியில் எழுந்த இலக்கியங்களுக்கு உரைகாணும் போது சட்டக்கருத்துகளை வெளிக் கொணர்வது எங்ஙனம் என்ற வினா எழலாம். தமிழ் இலக்கியங்கள் வாழ்வியற் களஞ்சியங்கள். சட்டமுறைமை வாழ்வோடு பிணைந்து நிற்பது. எனவே வாழ்க்கையை வடித்துக் காட்டும் இலக்கியங்களில் சட்டக் கருத்துகள் இடம் பெறுதலில் வியப்பேதும் இல்லை. இவ்வாறான வாழ்வியல் இலக்கிய வரிசையில் முதன்மை வகுப்பது திருக்குறள் ஆகும். திருக்குறளுக்கு உரைவகுத்த பலருள்ளும் பரிமேலழகர், குறளில் காணும் சட்டக் கருத்துகளை ஆங்காங்கே சுட்டிக் காட்டிச் சென்றுள்ளார்.

குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடு அன்று வேந்தன் தொழில் (549)

என்னும் குறளுக்கு உரை வகுக்கும் போது, 'குற்றம் கடிதல்' என்பதை விளக்க வந்த பரிமேலழகர் "துன்பம் செய்தல், பொருள் கோடல், கோறல் என ஒறுப்பு மூன்று" என்று ஒறுத்தலினை விளக்கிக் கூறுகிறார். ஆங்கிலேயர் ஆக்கித் தந்த இந்தியத் தண்டனைச் சட்டத்திலும் இந்த மூன்று தண்டனைகள்தான் குற்றங்கள் அனைத்திற்குமான தண்டனைகள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. (இந்தியத் தண்டனைச் சட்டம், தமிழாக்கம், ப. 17). எனவே தமிழ் இலக்கியங்களில் காணும் சட்டக் கருத்துகளை உரையாசிரியர் வெளிப்படுத்தும் பணி பரிமேலழகர் காலத்தே தொடங்கிற்று. அதனைச் சிவக்கவிமணியும் பின்பற்றியுள்ளார் எனலாம்.

## சமயமும் சட்டமும்

'நினைவுக்கு எட்டாத நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னே இறைமையால் இயம்பப் பெற்றது வழக்கு நெறிமுறை என்று மக்கள்

நம்பிய காலம் ஒன்று உண்டு. சமுதாய வாழ்க்கை நெறிகளும் சமய நெறிகளும் இணைந்தவை என்று மக்கள் அன்று கருதினர். எல்லாம் வல்ல இறைவனே எடுத்து இயம்பிய நெறிகளை எவரும் மாற்ற இயலாது என்ற அறுதியான கொள்கை உறுதியாக இருந்த காலம் அது' (மா. சண்முக சுப்பிரமணியன், சட்டவியல், ப. 9) என்பர்.

இக்கருத்தின் அடிப்படையில் நோக்கும் போது இந்தியாவில் வாழும் இந்துக்களுக்கு மனு, யாக்ஞவல்கியர், ஆபஸ்தம்பர், பௌளநாயனர் ஆகிய தெய்வீக ஞானிகள் எழுதிவைத்த ஏடுகளில் இருந்து இந்துக்களுக்கான தனிமுறைச் சட்டங்கள் (Personal Laws) உருவாக்கப்பட்டன. இசுலாமியரின் தனிமுறைச் சட்டங்களின் பெரும்பகுதியும் திருக்குர்ரானின் மறைமொழிகளாக உள்ளன. எனவே சமய நெறியும் சட்ட நெறியும் தொன்று தொட்டு இணைந்தே வந்துள்ளன. எனவே சமய இலக்கியமான பெரியபுராணத்திலும் சட்டக் கருத்துகள் இருப்பதில் வியப்பில்லை.

## சட்டப்புலமையின் வரையறை

இன்றைய நாளில் இந்திய நாடு முழுவதிலும் நீதிமன்றங்களின் பயன்பாட்டில் இருக்கும் சட்டங்களில் பெரும்பகுதியும் விடுதலைக்கு முன்னர் ஆங்கிலேயரால் ஆக்கித் தரப்பட்டவை. இந்திய விடுதலைக்குப் பின்னர் இந்தியாவைக் குடியரசு நாடாக உருவாக்கிய அரசமைப்பில், அடிமை இந்தியாவில் செயற்பாட்டில் இருந்த ஆங்கிலச் சட்டங்கள் அனைத்தும் விடுதலை இந்தியாவிலும் அப்படியே செயல்விளைவு பெறுவன என்று (இந்திய அரசமைப்பு, உறுப்பு 372, ப. 241) கூறப்பட்டுள்ளது. எனவே இங்குச் சட்டப்புலமை என்று குறிப்பிடப்படுவது ஆங்கிலேயர் ஆக்கித் தந்த சட்டங்கள் ஆகும்.

வழக்கறிஞராய் விளங்கிய சிவக்கவிமணி, ஆங்கில அரசு வழங்கிய சட்டநெறிகளில் பல, தமிழர்களுக்குப் புதியன அல்ல என்பதையும் வரலாற்றுப் பின்னணி உடைய தமிழர்களுக்குச் சட்ட நெறியிலும் சிறந்த பின்னணி உண்டு என்பதையும் வாய்ப்புக் கிடைக்கும் இடங்களில் எல்லாம் நிறுவிக் காட்டுகிறார்.

## சட்டங்களின் வகைப்பாடு

சமுதாய வாழ்க்கைக்கு வழிகாட்டி நெறிப்படுத்துவன சட்டங்கள். தனிமனிதன் தானும் பிறரோடு கூடியும் வாழுமிடத்து அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு இயைபாக அமைவன சட்டங்கள். இச்சட்டங்களை நிலைமுறைச் சட்டம் (Substantive Law)

என்றும் நெறிமுறைச் சட்டம் (Procedural Law) என்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பகுப்பார்கள் (நெறிமுறைச் சட்டம் என்பதை நடைமுறைச் சட்டம் என்று கூறுவதும் உண்டு) (மா. சண்முக சுப்பிரமணியன், சட்டஇயல், ப. 385) என்பர்.

ஒருவரது உரிமைகள், கடமைகள், குற்றத்திற்குரியோர் யார் என்பன பற்றிய விவரங்களை விளக்கும் சட்டம், நிலைமுறைச் சட்டம் ஆகும். குற்றங்களை எங்கு, எவ்வாறு விசாரணை செய்தல் வேண்டும் என்பதை விரிவாகக் கூறும் சட்டம், நெறிமுறைச் சட்டம் ஆகும். இவ்விரண்டையும் விடுத்து, சட்டம் பற்றிய பொதுவான கருத்துகளைக் கூறுவது சட்டஇயல் (Juris Prudence) எனப்படும். ஆதலின், சிவக்கவிமணியின் உரையில் வெளிப்படும் சட்டப் புலமையை,

1. நிலைமுறைச் சட்டங்கள்
2. நெறிமுறைச் சட்டங்கள்
3. சட்ட இயல் கருத்துகள்

என்னும் இம்மூன்று தலைப்புகளில் தொகுத்துக் காணலாம்.

## நிலைமுறைச் சட்டங்கள்

### இந்திய ஒப்பந்தச் சட்டம்

வேதியர் வடிவில் வந்த இறைவன், மணக்கோலத்தில் இருந்த நம்பிஆரூரரின் திருமணத்தைத் தடுத்து நிறுத்துகிறார். அப்போது தனக்கும் நம்பிக்கும் இடையே வழக்கொன்று இருப்பதாகக் குறிப்பிடுவதைச் சேக்கிழார் பின்வரும் பாடலில் அமைத்துள்ளார்.

> பிஞ்ஞகனும் நாவலர் பெருந்தகையை நோக்கி
> என்னுடையும் நின்னுடையும் நின்ற இசைவால்யான்
> முன்னுடையதோர் பெருவழக்கினை முடித்தே
> நின்னுடைய வேள்வியினை நீ முயறி என்றான் (181)

இப்பாடலில் வரும் "வழக்கினை" விளக்குகையில், 'இசைவினால் எழுந்த வழக்கு' - இங்கே இசைவினாலே; ஒப்பந்த, 'நினாலே வழக்குப் பல மூலங்களில் இருந்து கிளம்பும். அவற்றில் இது இசைவினாலே நின்று உண்டாகிய வழக்கு என்றார். ஒப்பந்த வழக்கு என்க. (Cause based on agreement). இதில் வழக்கு மூலம் ஒப்பந்தம். Breach of Trust-ஒப்பந்த மீறுகையால் வழக்கு எழுந்தது" என்று குறிப்பிட்டுச் செல்கிறார் (ஆறாம் தொகுதி, ப. 358). இது இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (The Indian Contract Act, 1872) அடிப்படைக் கருத்தாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நம்பிஆரூரர் இறைவனிடம் தம்மை ஒப்படைத்துவிட்டேன் என்று கூறுகிறார். தாம் இழந்த கண்ணைத் தமக்கு மீளத்தரவேண்டும் என்று வேண்டி 'மீளா அடிமை என்றெடுத்து'ப் பதிகம் பாடுகின்றார். இப்பதிகத்தில் வரும்,

> விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி யாட்பட்டேன்
> குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்

எனவரும் அடிகளுக்குச் சிவக்கவிமணி உரை எழுதுகிறார். அவ்வுரையில் "ஒற்றி, மீட்டுக்கொள்ளும் உரிமையுடன் ஒருபொருளைப் பிறன் வசம் ஒப்படைக்கும் கடன்வகை; விற்றுக் கொள்ளுதல், பிரதிபலன் எவ்வித நிபந்தனையும் இன்றிப் பெற்றுப் பொருளைப் பிறன்வசமாக முழு உரிமையுடன் விற்பனை செய்து விடுதல். (இவற்றை முறையே Mortgage and sale என்பது நவீன வழக்கு)" என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளை விளக்குகின்றார். ஒப்பந்தச் சட்டத்தில் Mortgage and sale என்பதான ஒற்றிக்கும், விற்பனைக்கும் இடையிலான வேற்றுமையைப் புரிந்து கொள்வதில் சிக்கல் எழும். புதிதாய்ச் சட்டம் பயிலும் மாணாக்கர்களுக்கு விளக்குவது போல் இவ்விரண்டிற்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை உரையாசிரியர் விளக்கி இருப்பது அவரது உயர்ந்த சட்டப்புலமைக்கு உரியதோர் சான்றாகும்.

## வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம்

உரையாசிரியர் சிவக்கவிமணி, கண்ணப்பநாயனார் புராணத்தில் வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டம் பற்றிய குறிப்புகளைப் பெய்திருக்கிறார்.

திண்ணனாக இருக்கும் கண்ணப்பரின் தந்தை நாகன், தன் மூப்பின் பொருட்டுத் தன் மகனுக்கு அரசுரிமை தருகின்றான். அப்போது கன்னி வேட்டைக்குச் செல்லும் திண்ணனின் திறனைச் சேக்கிழார் வெளிப்படுத்தும் பொருட்டு, அவ்வேடுவர்களின் சிறப்பியல்புகளைப் புலப்படுத்திக் காட்டுகின்றார். அப்போது,

> துடியடியன மடிசெவியன துயகயமுனி தொடரார்
> வெடிபடவிரி சிறுகுருளைகள் மிசைபடு கொலை விரவார்
> அடிதளர்வுறு கருவுடையன அணைவுறு பிணை அலையார்;
> கொடியெனஎதிர் முடுகியுமுறு கொலை புரிசிலை மறவோர்
>
> (735)

என்னும் பாடல் அமைகின்றது.

திண்ணனின் ஆட்சியில் நீதிமுறை நின்று நிலவியது. அவன் வேட்டைத் தொழிலிலும் அச்செம்மை நீதி தங்கியிருந்தது என்பதைச் சேக்கிழார் உணர்த்த விழைகின்றார். சேக்கிழாரின் உளப்பாங்கை உணர்ந்திருக்கும் உரையாசிரியரும், அவ்வேடுவர்கள் கடைப்பிடித்த அற்றைநாள் நெறிமுறைகள் இற்றைநாள் சட்டங்களுக்கும் ஏற்புடைத்தாகும் தன்மையை விளக்குகின்றார்.

அவர், திண்ணனின் வேடுவர்கள், சிறு குருளைகளை, கருவுற்ற தளர்நடை விலங்குகளை, பெண் விலங்குகளை வேட்டையாடுதல் இல்லை. இது The Elephants Preservation Act, Games Preservation Act, Prevention of Cruelty to Animals Act ஆகிய சட்டங்களின் வகைமுறைகளோடு ஒத்திருத்தல் காண வேண்டும் என்று சுட்டிக் காட்டுகின்றார்.

இதன்கண் ஆங்கிலேயர் இயற்றித் தந்த சட்டங்கள் இந்தியாவில் வாழ்வும் வலிமையும் பெறுவதற்கு முன்னரே தமிழர்கள், நாட்டில் மட்டுமன்றிக் காட்டிலும் நீதிநெறியைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர் என்பதை அறிய முடிகிறது.

## இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம்

ஆங்கிலேயர்கள் 1860ஆம் ஆண்டில் இந்தியா முழுவதற்கும் ஒரே நீதிமுறையைக் கொண்டு வருவதற்காக முயற்சி மேற்கொண்டனர். அதன் பயனாக இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவாகப் பல சட்டங்களைக் கொண்டு வந்தனர். அவற்றுள் மிகவும் இன்றியமையாதது இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம் (The Indian Penal Code) என்பதாகும். இதில் குற்றமுறு குற்றங்கள் (Criminal Offences) எவை எவை என்பதும் அவற்றிற்கான தண்டனைகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதும் விளக்கப்பட்டுள்ளன. இன்றும் இந்திய நீதிமன்றங்கள் இச்சட்டத்தின் வகைமுறைகளையே பின்பற்றி வருகின்றன. இச்சட்டத்தினை உரையாசிரியர் சிவக்கவிமணி திருஞானசம்பந்த நாயனார் புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

ஆளுடைப் பிள்ளையாருக்கும் அமணர்களுக்கும் இடையே நடந்த அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் அமணர்கள் தோற்றனர். தம் தோல்வியை ஏற்றுக் கொண்ட அமணர்கள் தாமே கழுவேறினர் என்பது ஒரு கருத்து. அவர்களைப் பாண்டியன் கழுவேற்றினான் என்பது சேக்கிழாரின் திருவாக்கு. இதனை,

***மன்னவன் மாறன் கண்டு மந்திரியாரை நோக்கித்***
***துன்னிய வாரில் ஒட்டித் தோற்றஇச் சமணர் தாங்கள்***
***முன்னமே பிள்ளையார்பால் அநிசிதம் உற்றச் செய்தார்***
***கொல்வினைக் கழுவில் ஏற்றி முறை செய்க என்று கூற (2751)***

என்னும் பாடலாய் அமைத்துள்ளார்.

அமணர்கள் வாதில் தோற்றதற்காகக் கழுவேற்றப்படவில்லை. அவர்களை 'ஆளுடையப் பிள்ளையும் அரனாரின் தொண்டர்களும் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீயிட்டுக் கொளுத்தினர்' என்ற காரணத்திற்காகவே கழுவேற்றுமாறு மன்னன் ஆணையிட்டான் என்பதில் சேக்கிழாரின் நுட்ப அறிவுத்திறம் புலப்படுகிறது. இதனை மேலும் விளக்கும் சிவக்கவிமணி, 'பிள்ளையார் பாற் செய்த அநிசிதமாகிய, மக்கள் குடியிருப்பு - வீட்டுக்குத் தீ வைக்க முயன்றமையும், மக்களைத் தீயிட்டுக் கொல்ல முயன்றமையும், அவையும் எவ்விதக் காரணமும் பற்றாது செய்தமையும், சிவடினயார்பாற் செய்த அபசாரம் ஆயினமையுமே கழுக்கொலைத் தண்டம் விதித்து முடித்ததன் காரணம் என விளக்கப்பட்டது' என்கிறார்.

மேலும், உரையாசிரியர் 'கழுவேற்றி முறை செய்க' என்பதற்கு உரை செய்கையில், "இந்நாளிலும் நாகரிக (ஆங்கில) நீதிச் சட்டத்தின் படி கொலைத் தண்டம் விதிக்கப்பட்ட ஒருவனைக் கழுத்தில் கயிறு சுருக்கிட்டுத் தொங்கவைத்துக் கொல்ல முறை செய்வது தண்ட விசேடமாதல் காண்க. அதனை அன்றெ‌ன விடுத்து மேனாட்டில் குற்றவாளியைப் படுக்கவைத்துக் கழுத்தைக் கனத்த வாள்விட்டு விரைந்து துண்டமாக்குதலும், நாற்காலியில் வைத்து மின்சாரத்தை உடலில் ஏவிக் கணத்தில் கொல்லுதலும் முதலிய தண்ட விசேடங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக எழுதல் காண்க" என்று மேனாட்டுச் சட்ட முறையை ஒப்பிட்டுக் காட்டுகின்றார்.

குடியிருப்பு வீட்டுக்குத் தீ வைக்கும் குற்றத்திற்குக் கொலைத் தண்டனை உண்டா என்ற வினாவை எழுப்பினாலும் பாண்டியனின் செயல் சரியென்றே அமையும். இதனை, "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களைகட் டதனொடு நேர்" (குறள்) என்றதும், அங்குக் கொடியார் இன்னார் என்று கூறுகையில் தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவிற் கொல்வார், கள்வர், ....... முதலாயினாரை என்று விரித்துத் தீக்கொளுவுவாரை முதற்கண் வைத்து வகுத்தும், 'அரசன் கொடியாரைக் கொலையால் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல்' என்று எழுதிய பரிமேலழகர் உரை ஈண்டு சிந்திக்கற்பாலது" என்று பரிமேலழகரின் சட்ட நுட்பத்தைத் தமது சட்டப்புலமைக்குத் துணையாகக் கொள்கிறார்.

திருக்குறளுக்கு உரைகண்ட பரிமேலழகர் வாய்க்கும் இடம் நோக்கி அவரது சட்டப்புலமையை நிலைநிறுத்திக் காட்டுவார். சிவக்கவிமணியும் இக்கருத்தில் பரிமேலழகரின் வழித்தோன்றலாகவே வலம் வருகின்றார். இதுபற்றியே,

*பரிமேலழகர் பகருரையும் பழனம் சூழும் பதித்துறைசை*
*மருவுத் தவித்துச் சிவஞான முனிவன் வழங்கும் பேருரையும்*
*இருமா ஞாலத்து இலங்குதல் போல் இணையில் அடியார் பாதமலர்*
*பரவும் சுப்பிரமணியன் உரை பாரில் என்றும் மன்னுகவே*

என்று சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுருநாதன் வாழ்த்திப் பாடியுள்ளார். (பெரியபுராண உரை, நான்காம் தொகுதி) உரையாசிரியர், தத்துவ விளக்கம் சொல்லச் சிவஞான முனிவரையும், சட்டநெறிக்கு விளக்கம் காணப் பரிமேலழகரையும் முன்னோடிகளாகக் கொண்டார் எனின், அது பொருந்தும்.

இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் காணப்படும் நம்பிக்கை மோசடி பற்றிய குற்றக் குறிப்பையும் பெரிய புராணம் சுட்டிச் செல்கின்றது. "தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு சொத்தைக் கையாடல் செய்வதை 'நம்பிக்கை மோசக் குற்றம்' (Criminal Breach of Trust) என்பார்கள்" *(மா. சண்முக சுப்பிரமணியன், சட்டத்தமிழ், ப. 79).*

திருநீலகண்ட நாயனார் புராணத்தில் இறைவன் கொடுத்த திருவோட்டினைத் திரும்பக் கேட்ட போது, நாயனாரால் தருவதற்கு இயலவில்லை. திருவோட்டை நாயனார் களவாடவில்லை; பிறரிடம் விற்றுவிட்வும் இல்லை; எனினும் பொறுப்பாக ஒப்படைத்த பொருளை மீளவும் ஒப்படைக்காமையும் குற்றம் ஆகும். எனவேதான் இறைவனார் நாயனார் மீது வழக்கிட்டார் என்பதை அறிகிறோம்.

திருநீலகண்ட நாயனார் புராணத்தில் வரும் திருவோடு காணாமல் போன நிகழ்வும், அதற்குப் பொறுப்பாயிருந்த நாயனாரின் செயலும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 405இன் கீழ் வரும் 'குற்றச் செயல்' எனக் கொள்வதற்கும் இடமுண்டு. ஆதலின் இக்குற்றச் செயலுக்காக நாயனார் மீது வழக்கு மேலிடப்பட்டது. அந்தத் திருந்து பேரவை ஒரு குற்றவியல் நீதி மன்றமாக அமைந்து வழக்கினை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நிலம் கையகப்படுத்துதல் சட்டம்

அரசு பொதுமக்களுக்குப் பயன்படும் வண்ணம் நலத்திட்டங்களில் ஈடுபடும்போது அரசின் நிலத்தையோ அல்லது தனியொருவர் இடத்தையோ கையகப்படுத்திச் சட்டம் இயற்றும். இச்சட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துதல் சட்டம் (Land Acquisition Act) என்று பெயர். இச்சட்டத்தின் வகைகளையும் உரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

தண்டியடிகள்நாயனார் புராணத்தில், தண்டியடிகள் திருவாரூர்க் கமலாலயக் கரையினை அகலமாக்கிட எண்ணினார். அதற்கு இடையூறாக அமணப்பாழிகளும் பள்ளிகளும் இருந்தன. அமணர்களை அவ்விடத்தில் இருந்து அகற்றிட அரசனே ஆற்றல் உள்ளவன் என்பதை நாயனார் உணர்ந்தார். அரசனும் இசைந்து நாயனார் விரும்பிய வண்ணம் செய்தான். இதனைச் சேக்கிழார்,

> பன்னும் பாழி பள்ளிகளும் பறித்துக் குளம் சூழ் கரைபடுத்து
> மன்ன வனும் மனமகிழ்ந்து வந்து தொண்டர் அடிபணிந்தான்
> (3615)

இதற்குச் சிவக்கவிமணி, "திருவாரூரில் கமலாலயத்தின் கரையில் எங்கும் அமணர் பாழிகளும் பள்ளிகளும் அமைத்து ஆக்கிரமித்து இருந்தனர். இதனால் குளம் இடத்தால் குறைபாடுற்றது. இடத்தின் குறைபாட்டை நீக்கி அகலமாகும்படி குளம் கல்ல எண்ணினார் தண்டியடிகள். ஆயின் அதனைச் செய்வதற்கு அமணர் நிலையாக அமைத்துக் கொண்ட பாழி பள்ளிகளைப் பறித்தாலன்றி இயலாததாதலானும் அதனைச் செய்து கரை எல்லையினை அளவுபடுத்துதல் அரசனாலன்றி அமையாமையானும் அரசன் அதனைச் செய்தான் என்க; இந்நாளிலும் பொதுப்பணிகளுக்கு இடம் வேண்டின், அரசாங்கம் அதனை எடுத்து அளவுபடுத்தும் சட்டமுறை காண்க. (Acquistion of land for public purposes: Land Acquistion Act)" என்று விளக்குகிறார்.

## நெறிமுறைச் சட்டங்கள்

நீதிமன்றங்களில் நிலைமுறைச் சட்டங்களை நிறைவேற்றுதற்கு வழிகாட்டிகளாக வகுக்கப்பட்டவையே நெறிமுறைச் சட்டங்கள் அல்லது நடைமுறைச் சட்டங்கள் எனப்படுவன. இந்த நெறிமுறைச் சட்டங்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவை.

(அ) உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் (Civil Procedure Code)

(ஆ) குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் (Criminal Procedure Code)

என்பன.

## உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம்

ஒருவரின் உரிமைக்கும் உடைமைக்கும் தீங்கு நேர்ந்தால் அது குறித்துஎழும் வழக்குகளை விசாரணை செய்யும் நீதிமன்றங்கள் 'உரிமையியல் நீதிமன்றங்கள்' எனப்படுவன. இந்நீதிமன்றங்களில் நடைபெறும் வழக்கு விசாரணையின் நடைமுறையை வகுக்கும் சட்டமே உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் எனப்படும்.

இன்றைய நாளில் காணப்படும் இத்தகைய நீதிமன்றப் பிரிவுகளைச் சிவக்கவிமணி பெரியபுராணப் பாடல் ஒன்றினைக் காட்டி, அக்காலத்திலும் இப்பகுப்பு முறை இருந்தது என்பதை விளக்கியுள்ளார்.

பெரியபுராணத்தில் திருநகரச் சிறப்புப் பகுதியில் மனுநீதிச் சோழனின் வரலாறு இடம்பெறும் பகுதி சிறப்புடைத்து. அப்பகுதியில் அரசனின் கடமைகளைச் சுட்டும் பாடல் ஒன்று அரியதோர் சட்டப் பெட்டகமாய் அமைந்துள்ளது.

*மாநிலங்கா வலன் ஆவான் மன்னுயிர்காக் குங்காலைத்*
*தானதனுக்கு இடையூறு தன்னால் தன் பரிசனத்தால்*
*ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்*
*ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?* (121)

என்பது பாடல்.

இப்பாடலுக்கு உரைவகுக்கும் உரையாசிரியர், 'இந்நாள் நவீனர் அரசாட்சியிலே நமது நாட்டுக் குற்றத் தீர்வு நீதிச் சட்டமும் குடிமக்களின் உயிருடம்புகளையும் உடைமைகளையும் காவல் புரிதலையே குறிக்கோளாகக் கொண்டு, உடம்பைப் பொறுத்த குற்றங்கள் - உடைமையைப் பொறுத்த குற்றங்கள் (offences against person and offence against property) என்று இருபெரும் பிரிவுகளாக வகுத்ததும், அக்குற்றம் செய்தார்க்குத் தண்டம் விதித்ததும், குற்றங்கள் நிகழாமல் குடிகாவல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன என்று எடுத்துக் காட்டுகிறார். எனவே குற்றங்களின் தன்மைகளுக்கு ஏற்ப அவை பகுக்கப்பட்டு வந்துள்ளன என்பது இவ்வுரையாசிரியரின் மொழியால் பெறப்படுகின்றது. எனவே தடுத்தாட்கொண்ட புராணத்துக் காட்சிகள் உரிமையியல் வழக்கினை விசாரிக்கும் காட்சியாகவே நீதிமன்றத்தில் அமைந்துள்ளது.

அந்தணர் வடிவில் வந்த ஈசனார், ஆரூரரை ஆளோலை காட்டி அடிமை கொண்டார். அவ்வாறு அவர் தமது வழக்கைத் தொடரும் இடத்து,

> வேதபாரகரின் மிக்கார் விளங்கு பேரவை முன் சென்று,
> மூதறிவீர் முன் போந்தான் இதுமற்று என் முறைப்பாடு
> என்றான் (197)

என்னும் அடிகளில் வரும் முறைப்பாடு, முறையிடும் பொருள் ஆகும். இங்கு complaint, plaint என்னும் சொல்லாட்சியை உரையாசிரியர் சுட்டுகின்றார். மேலும்,

> அந்தணர் அவையின் மிக்கார் மறையவர் அடிமையாதல்
> இந்தமா நிலத்தில் இல்லையென் சொன்னா யையா என்றார்.
>
> "வந்தவாறு இசைவே யன்றோ" வழக்கு இவன் கிழித்த வோலை (198)

என்பதற்கு உரை காணும் சிவக்கவிமணி, வழக்குகள் எழும் மூலங்களை வகைப்படுத்துகின்றார். அவ்விடத்தில் பொது உரிமைகளின் பேரில் நூல் வழக்குப்படி வரும் வழக்குகள் (Causes based on common law rights etc), ஒப்பந்தப்படி வரும் வழக்குகள் (Causes based on agreements) என இக்காலத்தவர் வகுக்கும் வழக்கு முறையும் காண்க. எனவே இவை தமிழர்க்குப் புதியன அல்ல என்பதறியலாம் என்று விளக்குகிறார். எனவே வேதியர் தொடுத்த வழக்கு உரிமையியல் வழக்கு என்பது பெறப்படுகின்றது.

வழக்கினை விசாரித்த விளங்கு பேரவையின் சான்றோர்கள் சான்று காட்டப் பணிக்கிறார்கள். அந்தணர் ஓலையொன்றை ஆவணச் சான்றாகக் காட்டி வழக்கிலே வெற்றி பெறுகிறார். அவர் வழக்கில் தொடுத்த கோரிக்கை நிறைவேற்றப்படுகின்றது. இதனை, "இனிச்செயல் இல்லை - இவ்வழக்கு விசாரணையில் நீதிமுறைப்படி இனிநாம் செய்ய வேண்டிய செயல் வேறு ஒன்றுமில்லை. நீதியில் விதித்த எல்லா வகையாலும் தேர்ந்து முடித்தோம் என்றபடி" என்று குறிப்பிடுகின்றார்.

## தீர்ப்புக்குக் கட்டுப்படுதல்

'ஆவணச் சான்று காட்டி அடிமை கொள்ள வந்து, வழக்கினை வென்று நின்ற அந்தணரின் இசைவுக்கேற்ப ஆரூரர் பணிசெய்தல் வேண்டும் என்று விளங்கு பேரவை தீர்ப்பு வழங்கிற்று. அது கேட்டு,

> விதிமுறை இதுவேயாகில் யான் இதற்கு இசையேன் என்ன
> இசையுமோ என்று நின்றார்

என்று நம்பி உரைத்தாரென சேக்கிழார் பாடுகின்றார். இதற்கு உரைகாணும் போது, "என்று நின்றார்: தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நின்றார்" என்று சிவக்கவிமணி உரைக்கின்றார். இதன் வழி, வழக்குத் தொடுத்தல், வழக்கினை விசாரித்தல், தீர்ப்பளித்தல், தீர்ப்பினை ஏற்று நிற்றல் என்னும் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் முறைநெறி வழுவாமல் நடைபெற்று வந்தமையை உரைவழி அறிய முடிகிறது.

## குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம்

குற்றமுறு குற்றங்களின் வழி எழுந்த வழக்குகளை விசாரிப்பதற்கு அமைந்த நீதிமன்றங்கள் குற்றவியல் நீதி மன்றங்கள் ஆகும். இந்நீதி மன்றங்களில் உயிர், உடம்பு, உடைமைக்கு உண்டாகும் தீங்குகளினால் எழும் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருநீலகண்ட நாயனார் புராணத்தில் சிவனடியாரின் உடைமையான திருவோடு குறித்து எழுந்த வழக்கினை 'உடைமை குறித்து' எழுந்த குற்றமுறு வழக்காகக் கொள்ளலாம். இதனைச் சிவக்கவிமணி தம் உரையில் நன்கு விளக்குகின்றார். காணாமல் போன திருவோட்டிற்கு மாற்றாகப் 'பொன்னோடு தருகிறேன்' என்று நாயனார் உரைத்தபோதும் சிவனடியார் மறுத்துவிட்டார். சிவனடியாரின் செயலை ஊரவைச் சான்றோர்களும் ஒத்திசைந்து நின்றனர். இக்கருத்தையெல்லாம், "வழக்கே - அறநூல் வழக்கு. இது அந்நாள் வழக்கு முறை. பிரமாணஞ் செய்தலோ அல்லது ஒப்புவித்த பொருளுக்கு ஈடுசெய்து தருதலோ இவ்விரண்டில் ஒன்றினை வழக்கிடப்பட்டோர் தம் எண்ணம் போல் செய்யலாம் என்பது இந்நாள் வழக்கு முறை. வழக்கிடுவோர் கேட்டபடி சபதம் செய்தே தீர வேண்டும் என இந்நாள் வழக்குச் சட்டம் வற்புறுத்துவதில்லை. எனவே இந்நாளை விட முன்னாளில் தமிழ்நாட்டு வழக்குமுறை குடிகளின் பொருளுரிமையை அதிகமாகக் காத்து வந்தது விளங்கும்" என்கிறார். இந்த உரையில் 'வழக்குச் சட்டம்' என்று குறிப்பிடப்படுவது 'Procedural Law' என்பதைக் குறிக்கும்.

மனுநீதிச் சோழனின் மைந்தன் பசுக்கன்றினைத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற வழக்கினைச் சோழன் விசாரித்த முறையைக் குற்றவியல் நீதிமன்ற நடவடிக்கையோடு ஒப்பிடுதல் பொருந்தும். மன்னனின் மைந்தன் செய்த செயல், அதற்குரிய தண்டனை இவை அனைத்தையும் அமைச்சர்கள் பால் கேட்டறிந்து கொள்கிறான். அரண்மனை மணியை அசைத்த ஆவின் செயலைத் தக்க வழக்குப் பதிவாக ஏற்றுக் கொள்கிறான். அந்நாள் வரை காணாத அரிய தீர்ப்பை வழங்குகின்றான். இந்த விசாரணையின் போது

மன்னனின் மைந்தனும் முன்னிலையில் இருந்தான் என்பதை உரையாசிரியர் புலப்படுத்துகின்றார். "இந்நாள் நீதிமுறையிலும் குற்றம் செய்தாரை முன்னர்க் கொணர்ந்து வைத்துக் கொண்டு முறைத் தீர்ப்புச் செய்யும் வழக்கும் அதன் உள்ளுறையும் காண்க" என்று அவர் (உரை, முதற்றொகுதி, ப. 151) குறிப்பிடுவதில், அந்நாளைய நடைமுறையின் செம்மை புலப்படக் காண்கிறோம்.

"கொலை முதலிய பெருங்குற்றம் செய்தாரைப் பிறர்க்கு எடுத்துக்காட்டாக (உதாரணமாக) இருக்கும் பொருட்டு, அக்குற்றம் நிகழ்ந்த அதே இடத்தில் முறை செய்தல் அந்நாள் நீதி வழக்கு. இதனையே சில ஆண்டுகளுக்கு முன் வரை ஆங்கில ஆட்சியினரும் பின்பற்றிக் கொலை, தூக்கு, கசையடித்தல் முதலிய தண்டனைகளை வெளிப்படையாகப் பறைசாற்றித் தெருச் சதுக்கங்களில் வைத்துக் குற்றவாளிகளை முறை செய்து வந்தனர்'' (மேலது) என்று நீதிமன்றங்கள் தண்டனையை நிறைவேற்றும் முறையையும் உரையாசிரியர் விளக்கியுள்ளார்.

### சான்றுச்சட்டம்

இச்சட்டம் குற்றவியல் நீதிமன்றங்களிலும் உரிமையியல் நீதிமன்றங்களிலும் பயன்படுத்தப்படும் பொதுவான நடைமுறைச் சட்டம் ஆகும். இது வழக்குகளை விசாரிப்பதற்கான சான்றுகளின் வகைகளையும் சாட்சிகளை விசாரிப்பது பற்றியும் விளக்கிக் கூறும் சட்டம் ஆகும்.

நீதிமன்றங்கள் வழக்கினை ஆய்ந்து முடிவினை அறிவிப்பதற்கு ஏதுவாக வழக்கிடும் ஒவ்வொருவரும் சான்றுகளைக் காட்ட வேண்டும். அச்சான்றுகளின் வகைகளைப் பெரியபுராணம் விளக்குவதைச் சிவக்கவிமணி விரிவாக எடுத்துரைத் துள்ளார்.

அந்தணர் வடிவில் வந்து ஆரூரரை அடிமை கொள்ளக் கருதிய இறைவனை ஊர்மன்றச் சான்றோர்கள் அதற்குச் சான்று காட்டக் கூறுகின்றனர். அப்போது நீதிமன்றங்களில் ஆராயப்படும் சான்றுகளின் வகைகளை விளக்குகிறார் சேக்கிழார். இப்பாடலில் ஆட்சிப்பொறுப்பில் இருந்த சேக்கிழாரின் அரசியல் திறன் வெளிப்படக் காணலாம்.

> **"ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்**
> **காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்" என்ன முன்னே**
> **மூட்சியில் கிழித்த வோலை படியோலை; மூலவோலை**
> **மாட்சியில் காட்ட வைத்தேன் என்றனன் மாயை வல்லான்**
> **(202)**

இப்பாடலுக்குச் சிவக்கவிமணி, "ஆட்சி - ஆவணம் - காட்சி என்பன மூன்றும் அக்காலத்தில் தமிழர் நீதிமுறையில் பொருள் நிச்சயிக்க உதவும் மூவகைச் சாட்சியங்களாம்" என்று உரை வகுக்கத் தொடங்கி,

'ஆட்சி - அடிப்பட்ட சான்றோரிடத்துத் தொன்று தொட்டு வழங்கி வருவதும் அது காரணம் பற்றி யாவராலும் ஒப்புக்கொள்ளப் பெறுவதுமான உலக வழக்கு'

'ஆவணம் - வழக்கின் பகுதிகளைக் காட்டக்கூடிய விவரங்கள் எழுதப் பெற்ற ஓலைகள்'

'அயலார் தங்கள் காட்சி - வழக்கின் பகுதிகளிற் பிறர் தாங்கண்டதைச் சொல்வது - இதனை ஆவணச் சாட்சியின் (documentary evidence) வேறுபிரித்து வாய்மொழிச் சாட்சி என்பர் (oral evidence) நவீனர். தாம் தாம் கண்டதைச் சொல்வதே இவ்வகைச் சாட்சியாம் என்னக் காட்சி என இதற்குப் பெயர் வழங்கினர். ஒருவர் சொல்லக் கேட்டது சாட்சியாகாது என்பதாம் (Hearsay is not evidence)" என்று தெளிவாக உரை வகுத்துள்ளார்.

இவ்வுரை இந்தியச் சான்றுச் சட்டத்தின் வகைமுறைகளை வெளிப்படுத்துவதாக உள்ளது. இச்சட்டத்தின் அத்தியாயம் III இல் 'மெய்ப்பிக்கத் தேவையில்லாத பொருண்மைகள்' என்னும் தலைப்பில் 56, 57, 58ஆம் பிரிவுகளில் சில செய்திகள் விளக்கப் பெற்றுள்ளன. நீதிமன்றம், தானே அறிந்திருக்கின்ற செய்திகள், இந்திய ஆட்சி எல்லைக்குள் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள், நாடாளு மன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் எனவரும் 13 செய்திகள் இங்குத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் சேக்கிழார் 'ஆட்சி' என்னும் சொல்லினுள் அடக்கியுள்ள திறத்தை உரையாசிரியர் வெளிப்படுத்துகிறார்.

'ஆவணம்' என்பதை இந்தியச் சான்றுச்சட்டத்தின் அத்தியாயம் V இல் 'ஆவணச் சான்று பற்றி' என்னும் தலைப்பில் ஆவணத்தின் வரையறை விளக்கப் பெறுகிறது. இந்த அத்தியாயத்தில் 61 முதல் 73 வரையிலான பிரிவுகளில் ஆவணங்கள் சான்றுகளாகும் தன்மை விளக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தையும் 'ஆவணம்' என்னும் சொல்லில் சேக்கிழார் எடுத்துக் காட்டுவதாக உரையாசிரியர் சுட்டுகிறார்.

'காட்சி' என்பதைச் சான்று சட்டத்தின் அத்தியாயம் IVஇல் 'வாய்மொழிச் சான்று' என்று அமைந்த செய்திகளோடு ஒப்பிடலாம்.

பிரிவு 59இல் ஆவணத்தின் வாயிலாக வெளிப்படுத்தப் பட்டவை நீங்கலாக மற்ற பொருண்மைகள் அனைத்தும் வாய்மொழிச் சான்று என்னும் முறையில் மெய்ப்பிக்கப்படலாம் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

## ஆவணச் சான்றின் பங்கு

வழக்கிட வந்த அந்தணரை நோக்கி மூன்று வகைச் சான்றுகளைக் கூறியபோதும், அவர் ஆவணத்தை மட்டுமே சான்றாகக் காட்டியதன் காரணத்தைச் சிவக்கவிமணி விளக்கியுள்ளார்.

"ஆட்சி - ஆவணம் - காட்சி மூன்றில் ஒன்று காட்டுக என்ற சபையோர் முன், வேதியர் முன்னரே வந்தவாறு இசைவே யன்றோ?, என்றதனால் இதற்கு ஆட்சியில்லை. தந்தை தன் தந்தை நேர்ந்தது என்றமையால் நீண்ட காலத்துக்கு முற்பட்டமையின் அயலாற் காட்சியும் இல்லை. ஆவணம் ஒன்றே எஞ்சியது. அதனைக் கொண்டு 'என் வழக்கை உன்முன் ஏற்றப் போகிறேன்' என்று குறித்துக் காட்டித் தொடங்கிக் கொண்டார். அவ்வோலை தானும் கிழிபட்டதே எனச் சபையோர் ஐயப்படுவர் என உட்கொண்டு இவன் கிழித்த வோலை படியோலை என்று கூறி மேற்செல்கிறார். அன்றியும் மூல ஓலைகளே நீதி சபையில் வேண்டப்படுபவையன்றிப் படியோலை அல்ல என்ற முறைமையும் குறித்தவாறு (Direct evidence) என்பர் நவீனர்"

மேற்காணும் விளக்கம் இந்தியச் சான்றுச் சட்டத்தின் நுட்பங்களை வெளிக்கொணர்வதுடன், அதனைத் 'தருக்க முறையில்' அணுகும் போக்கையும் சுட்டிக் காட்டுகின்றது.

இந்தியச் சான்றுச்சட்டத்தில் காணப்பெறும் வேறு பல செய்திகளையும் சிவக்கவிமணி தம் உரையில் வெளிப்படுத்துகிறார்.

## சான்றினை மெய்ப்பிக்கும் பொறுப்பு

நீதிமன்றத்தில் ஓர் உரிமையை நிலைநிறுத்த வேண்டும் என்றாலோ, குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் இழைத்தார் என்பதை நிரூபிக்க வேண்டும் என்றாலோ, அதற்குத் தக்க சான்றுகளை நீதிமன்றத்தின் முன் வைத்து அவற்றை மெய்ப்பித்தல் வேண்டும்— குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் குற்றம் இழைத்தார் என்பதைக் காட்டுவதற்கு உரிய சான்றுகளைக் குற்றம் சாட்டியவர் நீதிமன்றத்தின் முன் வைக்கின்றார். ஏனெனில் குற்றம் சாட்டப்பட்டவர்தாம் குற்றம் இழைத்தார் என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு குற்றம்

சாட்டியவரைச் சேருகிறது. இவ்வாறு ஒன்றை மெய்ப்பிக்கும் பொறுப்பை 'மெய்ப்பிக்கும் பொறுப்பு' (Burden of proof) என்கிறோம் (மா. சண்முக. சுப்பிரமணயின், சட்டத்தமிழ், ப. 114).

இத்தகைய சட்டக்கூறு தடுத்தாட் கொண்ட புராணத்தில் இடம்பெற்றுள்ளதை உரையாசிரியர் விளக்குகிறார். 'ஆரூரர் தமக்கு அடிமை' என்று உரைத்த அந்தணரை நோக்கி அவையத்தார்,

> **இவ்வுலகின்கண் நீ இன்று இவரை உன் அடிமை என்ற**
> **வெவ்வுரை எம் முன்பு ஏற்ற வேண்டும் *(201)***

என்று உரைக்கின்றார்கள். இதற்கு உரை எழுதுகையில், "எம் முன்பு ஏற்ற வேண்டும் - எமது சபை முன்னர் நிரூபிக்கும் பொறுப்பு உம்முடைய பேரில் உள்ளது. Burden of proof என்பர் நவீனர்" என்று சட்ட நுட்பத்தைப் புலப்படுத்துகின்றார். இந்தச் சட்ட நுட்பத்தின்படி குற்றம் சாட்டி உரிமை கோரும் அந்தணரே சான்றினை மெய்ப்பிக்கும் பொறுப்பிற்கு உரியவராகிறார்.

### மனம் மயங்கிய நிலை

ஒருவர் இயல்பான உணர்வோடு ஒரு செயலைச் செய்வதற்கும், மனம் சற்று அசைந்த நிலையில் செயற்படுவதற்கும் வேறுபாடு உண்டு. ஒருவர் தாம் செய்வது அறியாத நிலையில் ஒரு செயலைச் செய்யும் போது, அப்போது அவரது மனநிலையைத் தற்காலிகப் பித்துநிலை 'Temporary Insanity' என்று கூறுவர். இந்த மனநிலை உணர்வுவயப்பட்ட நிலையில் குற்றம் புரிந்தவரின் தண்டனையைக் குறைப்பதற்காக வழக்குரைஞர்கள் தங்கள் வாதத்தில் பயன்படுத்தும் முக்கிய கருத்தாகும்.

சாக்கிய நாயனார் புராணப் பாடல் ஒன்றுக்கு உரைவகுக்கும் சிவக்கவிமணி, இக்கருத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

> **நீடோடு களியுவகை நிலைவரச் செயலறியார்**
> **பாடார்கல் கண்டதனைப் பதைப்போடும் எடுத்தெறிந்தார்**
> ***(3644)***

என்னும் பாடலுக்கு, "மனத்துட் கொண்ட நியமத்தின் உறைப்பினாலே கண்ட மாத்திரத்திலே நீண்டு செல்லும் பெருமகிழ்வாகிய நிலை கூடுதலால் அது சடுதியில் வரும் அழுந்திய மனநிலை, இவ்வாறு நல்ல நிலையும் உண்டு. தீமை பயக்கும் நிலைகளும் வருவதுண்டு. தீமை பற்றிச் சடுதியில் எழும் இந்நிலைகளின் மூலமே உலகர் இதனை அறிவர். (நன்னிலை

வரப்பெறும் பக்குவம் வேண்டும் அன்றோ?) இதனை Temporary Insanity என்று கொள்வது நவீன மருத்துவச் சட்ட தத்துவம்" என்று விளக்கியுள்ளார். சாக்கிய நாயனார் சிவலிங்கத்தைக் கண்டதும் மெய்ம்மறந்த நிலையில் கல்லால் எறிந்தது இத்தகைய நன்னிலை வரப்பெற்ற பக்குவத்தால் நிகழ்ந்தது என்பதையும் சிவக்கவிமணி உரைக்கக் காண்கிறோம்.

## சட்ட இயல் கருத்துகள்

பெரியபுராண உரை நெடுகிலும் சிவக்கவிமணி சட்ட இயல் கருத்துகளை (Juris Prudence) தொட்டுக் காட்டுகிறார். அவற்றுள் பின்வரும் இரண்டு பற்றிக் காண்போம்.

1. கருணைசேர் நீதி
2. செயத்தக்க செய்யாமை - குற்றம்

## கருணை சேர்நீதி

நீதி வழங்கும் அமைப்பும் அதன் உறுப்பாய் அமைந்திருப் போரும், நீதியை வழங்குமிடத்துச் சட்டநூற் கருத்துகளுடன் கருணையையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும் என்பது நீதிநெறிகளுக்கு எல்லாம் தலையாய நெறியாகும். இக்கருத்தினைச் சேக்கிழாரின் வாக்கினைக் கொண்டே சிவக்கவிமணி விளக்குகிறார்.

திருநாளைப்போவார் நாயனார் புராணத்தில், நாட்டு வருணனையாக அமைந்த பாடலில் இயற்கையில் நடைபெறும் நிகழ்ச்சியைச் சேக்கிழார் கவிதைக் காட்சியாக அமைத்துக் காட்டியுள்ளார்.

> **பாளைவிரி மணங் கமழும் பைங்காய் வன்குணத்தெங்கின்**
> **தாளதிரம் இசைமுட்டித் தடம் கிடங்கின் எழப்பாய்ந்த**
> **வாளைபுதையச் சொரிந்த பழமிதப்ப வண்பலவின்**
> **ஈளமுதர் கனிகிழிதேன் நீத்தத்தில் எழுந்து உகளும் (1044)**

இப்பாடலுக்கு உரை வகுக்கும்இடத்து, தன்னை முட்டியதால் சினந்த தென்னை, அவ்வாளை மீண்டும் கிளம்பி முட்டா வண்ணம் அதனைத் தண்டித்தலும் ஒதுக்குதலும் ஒருங்கே செய்யும் வகையில், தனது பழத்தினால் அதனைச் சாடிச் சேற்றினுள் அமிழ்த்தி வைத்தது என்றும், அவ்வாறு தண்டித்ததினால் அது ஊறு கொண்டு சாவா வண்ணம், அது தங்கும் இடமாகிய சேற்றினுள் தானே அதனை அடைத்தது என்றும் தற்குறிப்பேற்றமாக உரைப்பதை, Justice tempered with mercy என்று உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

இதையொத்த கருத்தினைத் திருநகரச் சிறப்புப் பகுதியிலும் சிவக்கவிமணி விளக்குகிறார். அப்பகுதியில் வரும்,

தனிப்பெருந் தருமம் தானோர்
தயாவின்றித் தானை மன்னன் (107)

என்னும் அடியில் வரும் 'தயாவின்றி' என்னும் சொல்லிற்கு உரைகாணும் சிவக்கவிமணி, அறக்கடவுள் 'தயை இன்றி' வந்தான் என்று கூறிவிட்டுத் 'நீதி தயையுடன் இயைந்து வருதல் (Justice with mercy) வேண்டும் என்பதைச் சுட்டுகிறார்.

## செயத்தக்க செய்யாமை குற்றம்

சட்டநெறியில் செய்யத்தக்கதைச் செய்யாமல் தவிர்ப்பதும், செய்யத்தகாததைச் செய்வதும் குற்றம் ஆகும். இக்கருத்தைத் திருக்குறள் (466) விளக்கியிருத்தல் காணலாம். இதனைச் சிவக்கவிமணி திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் வைத்து விளக்குகிறார்.

திருக்குறிப்புத் தொண்டர் கந்தையினை உரியவருக்கு உரியகாலத்தில் கொடுக்கும் பணியான தாம் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை. இதனைச்

செழுத்தவர்தம் திருமேனி குளிர்காணும் தீங்கிழைத்த
தொழும்பனேன்

என்று நாயனார் அழுது தெரிவிக்கிறார். இதற்குச் "செய்யத் தவறியதால் வந்த குற்றம் கந்தையினை உரிய காலத்தில் கொடாத குற்றம்" offence by ommission என்னும் விதி, என்பதை உரையாசிரியர் புலப்படுத்துகின்றார். சட்டங்களை விளக்கியிருக்கும் சிவக்கவிமணி சட்டநெறிகளையும் சட்டஇயல்களையும் தம் உரையில் சுட்டிக் காட்டியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

## ஆவணத்தின் வரையறை

நீதிமன்றத்தில் சான்றாகக் காட்டப்படும் ஆவணம் ஒன்றின் விவரங்களை இந்தியச் சான்றுச் சட்டம் விளக்குகின்றது. (மா. சண்முகசுப்பிரமணியன், சட்டத்தமிழ், ப. 111) இத்தகைய ஆவணம் ஒன்றின் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பெரியபுராணப் பாடல் அமைந்துள்ளது.

அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கு இவை என் எழுத்து
(205)

இன்றைய நாளில் எழுதப்படும் ஆவணத்திற்கு இப்பாடல் சான்றாக இருப்பதைச் சிவக்கவிமணி விளக்குகிறார். மேலும் ஆவணத்தில் இருக்க வேண்டிய சட்டமுறை ஒப்பங்களையும் அவர் விளக்குகிறார்.

'மேலெழுத்து இட்டார்கள்' - சாட்சிக்காகக் கையொப்ப மிட்டவர்கள் - எழுதிக் கொடுத்தவரின் வாசகத்திற்கு மேலே எழுதப்படுவதால் சாட்சி ஒப்பத்தை 'மேலெழுத்து' என்பது அந்நாள் வழங்கிய பெயர் (Attestation).

ஆசிலா எழுத்தை நோக்குதல் - பிற நிரூபங்களால் அவையேயாம் என்று துணிதல். இந்நாள் வழக்கில் இதனை Proof of attestation என்பர்.

தன் முன் எழுது வேறு கைச்சாத்து' - தானே தன் கைப்பட எழுதிய கையெழுத்து - Genuine and admitted signature and Handwriting என்பர் நவீனர்.

## அவையோரின் இயல்புகள்

நாட்டில் நல்லறம் தழைக்க நாடாளும் மன்னனும், நன்னெறி நிற்கும் சான்றோரும் தத்தம் நிலை பேணி நிற்றல் வேண்டும். நீதி மன்றங்களுக்குத் தலைமையேற்கும் அறவோரிடத்தே என்றும் மாறாத நல்லியல்புகள் வேண்டும். அப்போது தான் முறை வேண்டிச் செல்லும் மக்களுக்கு நீதி கிட்டும். இக்கருத்துகளைச் சிவக்கவிமணி திருநீலகண்ட நாயனார் புராணத்தில் வரும் பாடலில் 'திருந்து அவை' என்ற தொடரால் விளக்குகிறார். "திருந்தவை - சபை திருந்தி இருத்தலாவது ஒருபால் கோடிச் செல்லாமல் இருத்தல். அறிவினாலும் ஒழுக்கத்தாலும் நிறைந்தார் கூடிய சபை. ஒழுக்கம் நிறைந்தார் ஆதலின் தாம் அறிந்து பிழைபடச் செய்யார். துறைபோயினர் ஆதலின் அறியாமையினாலே பிழைபடச் செய்யார். ஆதலின் இருவகையாலும் பிழைபடாமல் திருந்திய சபை என்க" என்று உரை (முதற்றொகுதி, ப. 477) வகுப்பதைக் காணும் போது, அறங்கூறவையின் உறுப்பினர்கள் எவ்வழியிலும் பிழைபடச் செயலாற்றுதல் கூடாது என்பது வலியுறுத்தப் பட்டமை புலப்படக் காண்கிறோம்.

## சட்டநெறிகாணும் உரையே சரி

சமயநூலுக்கு உரைகாணும் ஒருவர் தத்துவ விளக்கத்தை விரித்து உரைக்கலாம்; சட்டநெறிகள் அந்நூலின் கண் அமைந்திருத்தலைத் தேடிக் காணுதல் சரியா என்னும் வினாவிற்கும் சிவக்கவிமணி விடையளித்துள்ளார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று நிறைவேற்றம் பெறுகிறது. வழக்கினை விசாரித்தோர் 'இனிச் செயலே இல்லை' என்கின்றனர். இதற்கு உரைவகுக்கும் போது,

" 'இனிச் செயலே இல்லை' - இவ்வழக்கு விசாரணையில் நீதி முறைப்படி இனி நாம் செய்ய வேண்டிய செயல் வேறு ஒன்றும் இல்லை. நீதியில் விதித்த எல்லாவகையாலும் தேர்ந்து முடித்தோம் என்றபடி. இவ்வழக்கு விசாரணையில் முன்னர்க் குறித்த எல்லாச் செயல்களையும் குறிப்பிட்ட படியாம். இவ்வாறன்றிச் 'செயல்' என்பதற்கு நம் செயல் ஒன்றுமில்லை, இனி எல்லாம் சிவன் செயலே என்று பொருளுரைப்பாருமுண்டு. அது பொருந்தாமை அறிக" (முதற் தொகுதி, ப. 237) என்று குறிப்பிடுகின்றார். இவ்வுரை சேக்கிழாரின் சட்டப்புலமை அமைந்திருக்கும் இடங்களில் அப்பாடல்களுக்கு அவ்வாறே பொருள் காணல்தான் பொருந்திய செயல் என்பதை வலியுறுத்துகின்றது. இதற்கு மாறாக உரைகாண்போரின் கூற்றினை மறுத்துக் கூறவும் இவர் தயங்கவில்லை என்பது சிறப்பிற்குரியது. தமிழரின் பண்பாட்டுக் கூறுகள் விளக்கம்பெற வேண்டிய இடங்களில் அவற்றை வெளிப்படுத்தத் தவற விடுவது தகுதியானது அன்று என்பதைச் சிவக்கவிமணி நிறுவுகிறார்.

## மனுநீதியின் மறுபக்கம்

ஒரு குலத்திற்கு ஒரு நீதியும் மற்றொரு குலத்திற்கு வேறு நீதியும் என்று மக்களைக் குலமுறையில் பிரித்து நீதி கூறும் நூல் மனுதருமம் ஆகும். எனவே தான், 'உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்திற்கு ஒரு நீதி' என்று பேராசிரியர் சுந்தரம்பிள்ளையும் கூறிச் சென்றார். பெரியபுராணத்தில் வரும் மனுநீதிச் சோழன், பசுக்கன்றைத் தேர்க்காலில் இட்டுக் கொன்ற தன் மகனுக்குக் கொலைத் தண்டனை வழங்கியுள்ளான். இச்செயல் மனுநீதியில் சொல்லப்பட்ட முறையா அன்றி பிறிதொன்றா என்று எண்ணிப்பார்க்கத் தோன்றுகிறது. இவ்வினாவைச் சிவக்கவிமணி தாமும் எழுப்பிப் புதிய விளக்கத்தைத் தந்துள்ளார்.

'மனுதருமம் என்று இக்காலத்தில் வழங்கப்படும் மனுநீதியை எழுதியவர் முனிவர். அவர் வகுத்த விதியில் பசுக்கொலைக்கு கொலைத்தண்டனை இல்லை. அதில் 'கழுவாய்' தேடிக் கொள்ளலாம். இதனை,

கொந்தலர்தார் மைந்தனைமுன் கோவதை செய்தார்க்கு மறை
அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம் என்றார். (119)

என்று சேக்கிழார் உரைக்கின்றார்.

எனவே மனு என்னும் பெயர் வடமொழியில் காணுமாறு முனிவரின் பெயர் அன்று அது சோழமன்னன் ஒருவனின் பெயராகவும் இருந்துள்ளது. அவன் நீதிமுறைகளை வகுத்தளித்தான். அம்மரபில் வந்தவனே இம்மனுவேந்தன் என்பதைச் சேக்கிழார்,

செற்ற நீக்கிய செம்மையில் மெய்ம்மனுப்
பெற்ற நீதியும் தன்பெய ராக்கினான் (100)

என்னும் பாடலில் அமைத்துக் காட்டி இருக்கும் தன்மையை, "கோபத்தை நீக்கிச் செம்மையினாலே உண்மையே உருவமாகிய ஆதிமனுச் சக்கரவர்த்தி பெற்ற மனுநீதி என்பதைத் தனது பெயராலே அமைந்ததாக ஆக்கிக் கொண்டான்" என்று சிவக்கவிமணி விளக்குகிறார்.

பசுக்கொலைக்கு வடமொழி 'ஸ்மிருதியில்' 'மாற்றுவகை' தான் கூறப்பட்டுள்ளது. இம் மனுவேந்தன் அதனைப் பின்பற்றாது "பசுவின் துயரை ஆற்ற மாட்டாத நான், அத்துயரை யானும் தாங்கிப் பங்கிட்டுக் கொண்டு அதன் துன்பத்தைக் குறைப்பேன் எனத் துணிந்தான்" என்று சிவக்கவிமணி கூறுவதினால் இம்மனுவேந்தன் இயற்கை நீதியைப் பின்பற்றியமை தெரிய வருகிறது.

எனவே,

ஒரு மைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடன்என்றுதன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ? மற்றுஎளிதோ? தான் (129)

என்னும் பாடலில் காணுமாறு நீதி வழங்கினான். நீதி வழுவா நெறிமுறையில் தமிழ் மன்னர்கள் சிறந்து விளங்கினர் என்பதற்கு சோழன் மனுவேந்தனின் இச்செயலே சான்றாகும்.

இதனால் 'சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பெரியபுராணத்திற்கு மிக விரிவாக உரை எழுதியுள்ளார். இவர் உரை காலத்தை வென்று நிலை பெறும்' என்று மு.வை. அரவிந்தன் கூறுவது (உரையாசிரியர்கள், ப. 590) முற்றிலும் பொருந்துவதாகும்.

இதுகாறும் பெரியபுராணத்திற்கு விரிவான உரைகண்ட சி.கே.சுப்பிரமணிய முதலியாரின் பல்துறைப்புலமைக்குச் சான்று காணப்பட்டது; இலக்கிய உரையில் சட்டப்புலமை வெளிப்படுவது மரபு என்பது நிறுவப்பட்டது; 'சட்டப்புலமை' என்பது என்ன வரையறையில் இங்கு ஆளப்பட்டது என்பது புலப்படுத்தப்பட்டது. சட்டங்களின் வகைப்பாடு விளக்கப்பெற்று, அவை ஒவ்வொன்றும் உரையில் இடம் பெற்றிருக்கும் முறைக்கு எடுத்துக்காட்டுகள் கொடுக்கப்பட்டன. 'சட்டஇயல்' கருத்துகள் இடம் பெற்றிருக்கும் உரைப்பகுதியும் விளக்கப்பட்டது. ஆவணத்தின் வரையறை எடுத்துக்காட்டப்பெற்றது. அவையோரின் இயல்புகள் சுட்டிக் காட்டப்பட்டன. 'சட்டநெறிகாணும் உரையே சரி' என்னும் கொள்கை நிறுவப்பட்டது. 'மனு' என்னும் சொல் சோழமன்னரில் முன் தோன்றிய மன்னன் ஒருவனைக் குறிக்கும் என்பதை உரையாசிரியர் வழி விளக்கப்பட்டது.

எனவே சிவக்கவிமணியின் உரையை,

**என்என்கோ, குன்றைமுனி கவிநயம்காண் கோவைமுனி**<br>
**உரையகலத்து இயல்பை மன்னோ**

என்று ச.ஆ. இரத்தினவேற் புலவர் வியந்த வண்ணம் (நான்காம் தொகுதி உரை, ப. 16) போற்றுவதே பொருந்திய செயலாம்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100 | 50.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| நாடகவியல் | 70.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

Pub.No.498 **சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்** 35.00